பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை (01.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 340



09
பாரதவின் கொலை தொடர்பான அறிக்கை



21
இலங்கையில் அடுத்த பொதுநலவாய மாநாடு



25
பலமான நிலையில் மேற்கிந்தியத் தீவுகள்

# கொய்து வீசப்பட்டது தந்தை செல்வா தலை

## திருமலையில் சம்பவம்; தமிழர்கள் அதிர்ச்சி, கொந்தளிப்பு



திருகோணமலை, நவம்பர் 1

தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்காகப் பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் சாத்வீக வழியில் துணிச்சலுடன் போராடிய மாபெரும் தமிழ்த் தலைவர் தந்தை செல்வாவின் நினைவுச்சிலையின் தலைப்பகுதி காடையர் கும்பலொன்றால் கொய்யப்பட்டு அவரது காலடியில் போடப்பட்டது. அதற்கு மலர் மாலை இட்டு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படவேண்டுமென உலக நாடுகள் வலியுறுத்திவரும் நிலையில், திருகோணமலையில் இரவோடிரவாக அரங்கேறிய இந்தக் காடைத்தனமான - காட்டுமிராண்டித்தனமான சம்பவத்தால் தமிழ்மக்கள் அதிர்ச்சி - அதிருப்தி - ஆத்திரம் அடைந்துள்ளனர்.

திருகோணமலை நகரிலுள்ள சிவன் கோயிலுக்கருகில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவாலயத்திலேயே விஷமிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இந்த வெறியாட்டத்தை ஆடியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் தந்தை செல்வா நாயகத்தின் சிலையை தமிழீழ மக்கள் விடுதலை கழகச் செயலாளர் அமரர் உமா மகேஸ்வரனின் ஆறாவது நினைவு தினத்தன்று அவரது கட்சி திருமலை மாவட்டப் பொறுப்பாளர் ம.செல்லக்கிளி 1995.07.16ஆம் திகதி திறந்துவைத்தார்.

பல்லினச் சமூகமும் பரந்துவாழும் திருகோணமலையில் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதானது அங்கு வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த தன்மானத் தமிழ்த் தலைவன் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்குத் தன்மானமற்ற காடையர்கள் புரிந்துள்ள கொடூரமானது ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று அரசியல் தலைவர்கள்

பக் 27

## தமிழ் மக்களுக்குச் சுதந்திரம்; கனேடியப் பிரதமர் நடவடிக்கை

### அந்நாட்டு தமிழ் எம்.பி. ராதிகா தெரிவிப்பு

ரொறன்டோ,நவ.1

இலங்கையில் தமிழ் மக்களுக்கு மனித உரிமையும் சுதந்திரமும் கிடைப்பதற்கு கனேடியப் பிரதமரும், வெளிநாட்டு அமைச்சரும் தற்போது தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர் - என்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஸ்காபுறோ நகரிலுள்ள ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோரை வரவேற்றுப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

பல்வேறு இன மக்களும் சேர்ந்து என்னை தமது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்த தொகுதிக்கு வந்துள்ள உங்களை (தமிழ்க் கூட்டமைப்பினரை) வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடை.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் செயல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என நான் எதிர்க்கட்சியில் இருந்து கனடா அரசுக்கு வலியுறுத்தி வருகின்றேன்.

பக் 27

## பாண் விலை அதிகரிக்கும்

கொழும்பு, நவ.1

எரிபொருள்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை அடுத்து பாண் உட்பட அனைத்து பேக்கரி உற்பத்தி பொருள்களினதும்

பக் 28

## கிளிநொச்சியில் நடைபெறவிருந்த கல்விப் பணிப்பாளருக்கான பிரிவுபசாரம் தடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.1

கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் தம்பிராசா குருகுலராஜாவுக்கு சேவை நயப்பு விழாவும், பிரிவுபசார விழாவும் நேற்று நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் மேலிடத்து உத்தரவு ஒன்றின் பேரில் அந்த நிகழ்வு நிறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்று நடைபெறவிருந்த முன்னாள் கல்விப் பணிப்பாளருக்கான பிரிவுபசார விழாவை கிளிநொச்சி வலய ஆசிரியர்கள், அதிபர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்த விழாவை நடத்த ஏற்பாடுகள் பூர்த்தியாகியிருந்தன. இந்த நிலையில் சிலரின் அத்துமீறல் காரணமாக இந்த விழா தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கிளிநொச்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அலுவலகத்துக்கு கிளிநொச்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் நேற்று அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் எதிர்காலத்தில் எந்தவிதமான விழாக்களாக இருந்தாலும் சரி தமக்கு அறிவிக்கப்பட வேண்டும். விழாக்களுக்கு அழைக்கப்படும் விருந்தினர்கள் பற்றிய விவரங்கள் எமக்குத் தெரியப்படுத்தல் வேண்டும் என்று எச்சரிக்கைத் தொனியில் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

பாடசாலைகளை நடத்துவதற்கு கல்வி வலயங்கள் அதற்கு மேல் கல்வித் திணைக்களங்கள் இருக்கும் நிலையில் கட்சிக்காரர்கள் தலையிடவேண்டிய அவசியம் ஏதுமில்லை. அவர்கள் இந்த விடயங்களில் தலையிடக்கூடாது தலையிடுவது கண்டிக்கத்தக்கது என்று கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்தனர். விழா தடுத்து நிறுத்தப்பட்டமை தொடர்பாக கிளிநொச்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். முருகவே

பக் 27

## தீர்வை வழங்கவிடாது இந்தியா முட்டுக்கட்டை

### புதுடில்லியின் கட்டுப்பாட்டில் இலங்கை என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ.1

இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்க விடாமல் இலங்கை அரசை இந்தியா கட்டுப்படுத்தி வருகிறது எனக் குற்றம்சாட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பாக வெளிநாடுகளுடன் பேச்சு நடத்தாமல், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட உள்நாட்டு அரசியல் கட்சிகளுடனும் பேச்சுநடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

அமெரிக்கா சென்று அந்நாட்டு அதிகாரிகள் சிலருடன் பேச்சு நடத்தியுள்ள தமிழத் தேசி

பக் 27

## கிளிநொச்சியில் தொடர் கொள்ளை

### ஆயுத வேட்டையின் பேரில் கைவரிசை

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி கணகபுரம் பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் சீவரத்தினம் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் ஆயுதங்களுடன் வந்த கும்பல் 15 பவுண் நகை மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. இது குறித்து கிளிநொச்சிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் இரு நாள்களில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவம் இதுவாகும். மோட்டார் சைக்கிளில் வந்த 7 பேர் கும்பல், 'விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் வீட்டில்

பக் 27

## தமிழருக்கு தீர்வை வழங்க அரசை நெருக்குகின்றது சர்வதேச சமூகம்

### கனடாவில் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.1

இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க வேண்டிய கட்டாய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை வழங்குமாறு சர்வதேசம் இலங்கைக்கு நெருக்கடி கொடுத்து வருகிறது. இதை நாம் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களில் சகல உரிமைகளுடன் வாழும் நிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்."

- இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கனடாவில் தெரிவித்தார்.

கனடாவின் ஸ்காபுறோ நகரிலுள்ள ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி நாம் பேசுகின்றபோது, அங்கு வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் உரிமைகள்

27 பக்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்திப்பிரிவுகள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய காலநிலை நிலவும் சாத்தியம்

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஐப்பசி 31 2011

பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,319.25↓
மிலங்கா(MPI) 5,631.28↓

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,387.07Mn
பங்குகளின் அளவு(No.) 82.13Mn
வியாபாரம்(No.) 11,036

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
யூனியன் கெமிக்கல் 899.90
கண்டி ஹொட்டல் 227.90
இன்ரிரா எம்க்ஷர் 109.10
மடுசீமா 16.90
டோக்கியோ சிமெண்ட் 45.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
பீப்பிள் மேச்சன்(r) 0.50
செலான் மேச்சன்(w) 0.10
பிம்புத் லங்கா 44.30
ஹேய்லிஜ் 145.50
சிலோன் பிரேவரி 380.50

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துவது ஜனாதிபதியின் கையில்

கொழும்பு, நவ.,1

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தயாராகி விட்டது என்றும், அடுத்த பதினைந்து நாள்களுக்குள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப் படுமென்றும் அதனைப் பகிரங்கப் படுத்துவதா? இல்லையா? என்பதை அவரே தீர்மானிப்பார் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நவம்பர் பதினைந்து என்னும் காலக்கெடுவுக்கு முன்னதாகவே குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று குழுவின் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

''அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க நாங்கள் தயாராகிவருகிறோம். தெளிவான காலவரையறை என்று ஒன்று இல்லாத போதும் நவம்பர் இரண்டாவது வாரத்தில் அறிக்கை கையளிக்கப் பட்டுவிடும். விசாரணை செய்து அறிக்கை தயாரித்து அதனை ஜனாதிபதியிடம் கொடுப்பதே எமக்கு இடப்பட்ட கட்டளை. அறிக்கையை வெளியிடுவதா? இல்லையா? என்பது முழுக்க முழுக்க ஜனாதிபதி சார்ந்தது.'' என்று விக்கிரமசிங்க கூறினார்.

வாய்மூல சாட்சியங்கள் ஆயிரமும், எழுத்து மூலம் சமர்ப்பிக் கப்பட்ட சாட்சியங்கள் ஐயாயிரமும் ஆணைக் குழுவுக்குக் கிடைத்ததாகவும் அவை பல தரப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து கிடைத்ததாகவும் வடக்குக் கிழக்கு மக்களுக்குத் தாம் கூடுதல் சந்தர்ப்பம் வழங்கிய தாகவும் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை ஆணைக் குழுவின் அறிக்கை பகிரங்கப் படுத்தப்படமாட்டாது என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. (உ-10)

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் நாளை புதன்கிழமை, 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை காரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

ஆஸ்திரேலிய விஜயத்தை நிறைவு செய்து கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நள்ளிரவு நாடு திரும்பினார்.

பொதுநல வாய நாடுகளின் 22 அரச தலைவர்களது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி, கடந்த 24 ஆம் திகதி பேர்த் நகருக்கு சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் 30 இற்கு மேற்பட்ட கடைகளுக்கு சீல் வைப்பு

### லட்சக் கணக்கான நுகர்வோர் பாதிப்பு

சென்னை,நவ.1

சென்னையில் உயர் நீதிமன்றத்தின் அதிரடி நடவடிக்கையால் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட பிரபல்யமான 30 இற்கு மேற்பட்ட கடைகள் மூடப்பட்டன

மிகப்பிரபல்யமான கடைகளில் சரவணாஸ்ஸ்ரோர்ஸ், ஜெயச்சந்திரன் ரெக்ஸ்ரைல், சென்னை சில்க்ஸ், காதிம்ஸ், குமரன்ஸ் உட்பட 30 இற்கு மேற்பட்ட கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையால் ஏனைய கடை உரிமையாளர்களும் தமது கடைகளை மூடிவிட்டதால் பொருள்கள் வாங்க வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

ஒரு நாளில் லட்சக்கணக்கான மக்கள் இந்தக் கடைகள் அமைந்த ரீ நகர் பகுதிக்கு வந்து பொருள்களை வாங்கிச் செல்வார்கள்.

இதனால் ரங்கநாதன் வீதி தேர்த்திருவிழா போல கூட்ட நெரிசலில் சிக்கித் தவிக்கும்

அத்துடன் இலங்கை தமிழர்கள் உட்பட நடிகர், நடிகைகள் புதுப்படசூட்டிங் ஆரம்பிக்கும் போதும் இந்தக் கடைகளுக்கு வந்து தமக்கு தேவையான பொருள்களை வாங்கிச் செல்வது வழக்கம்.

இது தொடர்பாக இன்று கடை உரிமையாளர்கள் முதல்வரை சந்திக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

# தலைக்கவசம், ஆவணங்கள் இன்றி மோ.சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

### 9,500 ரூபா செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

தென்மராட்சி,நவ.1

மோட்டார் வாகனம் செலுத்துவதற்குரிய ஆவணங்கள் மற்றும் தலைக்கவசம் ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரத்து 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் பருத்தித்துறை கிராமக் கோட்டில் வாசிக்கு எதிராக காப்புறுதி, வாகனவரி, சாரதிய அனுமதிப்பத்திரம் ஆகியவை இல்லாமலும் தலைக்கவசமின்றியும் மோட்டார் சைக்கிள் செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

வழக்கை விசாரித்த நீதிவான் மா. கணேசராஜா எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நான்கு குற்றங்களுக்குமாக 9 ஆயிரத்த 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதாரண சிறை தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை சாவகச்சேரி நகர் பகுதியில் சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் வீதியோரங்களில் குப்பை கொட்டிய மூவருக்கு நீதிமன்றில் தலா 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 500 ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-207)

## குற்றச் செயல்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். நகரப் பகுதியில் மது போதையில் நடைபாதைக்கு இடையூறாகச் செயற்பட்டு வந்த குற்றத்துக்காக தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் யாழ். நீதிமன்றில் இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

இடையூறாகச் செயற்பட்டு வந்த இவருக்கு எதிராக யாழ். பொலிஸார் வழக்குப் பதிவு செய்து யாழ். மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

* * *

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற குற்றத்துக்காக இரண்டு பேர் யாழ். நீதிமன்றில் ஏழாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாழ். நகர் பாங்சால் வீதியில் இவ்வாறு சாராயம் விற்பனை செய்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்து மேலதிக நீதிவான் அபிறேம்சங்கர் முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தினர்.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மேலதிக நீதிவான் நாலாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். இதேகுற்றச்சாட்டில் கொக்குவில் பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரது இணைத் தலைமையில் இது நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றுவதற்கு யாழ். மாவட்டத்தில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சகல திணைக்களங்களின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றவுள்ளனர் - என்றார். (த-15)

# நிகழ்வுகள்

**பரிசளிப்பு விழா**

வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று முற்பகல் 11 மணிக்கு சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ஞாபகார்த்த பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் எல். இளங்கோவன் கலந்து கொள்வார். (ஓ-313)

**முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி**

யாழ். மாநகரசபை முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

**இசைக் கச்சேரி**

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு நல்லூர் கோயில் சூழலில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசைக் கச்சேரி வரிசையில் இன்று மாலை 4.30 மணிக்கு கே. நக்கீரனின் புல்லாங்குழல் இசை இடம்பெறும். (ஓ-323)

# உலக சனத்தொகை ஏழு பில்லியனை எட்டும்போது இலங்கையில் பிறந்த முதல் குழந்தை 'முதுமாலி'



கொழும்பு, நவ.,1

உலக சனத்தொகை ஏழு பில்லியன் என்ற இலக்கை அடைந்த தினம் இலங்கையிலும் கொண்டாடப்பட்டது.

கொழும்பு காஸ்ரல் வீதியில் உள்ள மருத்துவமனையில் அதிகாலை 12.01 மணிக்குப் பிறந்த குழந்தை இந்த இலக்கை இலங்கையில் அடைந்த குழந்தை என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

23 வயதான டினுஷிகா டிலானி என்ற பெண்ணுக்குப் பிறந்த குழந்தையே இலங்கையில் ஏழு பில்லியன் சனத்தொகை என்ற இலக்கை எட்டும்போது பிறந்த குழந்தை என அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைக்கு 'முதுமாலி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதேவேளை சனத்தொகை கட்டுப்பாடு குறித்து மக்களுக்கு விளிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஐ.நா. புதிய இணையத்தளமொன்றை ஆரம்பித்துள்ளது.

''ஏழு பில்லியனும் நானும்'' என்னும் கருப்பொருளில் (www.7billionand-me.org) இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்தில் ஒருவர் தான் பிறந்த நாளில் உலகம் முழுவதும் எத்தனை பேர் வாழ்ந்தார்கள்?, தான் பிறப்பதற்கு முன்னர் எத்தனை பேர் வாழ்ந்தார்கள்?, உலக சனத்தொகை ஐந்து பில்லியன் ஆக இருக்கும்போது, ஆறு பில்லியன் ஆக இருக்கும்போது அவருடைய வயது என்ன?, உலக சனத்தொகை எட்டு பில்லியனாக இருக்கும்போது ஒன்பது பில்லியனாக இருக்கும்போது அந்த நபருடைய வயது என்ன? என்ற பல விடயங்களை அறிந்து கொள்ள முடியும்.

இதற்காக ஒருவர் இந்த இணையத்தளத்தில் தான் பிறந்த திகதி, இடம், பால் நிலை, வயது மற்றும் தற்போதைய முகவரி என்பவற்றைப் பதிவு செய்தால் முழுவதையும் அறிந்துவிடலாம்.

(உ-10)

# அமெரிக்கா சென்ற கூட்டமைப்பை பழிவாங்கவே செல்வா சிலை உடைப்பு

## சரவணபவன் எம்.பி. ஆவேசம்

யாழ்ப்பாணம், நவ.1

தமிழ் மக்களைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்ற தந்தை செல்வாவின் கூற்றை அவரின் சிலையை உடைத்த தன் மூலம் நிரூபித்து விட்டிருக்கின்றனர். நல்லிணக்கம், சுகவாழ்வு பற்றி வாய்கிழியப் பேசும் அரசு இப்படித்தான்அவற்றைச் செய்யப்போகிறதா? தமிழ்க் கூட்டமைப்பு அமெரிக்காவுக்குச் சென்று பேச்சு நடத்திவரும் சூழ்நிலையில் அதற்குப் பழிதீர்க்கும் வகையில்தான் செல்வா சிலை உடைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு நேற்று குற்றஞ்சாட்டினார் தமிழ்தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தந்தை செல்வாவின் சிலை திருகோணமலையில் உடைக்கப்பட்டது குறித்து நேற்று அவர் அறிக்கையொன்றை விடுத்தார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்றவுடன் நான் பெரும் அதிர்ச்சியுற்றேன்; கவலையடைந்தேன். திருமலையில் தமிழரின் தனித்துவம் சூட்சுமமாக அழித்தொழிக்கப்பட்டுவரும் ஒரு நிலையில் இந்தச் சிலை உடைப்பு விடயத்தை ஒரு சிறிய விடயமாகக் கருதிவிடமுடியாது.

தேசிய நல்லிணக்கம், சகவாழ்வு என்பன பற்றி சர்வதேசத்திடம் கூறுபவர்கள் இப்படித்தான் அதனை ஏற்படுத்தப் போகின்றனரா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எமது எம்.பிக்கள் அமெரிக்காவுக்குச் சென்று தமிழரின் பிரச்சினைகளை சர்வதேசத்திடம் எடுத்துரைத்துவரும் நிலையில், இந்தச் சிலை உடைப்பானது அதற்குப் பழிவாங்கும் செயற்பாடுதானா என்று கேள்வியெழுப்ப விரும்புகின்றேன்.

இந்த விடயத்தை இலேசான விடயமாகத் தமிழர்கள் கருதவில்லை. சர்வதேச சமூகமும் இதனை அப்படிக் கருதக்கூடாது என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இது தமிழருக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானம் என்பதால் இதை நாங்கள் சும்மா விட்டுவிடப்போவதில்லை.

- என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் ஈ.சரவணபவன்எம்.பி. (உ-சி)

# தமிழரசுக் கட்சி அதிர்ச்சி

யாழ்ப்பாணம், நவ.1

கடந்த பல வருடங்களாக திருகோணமலை நகரில் காட்சிதந்த தமிழ் பேசும் மக்களின் தலைவரான தந்தை செல்வாவின் உருவச் சிலையின் தலை நேற்றிரவு கொய்யப்பட்டு, அவரது பாதத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டதை இட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம் என்று தமிழரசுக்கட்சி தெரிவித்துள்ளது.

அற வழி நின்று தமிழ் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை எவரையும் புண்படுத்தாது 'வாழு வாழவிடு' என்ற கோட்பாட்டில் தனது அரசியல் பயணத்தை முன்னெடுத்துச் சென்றவர் தந்தை செல்வா என்று கட்சியின் துணைத் தலைவர் நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

''சாத்வீக வாதியாகிய இவர் அகிம்சா மூர்த்தியும் கூட. இத்தகைய பாங்குடைய ஒருவரது சிலையை வன்முறையாளர்கள் தாக்கியமை கண்டிக்கத்தக்கது. அவரது சிலையும் பாதுகாக்கப்படவேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. மாறாக இந்த செயல்கள் மூலம் இந்த நாட்டில் இனங்களுக்கிடையே நிலவும் நல்லுறவு சீர்குலையும் என நாம் எதிர்வு கூறுகிறோம்.இத்தகைய செயல்கள் மேலும் நடைபெறாதிருக்கச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அரசு முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்'' என்று அந்த அறிக்கையில் பேராசிரியர்; சி.க. சிற்றம்பலம் மேலும் கூறிஉள்ளார்.

(உ)

# இடியுடன் கூடிய மழை வடக்கு - கிழக்கில் தொடரும்

## கடல் கொந்தழிப்பும் காணப்படும்

யாழ்ப்பாணம்,நவ.1

தற்போது இடைப்பருவகால மழை வீழ்ச்சி தொடருகிறது. வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்கள் மற்றும் சில இடங்களில் இன்று செவ்வாய்க்கிழமை காலை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இதன்போது தற்காலிகமாக கடும் காற்று வீசும். சேதங்களைக் குறைக்கப் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை அல்லது இரவில் அனேகமான மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பிருக்கிறது. சில இடங்களில் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகலாம். நாட்டைச் சூழவுள்ள கடற்பகுதியில் கொந்தளிப்புக் காணப்படும்.

தென்கிழக்கு, தெற்கு கடற் பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் ஏனைய கடற் பிரதேசங்களில் ஓரளவு மழை பெய்யும் வாய்ப்புள்ளது. வடகிழக்குத் திசையில் மணிக்கு 30 தொடக்கம் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும்.

நேற்று முன்தினம் காலை 8.30 தொடக்கம் நேற்றுக் காலை 8.30 மணிவரை அதிக மழைவீழ்ச்சி நீர்கொழும்பில் 15 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது. என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(சு-4)

அரியாலை விவசாய சம்மேளனம்
முக்கிய அறிவித்தல்

அரியாலை விவசாய சம்மேளனத்தின் பிரதேசத்திற்குட்பட்ட நெற் செய்கையாளருக்கான இரண்டாம்கட்ட உர விநியோகம் வெள்ளிக்கிழமை 4.11.2011 ஆம் திகதியிலிருந்து கமநல அபிவிருத்தித்திணைக்களத்தின் திருநெல்வேலிக் களஞ்சியசாலையில் இடம்பெறும்.

காலந் தாழ்த்தாது உங்களுக்குரிய உரத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர்

வடமராட்சி மக்களின் நலன் கருதி..

வடமராட்சி மக்களின் நலன் கருதி
உதயனின் கிளைக் காரியாலயம்
நெல்லியடி HNB வங்கிக்கு அருகில்
உள்ள மேல்மாடியில் இயங்கி
வருகின்றது என்பதை எமது வாசகர்கள்,
விளம்பரதாரர்கள் அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.

காலை 8.30 மணியில் இருந்து
மாலை 6 மணிவரை உங்கள் தேவைகளை
நிறைவேற்ற நாம் காத்திருக்கின்றோம்.

பொது முகாமையாளர் :
உதயன்

# சிலையாக நிற்பதற்குக் கூட தமிழருக்கு உரிமை இல்லை

## சிவாஜிலிங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.1

சிலையாக நிற்பதற்குக் கூட தமிழர்களுக்கு உரிமை இல்லை என்பதையே சர்வதேசத்துக்கு திருகோணமலை சிலைத் தகர்ப்பு காட்டி நிற்கின்றது - என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

தந்தை செல்வாவின் உருவச் சிலையின் தலை நேற்று நள்ளிரவு திருகோணமலை சிவன் கோயிலடியில் துண்டிக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இராணுவக் காவலரணுக்கு அருகில் உள்ள தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் ஒரு சிங்கள இனவெறி நடவடிக்கை. இது அரச ஆதரவுடன்தான் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தமிழ் இனத்தை அச்சுறுத்த முடியாது - என்றுள்ளது.

(ஒ-சி)

# பேரினவாதப் போக்கின் கடைசி வெளிப்பாடே சிலை உடைப்பு

## மனோ கணேசன் சாடல்

கொழும்பு, நவ.1

பேரினவாதப் போக்கின் கடைசி வெளிப்பாடுதான் திருகோணமலையில் தந்தை செல்வா சிலையின் தலை உடைக்கப்பட்ட சம்பவம். இது ஒரு காட்டுமிராண்டித் தனமான செயலாகும் - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வடகிழக்கில் சமீபகாலமாக திட்டமிட்ட வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழினத்தின் அனைத்து பரிமாணங்களையும் அழிக்கும் முயற்சிகளை இந்த அரசு நேரடியாகவும், மறைமுகமாகவும் தூண்டிவிடுகின்றது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

திருகோணமலை நகரிலுள்ள தந்தை செல்வாவின் சிலையின் தலைப்பகுதி நேற்று இரவு உடைத்து சேதமாக்கப்பட்டிருப்பதாக திருகோணமலையிலிருந்து வருகின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசின் முழுமையான நிர்வாகத்திற்குள்ளிருக்கும் நகரில் நடத்தப்பட்டுள்ள இந்த காட்டுமிராண்டித்தனமான செயல் எம்மை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருக்கின்ற தமிழர்களின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார அடையாளங்கள் அனைத்தையும் அழிக்கும் பேரினவாத நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்- என்றுள்ளது.

(ஒ-சி)

# மாற்று மதத்தினருக்கு இடையூறின்றி குர்பானை நிறைவேற்றுங்கள் - பைஸர்

கொழும்பு, நவ. 1

ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடு, மாடுகளை அறுத்து குர்பான் கொடுக்க விரும்பும் முஸ்லிம்கள், மாற்று மதத்த வர்களுக்கு எதுவித இடையூறுகளையும் ஏற்படுத்தாது இஸ்லாமிய சட்டத்தின்படி அதை நிறைவேற்றவேண்டும் என்று பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் நேற்று ஊடகவியலாளர்களை அவரது அமைச்சில் சந்தித்து உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஒவ்வொரு வருடமும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு குர்பான் கொடுக்கப்படுகின்றபோது சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டுமென்றால் இஸ்லாமிய முறைப்படி குர்பான் கொடுத்தல் வேண்டும்.

குறிப்பாக மாற்று மதத்தினருக்குத் தொல்லைகள் ஏற்படும் விதத்தில் ஆடு, மாடுகளைப் பொது இடங்களில் வைத்து அறுத்தல், அதன் கழிவுகளைப் பொது இடங்களில் வீசிவிடுதல், ஆடு, மாடுகளை சட்டவிரோதமாக எடுத்துச் செல்லுதல் போன்ற விடயங்களால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

உரிய ஆவணங்களின்றி சட்டவிரோத மான முறையில் ஆடு, மாடுகள் எடுத்துச் செல்லப்படுவது தடைசெய்யப்பட வேண்டும்.

குர்பான் கொடுப்பதை மாற்று மதத் தவர்கள் எவரும் வெறுப்பதில்லை. குர்பான் கொடுக்கும் முறையைத்தான் எதிர்க்கின்றனர். இஸ்லாமிய முறைப்படி குர்பான் கொடுத்தால் இந்தப் பிரச்சினை எதுவும் ஏற்படாது.

மாற்று மதத்தவர்களின் உணர்வு களுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். அப்போதுதான் மாற்று மதத்தவர்களும் முஸ்லிம்களின் மார்க்க உணர்வுகளை மதிப்பார்கள்.

குர்பான் கொடுத்தலின்போது எது வித சிக்கலும் ஏற்படக்கூடாது என்று எமது அரசு விரும்புகின்றது. இந்த விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அதிக கவனம் செலுத்தி வருகின்றார் - என்றார். (ஒ-சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
பரணிகரன் அவர்களின் அன்புத் தந்தை
**சின்னப்பா இராசரெத்தினம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பூநகரி.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும்
ச.ஹரிதாஸ் அவர்களின் தந்தை
**தம்பு சண்முகசுந்தரம்** அவர்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
ஊழியர் நலன்புரி கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
யூட் செல்வகுமார்
அவர்களின்
அன்புப் புதல்வியும், எமது ஆருயிர் நண்பன் செல்வன் நிலோஜன்
அவர்களின் அன்புச் சகோதரியுமான
**செல்வி பிறெய்சி கரோலின்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### செல்லையா திருநாவுக்கரசு



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், காரைநகர், சத்திரந்தை களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு நேற்று (31.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தெய்வானை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்புச் சகோதரனும் மற்றும் பொன்மலர், சிவகுமாரன், சிவபாலன், சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராஜா, விக்கினேஸ்வரி, புஸ்பமலர், சிவசோதி ஆகியோரின் மாமனும், கிரிதரன், விநோதினி, நிரோசன், சர்வணன், நவநீதன், லக்சனா, சுகன்ஜா, துவாகரன், கீர்த்திகா, சாருஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் (செம்பாடு தங்கோடை, காரைநகர்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகள், மருமக்கள்.
செம்பாடு தங்கோடை,
காரைநகர்.

## தூக்கில் தொங்கியவாறு நவாலியில் பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், நவ. 1

நவாலியில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரின் சடலம் நேற்றுத் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நவாலி தெற்கு, மானிப்பாயில் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது. மரணமானவர் அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் பாமினி (வயது-37) என்பவர் ஆவார்.

(ஓ-4-323)

## பாணந்துறையில் கந்தன் வீதிவலம்

பாணந்துறை கந்தசுவாமி கோயிலில் இன்று பிற்பகல் சூரன் போரும், நாளை காலை பாறணை, மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவத்தைத் தொடர்ந்து சுவாமி வீதிவலமும் இடம் பெறும். (ஒ)

### தந்து உதவவும்

யாழ். கோட்டை முனியப்பர் கோயில் சுற்றாடலில் தாலிக்கொடி ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்) **0779004260**

### பணிப்பெண் தேவை

எதிர்வரும் புதன்கிழமை பணியை ஆரம்பிப் பதற்கேற்ற வகையில் 20இற்கும் 22 வயதுக்கும் உட்பட்ட வீட்டுப்பணிகளை செவ்வனே செய்யக்கூடிய ஒரு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு: **0779564407**

### தவறிவிட்டது

வேலாயுதபிள்ளை சிறிகாந்தன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை (BOC) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று கடந்த 28.10.2011 அன்று பி.ப. 3.00 மணியளவில் யாழிலிருந்து மன்னார் நோக்கி பேருந்து பயணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**T.P. No.: 0775078856, 0773650058**

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தெய்வேந்திரராசா



உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், தம்பு வத்தை ஒழுங்கை, ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தெய்வேந்திரராசா நேற்று (31.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- நல்லம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், சதீஸ்குமார், சோபனா (சுவிஸ்), சோபிதா (மாவட்ட செயலகம், வவுனியா), சோமிலா (லண்டன்), வசிகரன் (லண்டன்), சோபா (ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன், மகேந்திரராசன், வினோதினி ஆகியோரின் அன்பு மாமனும், தனுஷாந், லக்ஷிகா, யதுராம், பவதனன், ஜனந்தன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தங்கமலர் மற்றும் பாலசிங்கம், காலஞ்சென்ற நடராஜபிள்ளை மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர், நிறைந்தன் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி சு.மலர்விழி
அவர்களின் பாசமிகு தந்தை
**சின்னப்பா இராசரெத்தினம்**
அவர்கள் 29.10.2011 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய முன்னாள் பரிபாலகரும் எனது மாமாவுமாகிய
**இராமநாதர் சம்பந்தநாதர்**
தமது 96 ஆவது வயதினிலே (29.10.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அவரது ஆன்மா நீராவிப் பிள்ளையார் திருப்பாதங்களில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

வை. இரகுநாத முதலியார்,
ஆலய நம்பிக்கை பொறுப்பாளர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்
யூட் அவர்களின்
பாசமிகு இளைய மகள்
**பிறெய்சி கரோலின்**
இறைபதம் எய்தியமையை அறிந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

287/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

செல்வராஜா (மாமா)
திருமதி. செல்வராஜா (மாமி)
திஷான், திஷானி (மச்சான், மச்சாள்)

## யா/யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்

### பழைய மாணவர் சங்கம்

### பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் 10.11.2011 ஆம் திகதி வியாழக் கிழமை (போயா தினம்) மு.ப. 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல பழைய மாணவர்களது முகவரிகளும் தெரியாத காரணத்தால் இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று கல்லூரியின் பழைய மாணவர்கள் சகலரையும் இக்கூட்டத்துக்கு சமுகமளித்து கல்லூரி வளர்ச்சியில் பங்களிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வே.முருகமூர்த்தி - அதிபர்,
யாழ்ற்றன் கல்லூரி.

திரு.சோ.விக்னேஸ்வரன்
கௌரவ செயலாளர், பழைய மாணவர் சங்கம்

### பெயர் மாற்றம்

''மாணிக்கவாசா'' கலைவாணி வீதி, சித்தன்கேணி என்னும் முகவரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சுதர்சன் ஆகிய நான் 11.10.2011 முதல் எனது பெயரை முகாட் டில்சாட் தனபாலசிங்கம் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

முகாட் டில்சாட் தனபாலசிங்கம்,
''மாணிக்க வாசா'',
கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசின் ஆபத்தான நிலைப்பாடு

பொதுநலவாய நாடுகளின் மூன்றுநாள் மாநாடு ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் முடிவடைந்துள்ளது. இந்த மாநாட்டில் இலங்கை இரு நெருக்கடிகளை எதிர்நோக்கியது. ஆனால், அந்த இரு நெருக்கடிகளில் இருந்தும் இலங்கை விடுபட்டு விட்டது.

2013ஆம் ஆண்டு மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு எதிர்ப்பு இருந்தது. ஏற்கனவே எடுத்த முடிவில் மாற்றம் செய்யமுடியாது என்று இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் இந்த மாற்றத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. இந்த நிலையில் மாநாட்டை இலங்கையிலேயே நடத்துவது என்று முடிவாகிவிட்டது. அது ஒன்று.

இரண்டாவது, மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்கும் யோசனை. அதுவும் போதிய ஆதரவு இன்றி கைவிடப்பட்டுவிட்டது. ஆனால், இந்த இரு நெருக்கடிகளில் இருந்தும் விடுபட்டது இலங்கைக்கு தற்காலிக வெற்றி என்றே கூறவேண்டும்.

இலங்கை போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து விடுபடமுடியாத நிலையிலேயே இன்னும் இருந்துவருகிறது. ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்திலும் சரி, பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டிலும் சரி, தனக்கு ஆதரவான பெரும்பான்மை நாடுகளின் உதவியுடனேயே இலங்கை தனக்கு எதிரான நடவடிக்கைகளை முறியடித்துள்ளது.

என்றாலும், 2013 மாநாட்டுக்கு முன்னர் பொதுநலவாய உறுப்பு நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் இலங்கை சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது. குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் இலங்கை அரசு தவறுமானால், கொழும்பில் நடைபெறும் 2013 மாநாட்டை உறுப்பு நாடுகள் பல பகிஷ்கரிக்க முடிவு செய்துவிட்டன.

கனேடிய அரசாங்கம் ஏற்கனவே அபாய மணியை அடித்துவிட்டது. போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை திருப்தி அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் கொழும்பு மாநாட்டை தான் பகிஷ்கரிக்கப் போவதாக கனேடியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

கொழும்பு மாநாட்டுக்கு முன், மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசு சில முன்னேற்றகரமான செயற்பாட்டைக் காட்டவேண்டும் என்று பேர்த்தில் பி.பி.ஸிக்கு அளித்த செவ்வியில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் எச்சரித்துள்ளார். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக சுயாதீன விசாரணைகள் நடைபெறவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கை அரசோ, தான் உள்நாட்டில் நியமித்த 8 அங்கத்தவர்கள் கொண்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையே போர்க்குற்றச்சாட்டுகளுக்கு பதில் அறிக்கையாகக் காட்ட முயற்சிக்கிறது. இன்னும் இரண்டு வாரங்களில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும். அதனை இலங்கையில் பகிரங்கப்படுத்துவதில்லை என்றும் முடிவாகி உள்ளது.

அமெரிக்கா, கனடா உட்பட்ட மேற்கு நாடுகள் நல்லிணக்க ஆணைக்குழுவில் நம்பிக்கை அற்ற நிலையில் உள்ளன. போர்க்குற்றச்சாட்டுகளை மூடிமறைக்கும் முயற்சி என்பதே அந்த நாடுகளின் கருத்து. சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை ஏற்படுத்தும்படி இந்த நாடுகள் கோருவதும் இதனாலேயே. ஆகவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தாலும் அரசுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் தொடரத்தான் போகின்றன.

இலங்கையை சர்வதேச விசாரணைக்குள் தள்ளிவிடுவதில் சர்வதேச மன்னிப்புச்சபை முனைப்பாகச் செயற்படுவது இலங்கைக்குப் பெரும் பின்னடைவுதான். 2013 இல் மாநாட்டைக் கொழும்பில் நடத்துவதற்கு பொதுநலவாய உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்திருப்பது பெரும் அவமானம் என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் தேசிய இயக்குநர் கிளாய்ர் மாவின்சன் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையின் பிரதியை சர்வதேச மன்னிப்புச்சபை கையளித்திருந்தது. சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. மாநாடு இவ்வாரம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டுக்கும் மன்னிப்புச் சபையினால் நிபுணர்குழு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை பயப்படத்தேவை இல்லை. உலகில் எவருக்கும் முகம் கொடுக்கத் தயார் என்று பேர்த்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இவற்றை எல்லாம் நோக்கும்போது இலங்கை தன் மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று கூறி,அவற்றுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு மறுத்து வருகிறது. தனக்கு ஆதரவான நாடுகளின் உதவியுடன் தனக்கு எதிரான நடவடிக்கைகளை முறியடிப்பதையே நோக்கமாகச் செயற்படுகிறது.

இலங்கை அரசின் அந்த நிலைப்பாடு ஆபத்தானது என்பதனை பகுத்துணரத் தவறுகிறது. இப்போது ஆதரிக்கும் நாடுகள் எந்நேரமும் கைவிடலாம். இதனை மனதில் கொண்டு இலங்கை செயற்படவேண்டும். தன்வினை தன்னைச் சுடும் என்பதனை மறந்து செயற்படுவதும் தான் நினைத்ததைச் சாதித்து விடலாம் என்று நினைப்பதும் புத்திசாலித்தனமன்று. இதனை மனதிருத்திச் செயற்பட்டால் மட்டுமே நாட்டின் மீது விழுந்துள்ள பூட்டை அவிழ்க்க முடியும். ஆத்திரமும் ஆக்ரோஷமும் ஆரோக்கியமான பெறுபேறுகளைத் தரமாட்டா. அவை நல்ல விளைவுகளைத் தரும் என்று கற்பனை செய்யக் கூடாது.

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில்

## 4 ஆம் திகதி நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், நவ.1

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது தேசிய மாநாடும் பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வீ.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.கே. குணசேகர, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.மொகமட் தம்பி, பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான பிரதிநிதி திருமதி பெற்றினா மெஜர் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ புஸ்பகுமார் ஆகியோரும் வட மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ. போல், பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் திட்டப் பணிப்பாளர் எஸ்.எச்.ஏ. மொகமட் ஆகியோரும் விசேட அதிதிகளாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர்களான எஸ்.தண்டாயுதபாணி, என். இராஜநாதன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இந்த மாநாடும் பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் மிகவும் முக்கியத்துவம் மிக்கது எனவும், கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு ஸ்தாபனக்கோவை அத்தியாயம் எக்ஸ். எக்ஸ்.வீ. பந்தி 2-1 இன் பிரகாரம் கடமை லீவு வழங்கப்படும் எனவும், ஓர் ஆசிரியருக்குத் தேவையான அனைத்து விடயங்களும் அடங்கிய கோவை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-7)

# 36 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை மீளப்பெறுகிறது அரசு

கொழும்பு, நவ.1

அரசினால் வழங்கப்பட்ட காணிகளை மீளக் கையேற்கும் சட்டமொன்று அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்களைக் கையேற்றல் என்ற அந்தச் சட்டத்தின் கீழ் 36 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச காணிகளை மீண்டும் கையேற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசு மீளக் கையேற்கவுள்ளதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளிடையே ஹோட்டல் டெவலப் பர்ஸ் லங்கா நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் ஹில்டன் ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியும் உள்ளடங்குகின்றது.

அரச காணிகளைப் பெற்று, எந்தவொரு அபிவிருத்திப் பணிகளுக்கும் அவற்றைச் பயன்படுத்தாது, தனிப்பட்ட தேவைகளுக்கும் இவை பயன்படுத்தபடுவதே இவ்வாறு காணிகள் மீண்டும் அரசுடைமையாக்கப்படுவதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதற்கமைய, அரசமைப்பில் இல 1 'பி' யின் கீழ் உயர் நீதிமன்றத்தின் வழக்கு இல. எஸ்/டி 02/ 2011 இன் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

பிரதம நீதியரசரான கலாநிதி சிரானி பண்டாரநாயக்காவினால் இந்த நிறுவனங்கள் தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் அது அதிகாரபூர்வமான பலத்தைப் பெறக் கூடுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய மீண்டும் அரசுடைமையாக்கப்படவுள்ள காணிகளை கொண்டுள்ள 36 நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த-22)

# சஜித் பிரேமதாஸவுக்கு நேசக்கரம் நீட்டுகிறார் ரணில் விக்கிரமசிங்க

## தலைமைப் பதவியைத் தக்கவைக்க உத்தி

கொழும்பு,நவ.1

தம்மோடு சுமுகமான உறவைப் பேண வருமாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஐ.தே.க. உறுப்பினர் மலிக் சமரவிக்கிரம ஊடாகவே இந்த அழைப்பை அவர் சஜித் பிரேமதாஸவுக்கு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது குறித்துப் பதிலளிப்பதற்கு சஜித் பிரேமதாஸ மறுத்துள்ளதாகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, கடந்த 27 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற கட்சிகளின் சம்மேளனத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் நடந்த அனைத்துச் சம்பவங்களையும் தாம் மறந்து விடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். சஜித் பிரேமதாஸவுடன் சுமுகமான உறவொன்றை ஏற்படுத்திக் கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருக்கமான அவரது ஆலோசகர்கள் அறிவுரை வழங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும் சஜித் பிரேமதாஸ மற்றும் கரு ஜயசூரியவுக்கு இடையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கத்தைச் சுட்டிக் காட்டி இந்த நிலையில் அத்தகைய உத்தியொன்றைக் கையாள்வதே பொருத்தமானதாக இருக்குமெனவும் அவர்கள் ரணிலுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இத்தகைய உபாயமொன்றைக் கையாள்வதன் ஊடாக அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள கட்சியின் சம்மேளனத்தில் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சித் தலைமைத்துவத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வாய்ப்பு அமையும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-22)

# தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, நவ.01

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டில் தேயிலை உற்பத்தி 24 மில்லியன் கிலோகிராமினால் கீழிறங்கியுள்ளதாக தேயிலை ஏற்றுமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இன்றைய நிலையில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வெகு வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் தேயிலை உற்பத்தித் துறை சரிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தேயிலை ஏற்றுமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது இந்த மாதத்தில் தேயிலை உற்பத்தி 8 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

தேயிலை உற்பத்தித்துறை இன்று முகம் கொடுத்துள்ள இக்கட்டுநிலை தொடர்பாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைத் துறை அமைச்சுக்குத் தெரியப்படுத்தியுள்ள போதிலும் இதுவரை அது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-22)

# 40 குதிரைவலு இயந்திரத்தை பாவிக்க அமைச்சர் அனுமதி; கடற்படை மறுப்பு

## கடல்தொழிலாளர்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம்,நவ.1

40 குதிரை வலு இயந்திரத்தைப் பயன்படுத்திக் கடல் தொழில் செய்யலாம் எனக் கடற்தொழில் அமைச்சர் வாக்குறுதி அளித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

ஆனால் கடற்படையோ அதற்கான அனுமதியை வழங்க மறுத்து வருகிறது என வடபகுதிக் கடல்தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை கடல்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அன்று மதியம் யாழ்.மாவட்டக் கடல்தொழில் நீரியல் வளத் திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் பங்குபற்றியிருந்தார்.

கடல்தொழில் அமைச்சருக்கும் யாழ்.மாவட்டக் கடல்தொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் கடல் தொழில் உதவிப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

25 குதிரை வலுவுக்குமேலான இயந்திரங்களைப் பயன்படுத்தக் கடற்படை அனுமதி மறுத்து வருகிறது என மீனவர் பிரதிநிதிகளால் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் மீனவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்தும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு மனுவும் கையளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கடல்தொழில் அமைச்சர் பல வாக்குறுதிகளையும் வழங்கினார். அதில் ஒன்றுதான் இந்த 40 குதிரை வலு இயந்திரத்தைப் பயன்படுத்திக் கடல் தொழில் செய்யலாம் என்பதாகும்.

அமைச்சர் அளித்த வாக்குறுதிகளை நம்பி கடல்தொழிலாளர்கள் 30 குதிரை வலு இயந்திரங்களுடன் கடலுக்குள் இறங்கினார்கள். ஆயினும் 25 குதிரை வலுவுக்கு மேற்பட்ட இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாது எனக் கடற்படை அனுமதி மறுத்துள்ளது. நேற்றுமுன்தினம் வரை 40 குதிரை வலு இயந்திரத்தைப் பயன்படுத்தக் கடற்படை அனுமதி வழங்கவில்லை என மீனவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்டக் கடல்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரனிடம் கேட்டபோது,

40 குதிரை வலுக்கொண்ட இயந்திரங்களை மீனவர்கள் பயன்படுத்தலாம் எனக் கடல் தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் உறுதிமொழி கூறியுள்ளார்.

ஆனால் கடற்படை 25 குதிரை வலுவுக்கு மேற்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்த, அனுமதிக்கவில்லை என மீனவர்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக யாழ்.மாவட்டக் கடல்தொழிலாளர் சம்மேளனத்தினர் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர். இதனைக் கடல்தொழில் அமைச்சருக்கு உடனேயே தெரியப்படுத்தியுள்ளோம்.

அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் கையெழுத்திடப்பட்ட கடிதம் ஒன்று தொலைநகல் மூலம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் 40 குதிரை வலு பயன்படுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாகக் கடற்படையினருடன் பேசவுள்ளோம்- என்றார். (த-14)

# பயிரை பாதுகாக்க வயல் வரம்பில் விவசாயிகள்

தென்மராட்சி, நவ.1

விளைந்த பயிரைக் கட்டாக்காலி கால்நடைகளிலிருந்து பாதுகாக்கப் பகல் நேரத்தில் வயல் வரம்பில் காத்திருக்கும் நிலை தென்மராட்சி தெற்கு நெற் செய்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் தென்மராட்சி தெற்குப் பிரிவில் அனைத்து வயல்களிலும் நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டதையடுத்து நெற்செய்கையாளர்கள் மும்முரமாக விதைப்பில் ஈடுபட்டனர்.

நெற்கதிர் முளைத்துவரும் நேரத்தில் கூட்டமாக வரும் மாடுகள் அவற்றினை அழித்து வருகின்றன.

இதனால் மாடுகள் வயல்களுக்குள் செல்லாது தடுப்பதற்கு நெற் செய்கை மேற்கொள்வோர் காலை தொடக்கம் மாலை வரை வரம்புகளில் காத்திருந்து கூட்டமாக வரும் மாடுகளைத் துரத்திச் சென்று ஒரு மைலுக்கு அப்பால் விட்டுவிட்டு வருகின்றனர்.

கடந்த வருடங்களில் பயிர்களைக் கட்டாக்காலி மாடுகளிடமிருந்து பாதுகாக்கக் கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் அந்தப் பிரிவு விவசாய சம்மேளனத்தினர் நெற் செய்கையாளர்களின் பங்களிப்புடன் பாதுகாப்பு வேலியினை அமைத்திருந்தனர்.

ஏற்கனவே அடைக்கப்பட்டிருந்த வேலிகளில் பல இடங்களில் சேதம் ஏற்பட்டிருப்பதாலும், அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலிக்கு அப்பால் 80இற்கும் மேற்பட்ட ஹெக்ரேயர் வயல்கள் நெற்செய்கை மேற்கொள்ள இந்த வருடம் அனுமதிக்கப்பட்டிருப்பதாலும் இந்தப் பகுதிகளில் விதைக்கப்பட்டு பயிராகும் நிலையில் உள்ள வயல்கள் கட்டாக்காலி மாடுகளால் சேதமாக்கப்பட்டு வருவதாகவும் நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். (த-207)



'திவி நெகும' திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் சகல அரச அலுவலகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் தலைமையில் வீட்டுத்தோட்டச் செய்கை ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய போதனாசிரியர் செல்வி சவரிமுத்து, நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, உடுவில் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஹரிகரன், குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-86)

# வெங்காயக் கொள்வனவுக்கு அச்சுவேலிச் சங்கம் ஏற்பாடு

## அதற்கென இரு புதிய கட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.1

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெங்காயக் கொள்வனவுக்கென இரண்டு புதிய கட்டடங்களை நிர்மாணித்து வருகின்றது. பத்தமேனி மற்றும் இடைக்காடு பகுதிகளில் இந்தப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கேவிந்திரதாஸ் தெரிவித்தார்.

விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் வெங்காயத்தைப் பாதுகாத்து வைக்கும் பொருட்டு இந்த வெங்காயக் களஞ்சியக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

அதேசமயம் சங்கத்தின் கிளை விற்பனை நிலையத்துக்கு என அச்சுவேலி தெற்குப் பகுதியில் புதியகட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (த-26)

# ஆத்துமாக்கள் திருவிழா நாளை

யாழ்.புனித மரியாள் சேமக் காலையில் ஆத்துமாக்கள் திருவிழா நாளை புதன்கிழமை மாலை இடம்பெறவுள்ளது. இறந்த அனைவரையும் நினைவு கூர்ந்து உலகளாவிய அளவில் கத்தோலிக்க திருச்சபையால் இந்த நாள் இறந்த விசுவாசிகளுக்காக வேண்டுதல் செய்யும் நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது அன்றையதினம் பி.பகல் 4 மணிக்கு செபமாலையைத் தொடர்ந்து திருப்பலி இடம்பெறும். (த-135)

# பழைய இரும்புக்கு 'கிராக்கி'

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.குடாநாட்டில் பழைய இரும்புக்கு மீண்டும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்குவரும் இரும்பு வியாபாரிகள் இங்குள்ள பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்துகொண்டு செல்வதில் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

ஒரு கிலோ பழைய இரும்பு 25 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.நகரை அண்டிய கொட்டடி, நாவாந்துறை, ஐந்து சந்தி, காக்கைதீவு, ஆனைக்கோட்டை பகுதிகளில் ஏற்கனவே அப்பகுதி மக்களால் சேகரிக்கப்பட்டுக் குவித்து வைக்கப்பட்டிருந்த பழைய இரும்புகள் விற்பனை செய்யப்பட்டு விட்டன.

இதனால் பழைய இரும்பைக் கொள்வனவு செய்வதற்காகத் தென்னிலங்கை வியாபாரிகள் அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இரும்புக்கு இவ்வாறு கிராக்கி ஏற்பட்டதையடுத்துச் சில விஷமிகள் பழைய கட்டடங்களில் காணப்படும் இரும்புகளையும் உடைத்து எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கை வியாபாரிகள் இப்போது பழைய இரும்பைத்தேடி குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் வாகனங்களில் சென்று அவற்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். (த-26)

# கூட்டுறவுத் திறந்தவெளிச் சந்தையின் ஆறு கடைகள் மூடப்பட்ட நிலையில்

## விரைவில் திறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் திறந்தவெளிச் சந்தையின் ஆறு விற்பனை நிலையங்கள் கடந்த ஆறுமாத காலமாக மூடப்பட்ட நிலையில் உள்ளன.

குடாநாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வசதி கருதி வடமாகாணக் கூட்டுறவு அமைச்சின் உதவியுடன் இந்த திறந்த வெளிச் சந்தையில் ஒன்பது விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

யாழ்.பிரதம தபாலகத்துக்கு முன்பாகவுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாச வளாகத்தில் இந்தக் கூட்டுறவு திறந்தவெளிச் சந்தை திறந்து வைக்கப்பட்டது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களே இந்த விற்பனை நிலையங்களில் விற்கப்பட்டன.

யாழ்.மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு அமைப்புக்கள் தாம் உற்பத்தி செய்யும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை இங்கு சந்தைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.



அனேகமான கூட்டுறவு நிறுவனங்கள் இந்த விற்பனை நிலையங்களில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த போதும் அவை நட்டத்தில் செயற்பட்டதால் விற்பனை நிலையங்களை மூடிவிட்டுச் சென்றுள்ளன.

பண்டத்தரிப்பு பனை,தென்னை வளக் கூட்டுறவுச் சங்கம், கால் நடை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம், வலி.தெற்கு கிராமிய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றின் கிளை நிலையங்களே தற்போது எஞ்சியுள்ளன.

இதுகுறித்து யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவிக்கையில்,

மூடப்பட்டிருக்கும் ஆறு விற்பனை நிலையங்களையும் விரைவாகத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அதனைச் சந்தைப்படுத்தவும் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும் என்றார்.

மூடப்பட்டிருக்கும் இந்த விற்பனை நிலையங்களை விரைவாகப் புனரமைத்துத் திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (த-26)

# சட்டம், ஒழுங்கை நிலைநாட்டினால் மாத்திரமே குடாநாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாக்கலாம்

## மனித உரிமை ஆணையாளர் ஏ.ஆனந்தராஜா கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.1

சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட்டால் மாத்திரமே இந்தப் பிரதேசங்களில் மனித உரிமைகளை உரிய முறையில் பாதுகாக்க முடியும். அத்துடன் மனித உரிமை ஆணைக்குழுவும் வரையறைக்குள்ளேயே வேலை செய்கின்றது.

இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமாகிய ஏ. ஆனந்தராஜா தெரி வித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தப் பிரதேசங்களில் சட்டம், ஒழுங்கு என்பன உரிய முறையில் நிலை நாட்டப்பட்டால் மாத்திரமே மனித உரிமைகளை உரிய முறையில் பாதுகாக்க முடியும். மேலும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவானது ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளேதான் வேலை செய்கின்றது.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவானது ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இயங்கமாலிருந்தது. தற்போது தான் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட மக்களின் பிரச்சினை எனக்கு நன்றாகத் தெரியும். இந்த மக்களோடு நன்றாகப் பழக்கப்பட்டவன். நான் சில தினங்களுக்கு முன்னர் தான் இறுதி யுத்தம் இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டேன் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், யாழ்ப்பாணத்தில் தற்போது எமக்குக் கிடைக்கும் பெரும்பாலான முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவின் தத்துவங்களுக்கு அப்பாற் பட்டவையாகவே காணப்படுகின்றன. மனித உரிமை மீறல் தொடர்பில் எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றாலும் அடிப்படை உரிமை மீறல் தொடர் பில் மட்டுமே எம்மால் விசாரிக்க முடியும்.

மேலும் யாழ் .பிராந்திய அலுவலகமானது யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியே செயற்படுகின்றது.

இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் பொறுப்பாக யாழ். பிராந்திய அலுவலகத்தில் நிரந்தர உத்தியோகத்தர்களே இருக்கின்றனர்.

எனவே தம்மால் முடிந்த வரை மட்டுமே சேவை வழங்க முடியும் என்றார். (த-15)

## மண்ணெண்ணெய் விலையேற்றத்தால் மீனவர் பாதிப்பு

மண்ணெண்ணெயின் விலையை அரசு திடீரென லீற்றர் ஒன்றுக்கு 10 ரூபாவாக அதிகரிப்புச் செய்துள்ளமையால் விவசாயிகள் மற்றும் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள்களின் விலைகளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அதிகரித்த அரசு மண்ணெண்ணெயின் விலையை லீற்றர் ஒன்றுக்கு 10 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இந்தத் திடீர் விலை ஏற்றத்தால் விவசாயிகள், கடல் தொழிலாளர்கள் மற்றும் ஏழை மக்களே பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

மண்ணெண்ணெயின் பாவனை குறைந்து காணப்பட்டாலும் விவசாயம் கடல்தொழில் போன்ற தேவைக்கு இது அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# விடாது தொடரும் கடும் மழை தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்



யாழ். முலவைச் சந்தி வீதியில் தேங்கியுள்ள வெள்ளம் (த-09)

யாழ்ப்பாணம், நவ.1

குடாநாட்டில் நேற்றும் நேற்று முன்தினமும் தொடர்ந்து கொட்டித் தீர்த்த மழையினால் தாழ்ந்த பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கின. இந்தப்பகுதிகளில் குடியிருந்த மக்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளானார்கள்.

வடக்கு - கிழக்குப் பகுதி உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பருவமழை ஆரம்பித்துள்ளது.

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் இந்தப் பருவ மழை கடந்த இரு தினங்களாகத் தீவிரம் கொண்டுள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் அடைமழை கொட்டியது. நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பித்த மழை விட்டு விட்டுத் தொடர்ந்த வண்ணம் இருந்தது. பின்னர் நேற்று முன்தினம் மாலையிலும் இரவிலும் கடும் மழை பெய்தது. பின்னர் நேற்றுக் காலை முதல் மாலை வரை கடும் மழை தொடர்ந்தது.

இந்த மழையினால் குடாநாட்டின் தாழ்ந்த பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கின. யாழ். நகரப்பகுதியில் முற்றவெளி, பண்ணைப் பகுதி, கொட்டடி, நாவாந்துறை, பொம்மைவெளி கன்னாதிட்டி, யாழ். ரயில் நிலையப் பகுதி, குருநகர் சின்னக்கடைப் பகுதி, முலவைச் சந்திப்பகுதி, இராசாவின் தோட்டம், ஆனைப் பந்திச் சந்தி ஆகிய தாழ்ந்த பகுதிகளில் மழை வெள்ளம் பெருமளவில் தேங்கியது.

பொம்மை வெளியில் சிறு குடிசைகளில் வசித்த சில குடும்பங்கள் இந்த வெள்ளத்தால் இடம்பெயர்ந்தன. முற்றவெளியில் தனியார் பஸ் நிலையம் வெள்ளத்தில் மூழ்கியதால் பயணிகளும் பஸ் சாரதிகளும் சிரமத்துக்கு உள்ளானார்கள்.

சில இடங்களில் பிரதான வீதிகளை மேவி வெள்ளம் பாய்ந்தமையால் போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்பட்டன. குறிப்பாக யாழ். முலவைச் சந்தி, கன்னாதிட்டி, ஐந்து சந்தி, முற்றவெளி ஆகிய பகுதிகளில் வீதிகளை மூடி வெள்ளம் பாய்ந்தது.

மழை தொடர்வதால் பாதிப்புக்கள் அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-26)

## மாநகர எல்லைக்குள் சுகாதாரச் சீர்கேடு:

# சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக புதியவர்களை நியமிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.1

வேலைக்கு ஒழுங்காகச் சமுகமளிக்காத 'அடோப்' ஊழியர்களை வேலை நீக்கம் செய்து பதிலாகப் புதிய சுத்திகரிப்பு ஊழியர்களை நியமித்து சுகாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும் எனவும், இது வெறும் தீர்மானமாக மட்டும் இல்லாது கண்டிப்பாக செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் மாநகரசபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்த் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுகாதாரக் குழுஅறிக்கை அங்கீகாரத்திற்குட்விடப்பட்டது.

இதன்போது 'அடோப்' தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை எனவும் அடிக்கடி விடுமுறை எடுப்பதாகவும், இதனால் குருநகர், பாஷையூர் பகுதிகளில் வீதிகள், வடிகால்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுக் குப்பைகளால் நிறைந்து அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதாகவும் உறுப்பினர்கள் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

தொழிலாளர்கள் அடிக்கடி விடுமுறை எடுப்பது குறித்தும் உறுப்பினர்கள் இதன்போது ஆட்சேபம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து கூடுதலாக வேலைக்குச் சமுகமளிக்காத ஊழியர்களை நீக்கிவிட்டுப் புதியவர்களைக் கொண்டு குறிப்பிட்ட வேலைகள் பாதிப்படையாதவாறு நடவடிக்கை எடுப்பது எனச் சபை ஏகமனதாகத் தீர்மானித்தது. (த-7)

# யாழ் - கொழும்பு தனியார் பஸ்களில் வேறுபட்ட கட்டணங்கள் அறவீடு

## பயணிகள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாண்ணம், நவ. 1

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தனியார் பஸ் பயணத்தின்போது வேறுப்பட்ட கூடுதலான கட்டணங்கள் அறவிடப்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை விடக் கூடுதலாக கட்டணங்கள் அறவிடுவதாகப் பயணி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தனியார் பஸ் சேவையில் சாதாரண பஸ்ஸின் பயணக் கட்டணமாக 600 ரூபா அறவிடப்படுகிறது. அரைச் சொகுசு பஸ் பயணத்துக்கான கட்டணமாக 750 ரூபா தொடக்கம் 850 ரூபாவரை அறவிடப்படுகின்றது. சொகுசு பஸ் கட்டணமாக ஆயிரத்து 100 ரூபா தொடக்கம் ஆயிரத்து 400 ரூபாவரை அறவிடப்படுகிறது. யாழ். நகரிலுள்ள தனியார் பஸ் பயணத்துக்கான ஆசனங்களை முற்பதிவு செய்யும் இடங்களில் கேட்டபோதும் இந்தக் கட்டண விவரங்களே கூறப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாகத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது சாதாரண பஸ் கட்டணமாக 519 ரூபாவும், அரைச்சொகுசு 569 ரூபாவும், சொகுசு பஸ் கட்டணமாக 750 ரூபாவும் அங்கீகரிக்கப் பட்டுள்ளதாக அந்த அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது மட்டுமன்றி தனியார் பஸ் பயணத்தின் போது சில அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகவும் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்ஸில் பயணிகள் பிரயாணம்செய்துகொண்டிருக்கும்போது அதிக சத்தத்துடன் படங்கள், பாடல்கள் ஒலிக்க விடப்படுகின்றன. இது பஸ்ஸில் பயணிகளை பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதாகப் பயணிகள் தரப்பில் தெரிவிகப்படுகிறது. அத்துடன் சிங்களப் பாடல்களே அதிகம் ஒலிபரப்பப்படுகின்றன. இதற்குக் காரணம் தனியார் பஸ்களின் சாரதிகள் சிங்களவர்களாவர்.

எனவே பயணிகள் தரப்பில் கூறப்படும் குறைகளை நிவர்த்தி செய்யத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-14)

# ஆளணி, பஸ் பற்றாக்குறைக்கு மத்தியில் பருத்தித்துறை டிப்போ

## எனினும் பஸ் சேவைகள் சீராக

யாழ்ப்பாணம், நவ.1

ஆளணி மற்றும் பஸ் பற்றாக் குறை என்பவற்றுக்கு மத்தியில் அனைத்து பஸ் சேவைகளும் சீராக இடம்பெற்று வருவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பருத்தித்துறை டிப்போவின் சேவைகள் யாவும் சீராக இடம் பெற்று வருகின்றன. பொற்பதி, மணற்காடு, ஆழியவளை போன்ற கஷ்ட பிரதேசங்களுக்கு 3 பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். இவை யாவும் சீராகச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

750 மற்றும் 751 பாதை இலக்க சேவைகள் ஆளணிப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு அரைமணி நேரத்துக்கும் ஒரு பஸ் என்ற வீதம் சேவையில் ஈடுபடுகின்றன. சிலவேளைகளில் பஸ் பழுது, ரயர் பிரச்சினை ஏற்படும் சமயங்களில் பஸ் சேவையில் ஈடுபடாமல் போகின்றது. இந்த வேளையில் பொதுமக்கள் வீதியில் காத்திருப்பதைத் தவிர்க்க அடுத்த பஸ்ஸைச் சற்று முன்னதாக சேவையில் ஈடுபடுத்துகின்றோம்.

பருத்தித்துறை டிப்போவில் 45 சாரதிகளும் 43 நடத்துநர்களும் பணியில் உள்ளனர். 30 பஸ்கள் பருத்தித்துறை சாலையில் இருந்து பணியில் ஈடுபடுகின்றன-என்றார் அவர். (த-319)

# கல்வியியற் கல்லூரிகளில் புதிய மாணவர் அனுமதி ; நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 இல் ஆரம்பம்

இலங்கையிலுள்ள தேசிய கல்லூரிகளில் 2012 ஆம் வருடத்துக்குப் புதிய மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையை எதிர்வரும் 16ஆம் 17ஆம் 18 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கேற்ப பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியிலும் எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் 18ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளதாக பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுத்தரலிங்கம் தெரிவித்தார்.

ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடநெறிகள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் இடம்பெறவுள்ளன.

சமூகக்கல்வி, முதலாம் மொழி தமிழ், பரத நாட்டியம், கர் நாடக சங்கீதம் ஆகிய பாடநெறிகள் தமிழ் மொழியில் மாத்திரம் இடம்பெறவுள்ளன.

இந்தப் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர் முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

இதேவேளை ஆங்கிலமொழியில் நடத்தப்படவுள்ள தகவல் தொழினுட்ப பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சைகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தக் கல்லூரியின் தமிழ் மொழி மூலப் பாட நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கின்றபோது தற்போது தோட்டங்களில் தொழில் புரிகின்ற பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த நிலையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளித் தமிழ் மாணவர்கள் நேர்முகப் பரீட்சையின் போது தமது பெற்றோர் குறித்த தோட்ட அதிகாரியின் உறுதிப்பத்திரம், கடந்த ஐந்து வருடத்துக்குரிய பெற்றோரின் ஊழியர் சேமலாபப் பதிவுப் பத்திரங்கள் ஆகிய உறுதிப்படுத்தல் ஆவணங்களைச்சமர்ப்பிக்கவேண்டும்.

இதேவேளை இதுவரை நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் கல்லூரி நிர்வாகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.



நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சற்குணராஜா ஆகியோர் நிற்கின்றனர். வித்தியாலய அதிபர் எப். எக்ஸ். அன்ரன் பாடசாலைக் கொடியை ஏற்றுகின்றார். (வ)

## 7 லட்சம் ரூபாவை கொள்ளையடித்த சிப்பாய்கள் கைது

ஏழு லட்ச ரூபா கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு ராணுவச் சிப்பாய்களை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

மாத்தளை தொட்டகமுவ பிரதேசத்தில் இந்தக் கொள்ளைச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

தொட்டகமுவ பிரதேச ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த பெண் ஒருவரின் பணத்தை இவ்வாறு படைச் சிப்பாய்கள் கொள்ளையடித்துள்ளனர்.

வங்கியிலிருந்து பணத்தை மீட்டுச் சென்ற போதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட படைச் சிப்பாய்களிடம் காவல் துறையினர் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## போத்தலால் அடித்து காயப்படுத்தியவர் கைதானர்

யாழ்ப்பாணம், நவ.1

போத்தலால் அடித்து காயப்படுத்தினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வடமராட்சி கம்பர் மலைப் பகுதியில் போத்தலால் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் ஒருவர் கடந்த 26 ஆம் திகதி வல்வெட்டித்துறை பகுதியில் வைத்து அந்தப் பகுதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் கடந்த 27 ஆம் திகதி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-319)

எரிபொருள் விலை உயர்வு:

## நிவாரணம் வழங்குமாறு ஓட்டோச் சாரதிகள் கோரிக்கை

எரிபொருள் விலை அதிகரிப்பால் ஓட்டோச் சாரதிகள் பெரியளவிலான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக சுயதொழில் புரிவோர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் ஓட்டோச் சாரதிகளுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் மஹிந்த கஹந்தகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஓட்டோ சேவையில் 20 லட்சம் தொழில் புரிவோர் இணைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் ஓட்டோ சேவைக் கட்டணத்தை அதிகரித்து பொது மக்களை சிரமத்துக்கு உள் ளாக்காமல் எரிபொருள் நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும் என்று சுயதொழில் புரிவோர் சங்கத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் வங்கிக் கொள்ளை

## ஈழத் தமிழர்களைக் கைது செய்வதற்கு இன்டர்போலை நாடியது தமிழக பொலிஸ்

சென்னை, நவ.1

சென்னையில் பல்வேறு தனியார், அரசு வங்கிகள் ஏரி.எம். நிலையங்களை அமைத்துள்ளன. இந்த நிலையங்களில் பணம் எடுக்கும் வாடிக்கையாளர்களின் கடவுச் சொற்களைத் திருடி போலி அட்டைகளைத் தயாரித்து பண மோசடி செய்வதில் இலங்கைத் தமிழர் ஒருவரும் ஈடுபட்டுள்ளார். எனவே இவரைக் கைது செய்ய தமிழக பொலிஸ் இரண்டு தனிப் படைகளை அமைத்து குற்றவாளிகளைத் தேடி வருகின்றனர்.

நவீன முறையில் நடந்து வரும் இந்த சைபர் குற்றச் செயலால் வங்கிகளில் வைப்பலிட்டு வைத்திருக்கும் பணத்திற்கு உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த திருட் டால் வங்கிகளில் பணம் வைப்பிலிட்டு வைத்திருப்போர் அவற்றைப் பறி கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த கும்பலைச் சேர்ந்த 3 பேரை இதுவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதில் ஒருவர் இலங்கையைச் சேர்ந்தவர். கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையில் இந் தக் குழுவினர் உலக நாடுகள் பலவற்றிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடு களில் உள்ள வங்கிகளிலும், பெற்ரோல் நிலையங்கள் உள்ளிட்ட பல இடங்களில் இதுமாதிரியான மோசடிகளைச் செய்வது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கும்பலிடம் பணம் பறிகொடுத்த வகையில் சுமார் 150 பேர் வரை முறைப்பாடு கொடுத்துள்ளனர். ஆனால் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதால் ஏரி.எம். கொள்ளைக் கும்பல் பெருமளவில் நகரில் நடமாடுவதாக பொலிஸார் அஞ்சுகிறார்கள்.

இதையடுத்து வாடிக்கையாளர்கள் தங்களது கார்டுகளை ஏரி.எம். நிலையங்களில் பயன்படுத்தும்போது மிகவும் கவனமாக இருக்குமாறு அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தக் கும்பலின் தலைவனாக செயற்படுபவர் ஒரு இலங்கைத் தமிழர் என்று நம்பப்படுகிறது.

இவர் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து இந்தக்குழுவை இயக்குவதாக தகவல்கள் கசிந்துள்ள நிலையில் இவரைக் கைது செய்ய இண்டர் போலின் உதவியை நாடியுள்ளனர் தமிழகப் பொலிஸார்.

(வ)

## தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரதிநிதி ஆயுததாரிகளால் தாக்கப்பட்டார்

பரிஸில் சம்பவம்

பிரான்ஸ் தலைநகர் பரிசில் ஆயுததாரிகள் நிகழ்த்திய வாள் வீச்சில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் முக்கிய பிரதிநிதியான பருதி படுகாயமடை ந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலகத்தை விட்டு வெளியில் வந்த பொழுது, வெளியில் காத்திருந்த முகமூடியணிந்த ஆயுததாரிகளால் கத்திகள், வாள்கள் சகிதம் இவர் மீது கொலை வெறித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த பருதி ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

26.10.1996ஆம் ஆண்டு இதே பாணியில் பரிசில் நிகழ்த்திய கொல்லவெறித் துப்பாக்கிச் சூட்டில் விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் லெப்.கேணல் கந்தையா நாதன், ஈழமுரசு இதழின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

தற்பொழுது இதேபாணியில் பருதி அவர்கள் மீது கைக்கூலிகள் என சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகளால் கொலை வெறித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

(வ)

# நவ. 18 இல் இடம்பெறவிருக்கும் 3 முக்கிய நிகழ்வுகள்

நவம்பர், 1

இம்மாதம் 18 ஆம் திகதி ஒரு முக்கிய நாளாக இருக்கப் போகின்றது இலங்கையர்களுக்கு அன்றைய தினம் அரசுடன் தொடர்புடைய மூன்று முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதே இதற்கு காரணம் அன்று தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் வருகின்றது. அது எந்த வகையில் அரசால் கொண்டாடப்படப்போகிறது என்ற விவரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இலங்கையில் நடை பெற்று முடிந்த போர் தொடர்பாகவும் நாட்டில் மீண்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் விசாரணைகளை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழு அன்றைய தினமே தனது பூரண அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக் குழுவின் அறிக்கை விவரங்களை அறிய உலக நாடுகள் பலவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

இந்த அறிக்கை இலங்கை அரசின் எதிர்கால செயற்பாடுகளுக்கு மிகுந்த உறுதுணையாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

நாட்டின் இன சௌஜன்யத்துக்கு இந்த அறிக்கை வழிகோலவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கின்றது.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கை விவரங்கள் உடனடியாக பொதுமக்கள் அறியும் விதத்தில் வெளியிடப்பட மாட்டாதென இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் தெரிவிக்கப்படக்கூடிய கருத்துக்கள் சில சமயம் அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிடலாம் ஏன்ற அச்சம் அரச தரப்பில் நிலவுவதாகவும் கருதப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா.ம னித உரிமைகள் சபையின் மாநாட்டில் இலங்கை தொடர்பாக பிரச்சினைகளை கிளப்புவதற்கு நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையைப் பார்த்த பின்பே முடிவு செய்வதென்று மேற்கு நாடுகள் சில தீர்மானித்திருக்கின்றன.

அடுத்து முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பான வெள்ளைக்கொடி விவகார வழக்கின் ட்ரயல் அட் பார் விசாரணை தீர்ப்பும் அன்றைய தினமே வழங்கப்படவிருக்கின்றது.

(ப)

# அரசின் ஊழல் மோசடிகளினால் ஏற்படும் சுமை மக்கள் மீது திணிப்பு

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.1

அரசினால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளின் சுமை மக்கள் மீது திணிக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஊழல், மோசடி மற்றும் வீண் விரயத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை அரசு அப்பாவி மக்கள் மீது சுமத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தைப் போன்றே மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். மக்களைக் கொல்லாமல் கொல்லும் அரசை விரட்டியடிக்க வேண்டும்.

வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட உள்ள நிலையில் இவ்வாறு எந்தவொரு அரசும் பொருள்கள், சேவைகளின் விலையை உயர்த்தியதில்லை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எரிபொருள் விலையை அதிகரிப்பதில்லை என்று உறுதிமொழி வழங்கி சில வாரங்களில் எரிபொருள்களின் விலை உயர்த் தப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விலையேற்றங்களை ஈடுசெய்ய வேண்டுமாயின் அரச ஊழியர்களின் சம்பளம் குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாவால் உயர்த்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ச)

# வேட்பாளர்கள் சொத்து விவரம் வெளியிடும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

கொழும்பு,நவ.1

எதிர்வரும் காலங்களில் இடம்பெறுகின்ற தேர்தலில் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னரே போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தங்களது சொத்து விவரங்களை வெளியிடுவதற்கான செயல்பாட்டை நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார் என்று தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் காலங்களில் நடைபெறும் உள்ளூராட்சி, மாகாண சபை மற்றும் பொதுத் தேர்தல்களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளர் நாயகத்திற்கு இவ்வாறான அதிகாரங்கள் எடுக்க முடியும் என்று 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன்படி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தேர்தலின் பின்னர் பதவிப் பிரமாணம் செய்த பின்னர் தங்களது சொத்து விவரங்களை தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அரச பயங்கரவாதம் நாட்டில் தொடர்கிறது

## மனோகணேசன் குற்றச்சாட்டு



கொழும்பு,நவ.1

நாட்டில் அரச பயங்கரவாதம் தொடர்வதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இந்தப் பிரதேச மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும்.

அரசு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு உண்மையான சேவை ஆற்றியிருந்தால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தோல்வியடைந்திருக்க வாய்ப்பு இருந்திருக்காது.

30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் எதிர்நோக்கி வந்த அரசியல் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் வழங்கும் முயற்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பினருடன் பல சுற்று பேச்சு நடத்தப்பட்ட போதிலும் எந்தவிதமான முன்னேற்றமும் இதுவரையில் ஏற்படவில்லை.

இந்த அரசு நாட்டின் தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஏமாற்றி வருகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்படும் நிதி அறிக்கைகள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையே ஆகும்- என்றார். (ச)

# சரத்பொன்சேகா குறித்து அறிக்கை பாப்பரசரிடம் கையளித்தார் ஜயலத்

கொழும்பு, நவ.1

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பிலான மேலதிக தகவல்களைக் கண்டறியுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜெயவர்தன 16ஆவது ஆசிர்வாதப்பரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொன்சேகா தொடர்பிலான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்றை 16ஆவது ஆசிர்வாதப்பரிடம் கையளித்த போதே அவர் இந்த வேண்டுகோளைவிடுத்துள்ளார்.

இலங்கை இராணுவத்திற்குத் தலைமை தாங்கி பயங்கர வாதத்தை ஒழிப்பதற்காக பொன்சேகா பெரும் பங்காற்றியுள்ளார் என்பதை இதன்போது அவர் பாப்பரசர் 16ஆவது ஆசிர்வாதப் பரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் காரணமாக இலங்கை மக்கள் பல வருடங்களாக சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# 50 அடி பள்ளத்தில் வீழ்ந்தது பஸ்



கொழும்பு,நவ.1

ஹற்றன், அலுத்கால பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை காலை தனியார் பஸ்ஸொன்று பாதையை விட்டு விலகிச்சென்று விபத்திற்குள்ளானதில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹற்றன் - பொகவந்தலாவை வழித்தடத்தில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் இந்தப் பஸ், அலுத்கால பகுதியிலுள்ள தரிப்பிடத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோதே பாதையைவிட்டு விலகிச்சென்று சுமார் 50 அடி பள்ளத்திலுள்ள நீரோடையில் வீழ்ந்து விபத்திற்குள்ளானது.

பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவராக இலங்கையில் பணியாற்றி தனது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்த மஹ்மூத் றஹிமி கொர்ஜியை கௌரவித்து பிரியாவிடை வழங்கும் நிகழ்வு அண்மையில் தூதரக கலாசாரப் பிரிவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தூதுவர் கொர்ஜிக்கு கலாசாரப் பிரிவின் பணிப்பாளர் மெஹ்தி ஜி ரொக்னி நினைவுப் பரிசை வழங்குகின்றார்.

# பாரதவின் கொலை தொடர்பிலான அறிக்கை முழுநாட்டுக்கும் அம்பலப்படுத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்



கொழும்பு,நவ.1

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை தொடர்பான விசாரணை அறிக்கையை முழுநாட்டுக்கும் அம்பலப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விசாரணை நடத்தும் பொறுப்பு பொலிஸாரிடமிருந்து புலனாய்வுப் பிரிவிற்கு மாற்றப்பட்டது. விசாரணைகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாரதவின் மரணம் பற்றி இரங்கல் செய்தி வெளியிடுவதற்குக் கூட சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. மரணம் தொடர்பில் குடும்பத்தாருக்குக் கூட பேச உரிமையில்லை.

அரசு சகல தேர்தல் விதிகளையும் மீறிச் செயற்பட்டுள்ளது.

கட்சியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் அரசைத் தோற்கடிக்க முடியும்.

மஹிந்த சிந்தனை என்பது கொழும்பில் வறியவர்களைத் தாக்கும் திட்டமாகும்.

நாட்டில் இன்று நீதி நிலைநாட்டப்படவில்லை, அரசே நீதி மீறல்களில் ஈடுபட்டுவருகின்றது- என்றார். (ச)

# இலங்கையில் நல்லாட்சி ஏற்படுத்தப்படுவதை பொதுநலவாய அமைப்பு உறுதிப்படுத்த வேண்டும்

## பாரத லக்ஷ்மனின் குடும்பத்தினர் கோரிக்கை

கொழும்பு, நவ.1

இலங்கையில் நல்லாட்சி ஏற்படுத்தப்படுவதை பொதுநலவாய நாடுகள் அமைப்பு உறுதிப்படுத்த வேண்டும் என்று படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கு, பாரதவின் சகோதரர் அசேல பிரேமசந்திர எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பாரத உள்ளிட்ட ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட சிலர் காயமடைந்திருந்தனர்.

இலங்கையில் நல்லாட்சி ஏற்படுத்தப்படுவது தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு தலையீடு செய்ய வேண்டுமென பாரதவின் சகோதரர் கோரியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு நல்லாட்சி மற்றும் மனித உரிமை விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஓர் அமைப்பு என்ற காரணத்தினால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படுவதாக அசேல தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசு மனித உரிமை பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பில் கரிசனை கொள்ளத்தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த இரண்டு பிரதான காரணிகள் குறித்து இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பதனை பொதுநலவாய நாடுகள் அமைப்பு வலியுறுத்த வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

வரவேற்பு.....



வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் 2011 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி நிகழ்வுகள் வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம-15)

## வடக்கு உள்ளூராட்சி சபைகளின் கண்காட்சி வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, நவ. 1

வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் 2011 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் ஆரம்பமாகியது.

இந்தக் கண்காட்சி வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் இடம்பெறுகின்றது.

கண்காட்சியை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் அமைச்சர் ரிசாட் பத்யுதீனும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வில் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், தலைவர்கள், செயலாளர்கள் மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கண்காட்சியில் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள், யாழ். மாநகர சபை, நகர சபைகள், பிரதேச சபைகள் தங்கள் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தின. (ம- 131)

## வேலிக் கட்டைகளை வெட்டுவதற்கு அனுமதிக்குக!

முல்லைத்தீவு, நவ.1

முல்லை மாவட்டத்தில் விவசாயம் மற்றும் உப உணவுச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், காணிகளின் சுற்று வேலிகளுக்கான கட்டைகள் வெட்டுவதற்கான அனுமதி பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அரச அதிகாரிகளிடம் சென்று முறையிட்டும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வேலிகளுக்கான கட்டைகளை உடனடியாக வழங்கினால் கட்டாக்காலி கால்நடைகளில் இருந்து பயிர்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ- 500)

## மாணவ சமுதாயத்தை நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டியது அவசியம்

### முருகானந்தா ம.வி. அதிபர்

இன்றைய மாணவச் சமுதாயத்தை எதிர்காலத்தில் நல்ல நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் உள்ளது. இது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலய அதிபர் தி.வரதன் இவ்வாறு தெரிவித்தார்.

முரசமோட்டை முருகானந்தா ஆரம்பப் பாடசாலையில் தரம் - 5 இல் சித்திபெற்ற மாணவரைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களின் அடிப்படைக் கல்வி அறிவை மேம்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. புலம்பெயர்ந்த பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் தற்போது தலை நேர வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மாணவர்களின் கல்வியை பாடசாலைக் கல்வியில் மட்டும் மேம்படுத்த முடியாது. அதில் ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகளில் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும். அப்போதுதான் அவர்களின் கல்வியை உயர்த்த முடியும்.

இன்றைய இந்த மாணவ சமூகத்தை எதிர்காலத்தில் நல்ல நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோரதும் கைகளில் உள்ளது.

எதிர்காலத்தில் அறிஞர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் விற்பன்னர்களாகவும் வளர வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். - என்றார். (ம- 6)

## அதிகஷ்டப் பிரதேச கொடுப்பனவின்றி கல்லாறு தமிழ் வித்தியாலய ஆசிரியர்கள்

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

அதிகஷ்டப் பிரதேசத்துக்கான கொடுப் பனவாக 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளக் கொடுப்பனவுடன் சேர்த்து வழக்கப்படுவது வழமை.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கல்லாறு தமிழ் வித்தியாலயம் முல்லைத்தீவு வீதியில் சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் மிகவும் பின் தங்கிய ஒரு பகுதியில் உள்ள ஒரு பாடசாலை.

இந்தப் பாடசாலைக்கு மாணவர்களோ செல்லக் கூடிய போக்குவரத்து வசதிகள் இல்லை.

அதை விட குடிதண்ணீர் வசதி, ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகள் எவையும் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இங்கு சேவையாற்றும் ஆசிரியர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவாறே இந்தப் பாடசாலைக்குச் சென்று கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இந்தப் பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்ரப் பிரதேசக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை.

ஆனால் ஏ-9 வீதி மற்றும் ஏ-35 பரந்தன்- முல்லைத்தீவு வீதியோரத்தில் அமைந்துள்ள பாடசாலைகள் சிலவற்றில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இந்த அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு கிடைப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ம-6)

## வவுனியா பிரதேசத்தை அழகுபடுத்தும் நகரசபை

வவுனியா, நவ.1

வவுனியா நகரப் பகுதிகளை அழகுபடுத்தும் நடவடிக்கைகளில் நகர சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் முதற் கட்டச் செயற்பாடாக நகரில் உள்ள சிலைகளை சூழவுள்ள பகுதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நகரில் விளம்பரப் பலகைகள் அமைக்கப்பட்டு இது தொடர்பான விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (ம- 421)

## தொண்டர் ஆசிரியருக்கு தொழில் வழங்க மறுக்கும் நிறுவனங்கள்

கிளிநொச்சி, நவ.1

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரிவோருக்கு நிறுவனங்கள் சில தொழில் வழங்கப் பின் நிற்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தொண்டர் ஆசிரியர் என்ற ஒரே காரணத்தாலேயே இந்த நிலைமை தமக்கு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களில் பலபேர் 12, 13 வருடங்களாகத் தொடர்ச்சியாக எவ்வித உதவிக் கொடுப்பனவும் இன்றி தமக்கும் நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் பாடசாலைகளில் கற்பித்து வருகின்றார்கள்.

நாட்டின் ஏனைய பகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டபோதும் கூட வன்னிப் பகுதியைச் சேர்ந்த இவர்களுக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சில தொண்டர் ஆசிரியர்கள் ஒரு சில நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கு விண்ணப்பித்த போது நேர்முகப் பரீட்சையில் நீங்கள் முன்னர் என்ன வேலை செய்துள்ளீர்கள், உங்கள் தொழில் அனுபவம் என்ன என்று கேட்கப்படுகிறது. இதில் தொண்டர் ஆசிரியர் என்று கூறினால் அவ்வளவுதான்.

உங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்தானே, உங்களுக்கு இந்த வேலை சரிவராது என்று கூறியும் பின்னர் உங்களுடன் தொடர்பு கொள்கிறோம் என்று கூறியும் வேலை வழங்காது அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு எத்தனையோ தொண்டர் ஆசிரியர்கள் வன்னியில் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதால் பெருந் துன்பங்களைச் சுமப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு எப்போது கிடைக்கும் என்று அவர்கள் அங்கலாய்க்கின்றனர். (ம- 426)

## கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உபகரணங்கள்

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் ஒன்பது கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தில் நீர் இறைக்கும் இயந்திரங்களும் தெளி கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஏழு கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 26 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் 59 விவசாயிகளுக்குத் தெளிகருவிகளும் மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சி ஜெயந்திநகர் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. (ம- 6)

## யானைகள் தொல்லை அதிகரித்துள்ளது

கல்விளான் கிராமத்தில் யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. பயன்தரும் மரங்களை யானைகள் அழித்தும் வருகின்றன. இதனால் கிராமத்து மக்கள் பயப்பீதியுடன் உள்ளனர். வன்னிப் பகுதி எங்கும் இரவு பகலாக கனமழைபெய்து வருவதால் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகிறது.

மீள்குடியமர்ந்துள்ள நிலையில் மக்கள் பயன்தரும் மரங்களை நட்டு வருகின்றநிலையில் யானைகள் அவற்றை அழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம- 415)

## நெடுங்கேணியில் மீளக்குடியமர்ந்த 1815 குடும்பங்களுக்கு வீடு இல்லை

### நெடுங்கேணி பிரதேச செயலக புள்ளி விவரம்

கிளிநொச்சி, நவ.1

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த 3 ஆயிரத்து 748 குடும்பங்களில் 1815 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவையாகவுள்ளதாகப் பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 748 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 385 பேர் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் காணிகள் இன்றி வாழும் 43 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட ஏனைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் 1582 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

3 ஆயிரத்து 440 வீடுகள் தேவையாகவுள்ளன.

இந்திய அரசின் உதவியோடு அமைக்கப்படும் வீடுகளுடன் சேர்த்து 1625 வீடுகள் அமைக்கப் படுகின்றன.

இவற்றைவிட 1815 வீடுகள் தேவையாகவுள்ளதாகப் பிரதேச செயலகப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

# வன்னியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான நிவாரணம் நிறுத்தம்; மக்கள் அவலம்

கிளிநொச்சி, நவ.1

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலக உணவுத் திட்டத்தின் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் தமது அன்றாட உணவைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்கள் தமது தொழில் முயற்சிகளை இன்னும் முழுமையாக ஆரம்பிக்காத நிலையில் இவ்வாறு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உணவுக்கான வேலைத்திட்டம் வன்னியில் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் மிகக் கடுமையான வேலைகள் செய்கின்ற போதும் குறைந்தளவான உலர் உணவுகளே நிவாரணமாகக் கிடைப்பதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன் காரணமாக பாடசாலை செல்லும் சிறுவர்கள் பலர் காலை உணவின்றியே பாடசாலைகளுக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மக்கள் தமது இடங்களில் மீளக்குடியமர்ந்து 6 மாதங்களுக்கு மட்டுமே உலக உணவுத் திட்டத்தின் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

அதனடிப்படையில் மக்கள் மீளக்குடியமர்ந்து 6 மாதம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் மிகவும் பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குத் தொடர்ந்தும் உலக உணவுத் திட்டத்தின் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.- என்றார். (ம- 15- 426)

கேரதீவு, சங்குப்பிட்டி வீதியில்

# கனரக வாகனப் போக்குவரத்து தவிர்க்கப்பட வேண்டியது அவசியம்

பூநகரி, நவ.1

பூநகரி-சங்குப்பிட்டி, கேரதீவு - யாழ்ப்பாணம் வீதிகளில் மண்ணித்தலைப் பகுதியிலிருந்து கனரக வாகனங்கள் மூலம் மணல் ஏற்றிச் செல்வதை தவிர்ப்பதன் மூலமே மாரிகால பஸ் போக்குவரத்துச் சேவையை சீராக மேற்கொள்ள முடியும் என்று பூநகரி பிரதேச சபைத் தலைவர் தெரிவித் துள்ளார்.

தற்போது மழை ஆரம்பித்துள்ள நிலையில் சங்குப்பிட்டி பகுதிகளில் கனரகவாகனங்கள் புதையுண்டு பல மணிநேரம் போக்குவரத்துத் தடை ஏற்பட்டு வருகின்றது.

சங்குப்பிட்டி பால அமைப்புடன் வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

பொறியியலாளர்கள் கண்காணிப்பில இந்த வீதி திருத்தப்பட்ட போதும் நசிவு கள், உடைவுகள் ஏற்பட்டு வீதி சேதமடைகிறது.

கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்ற நிலையில் இந்த வீதிகளில் எதிர் காலத்தில் உடைவுகள் ஏற்படாதவாறு புனரமைப்புப் பணிகள் இடம்பெற வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த வீதிகளில் வாகனங்கள் விலத்திச் செல்வதற்கு ஏற்றவாறு அகன்ற பகுதிகள் குறிப்பிட்ட இடங்களில் விடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தமிழ் வைத்தியர் இல்லாமையால் நெடுங்கேணி நோயாளர் அவதி

கிளிநொச்சி, நவ.1

வவுனியா நெடுங்கேணி மருத்துவமனைக்கு தமிழ் வைத்தியர்கள் நியமிக்கப்படாமையால் சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள், உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த தமிழ் பிரதேசமாகும்.

இந்த நிலையில் இந்த வைத்தியசாலைக்கு தமிழ் வைத்தியர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் சிங்கள மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டுச் சேவையாற்றி வருகின்றார்.

இந்த நிலையில் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் மொழி ரீதியான பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் தமக்குரிய நோயை அறிந்து கொள்ள முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் அங்கு சேவையாற்றும் தமிழ் ஊழியர்களுக்கும் சிங்கள மொழி தெரியாது இருப்பதாகவும் இந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் நூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனைவிட விடுதிகளிலும் 50 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பின் தங்கிய பிரதேச வைத்தியசாலைகளில் சேவையாற்றக் கூடிய வகையில் தமிழ் வைத்தியர்கள் எவரும் முன்வராததால் சிங்கள மருத்துவர்கள் சேவையாற்றுகின்றார்கள்.

ஆகவே எதிர்காலத்தில் இது போன்ற குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (எ-06)

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சுகாதார சேவை பணியாளர் போராட்டம்

சம்பள உயர்வு வழங்கக் கோரிக்கை

மன்னார், நவ.1

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார சேவை சிறு பணியாளர்கள் தமக்குச் சம்பள உயர்வை அதிகரிக்குமாறு கோரி நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை மன்னார் பொது வைத்தியசாலை வளாகத்தினுள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த பணிப் பகிஷ்கரிப்பில் மன்னார் பொது வைத்திய சாலையில் கடமையாற்றி வருகின்ற சுகாதார சேவையின் சிறு பணியாளர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தப் பணிப் பகிஷ்கரிப்பின் போது பணியாளர்கள்



சுலோகங்களை ஏந்தியவாறு தமது பகிஷ்கரிப்பை வெளிப்படுத்தினர்.

குறித்த சுலோகங்களில்; 'கடமையாற்றும் மணித்தியாலங்களுக்கு அமைவாக மேலதிக கொடுப்பனவை வழங்கு!' 'ஜனாதிபதி அவர்களே எங்களுக்கு எங்கே???' 'சம்பள அதிகரிப்பை செய்' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் ஏந்தியவாறு பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலையின் பணிகள் சுமார் ஒரு மணித்தியாலம் முடங்கியது. (ம- 601)

# வன்னியில் இலையான் அதிகரிப்பு

மழை பெய்து வரும் நிலையில் வன்னியில் பல பகுதிகளிலும் இலையான் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிராமப் புறங்களில் உள்ள வீடுகளில் இலையான் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

வன்னியில் கிராமங்களில் உள்ள மக்கள் பல பேர் தறப்பாள், தகரக் கொட்டகைகளிலேயே அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த மக்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் வீட்டுத் திட்டம், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் கூட இன்னும் வழங்கப்படவில்லை.

இந்த மக்கள் மழை காலங்களில் பெரிதும் சிரமம் அடைகின்றனர். இவர்களில் பாடசாலைச் சிறார்களும் இந்தக் கொட்டகைக்குள்தான் உள்ளனர்.

அடிப்படை வசதிகளற்றவர்களாக வாழும் மக்கள் மலசலகூடங்கள் இல்லாததால் வீட்டுக்கு அருகிலுள்ள பற்றைகள், வெற்றுக் காணிகள் போன்றவற்றை மலசலம் கழிக்கப் பயன்படுத்துகின்றார்கள்.

இவை பாதுகாப்பற்ற முறையாகவும் காணப்படுகின்றது. இப்படியான வேளைகளில் இலையான்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளமையால் மலக் கழிவுகள் உணவில் பரவும் நிலையும் உள்ளது. இதனால் நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

உரியவர்கள் உரிய முறைப்படி அடிப்படை வசதிகள் கிடைக்க உதவுவதுடன் இதனால் ஏற்படப்போகும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கவும் முன்வந்து உதவவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-426)

# ஒட்டுசுட்டான் உபஅஞ்சல் அலுவலக கட்டடம் திறப்பு

ஒட்டுசுட்டான், நவ.1

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதிக்கான உபபிரதேச சபை அலுவலகக் கட்டடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தலைவர் ஆனந்த குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் ஒட்டுசுட்டான் உப பிரதேச சபை அலுவலகம் மற்றும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டடம் பொதுநூல் நிலையம் மற்றும் ஒட்டுசுட்டான் மத்திய மருந்தக வளாகத்தில் அமைக்கப்பட்ட வைத்தியர்கள் ஓய்வெடுக்கும் அறைக் கட்டடம் என்பன திறந்து வைக்கப்பட்டன. (ம- 500)

# போக்குவரத்து வசதிகள் எதுவுமின்றி சிரமம் அடையும் கல்விளான் மக்கள்

துணுக்காய், நவ.1

துணுக்காய் பிரதேச கல்விளான் கிராமத்துக்குப் பேருந்து சேவை இன்மையால் மாணவர்களின கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்விளான் கிராமமானது மிகவும் பின் தங்கியதாகும். இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்துக்குப் பேருந்துசேவைகள் இன்மையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையும் நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் நோயாளர், அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் பல நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

கல்விளான் பகுதியில் மீளக் குடியமர்ந்த 217 குடும்பங்களைச் சேர்ந்த 600 இற்கு மேற்பட்டவர்கள் உள்ளனர்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த உயர்தர மாணவர் மல்லாவி மத்திய கல்லூரியில் கல்வி கற்றும் வருகின்றனர்.

கல்விளான் பகுதியில் இருந்து மல்லாவிக்கு எட்டுக் கிலோமீற்றர் தூரம் வரை செல்ல வேண்டிய நிலைமை உள்ளது.

இந்த நிலையில் சீரான போக்குவரத்து இன்மையால் பாடசாலை மாணவர் தொடக்கம் நோயாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் வரை பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

வலைப்பாடு பகுதியில் இருந்து வெள்ளாங்குளம் ஊடாக வவுனியா வரும் பஸ்ஸை நம்பியே இவர்கள் இருக்க வேண்டிய நிலைமை உள்ளது.

காலை 6 மணிக்கு இந்தப் பாதையூடாகச் செல்லும் இந்த பஸ் மாலை 5.30 மணிக்கு மீண்டும் திரும்புகின்றது.

இதனால் அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா என்று இப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (ம- 415)


# நாடெங்கிலும் உள்ள இளம் சாதனையாளர்களை இனங்கண்டு அங்கீகாரம் அளிக்கும் அங்கர்

பொன்டேரா நிறுவனத்தின் ஒரு வர்த்தக நாமமான அங்கர் தனது அங்கர் சாதனையாளர்கள் சவால் என்ற முன்னெடுப்பின் ஊடாக நாடெங்கிலும் உள்ள சாதனையாளர்களை வெளிக்கொணரும் தேடலை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

சிறுவர்கள் மத்தியில் உள்ள பல்வேறு உள மற்றும் உடல் ரீதியான ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் இச்சவால் அமையப்பெற்றுள்ளதுடன், அவர்கள் மத்தியில் உள்ள ஆற்றல்களை உச்ச அளவில் உபயோகிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒவ்வொரு சிறுவர்களும் 'சாதனையாளர்' என்ற அந்தஸ்தை அடையும் இலக்கை வெற்றிகரமாக்கச் செய்கின்றது. இலங்கையெங்கிலும் உள்ள சிறுவர்களையும் இச்செயற்பாடுகளில் பங்குபற்றுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் தங்களது திறமைகள், ஆற்றல்கள் மற்றும் சாதனைகளை வெளிக்கொணருவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டு, தமது சிறுபராயத்தைக் களிப்புடன் அனுபவிப்பதற்கு இடமளிக்கின்றது.

பொன்டேரா பிராண்ட்ஸ் லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான அச்யுத் காசிரெட்டி கூறுகையில், ''சிறுவர்களே நாட்டின் எதிர்காலச் சிற்பிகள். தமது பிள் ளைக்கு மிகச் சிறந்தவற்றை வழங்கி சமுதாயத்தில் அவர்களை மிளிரச் செய்யவேண்டும் என்பதே ஒவ்வொரு அன்னையரினதும் பேரவாவாக அமைந்துள்ள தென நாம் நம்புவதுடன், இச்சவாலுக்குத் தீர்வளிக்கும் வகையில் சிறுவர்கள் திறம்பட மிளிர்ந்து தங்களுடைய ஆற்றல்களை வெளிக்கொணருவதற்கு உரிய இடமளிக்கவேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். சாதனையாளர்கள் சவால் முன்னெடுப்பானது பங்குபற்றுபவர்கள் அனைவரினதும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதை ஊக்குவிக்கின்றது. சிறுவர்களும் அவர்களது பெற்றோர்களும் இணைந்து களியாட்ட மற்றும் கல்வி அறிவூட்டல் அம்சங்களில் ஈடுபடும் தனித்துவமான ஓர் அனுபவத்தை இது அவர்களுக்கு வழங்குகின்றது.''- என்றார்.

அங்கர் சாதனையாளர்கள் சவால் முன்னெடுப்பானது காலி, கண்டி, குருநாகல், அநுராதபுரம், கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது. சிறுவர்கள் பங்குபற்றுகின்ற புதுமையான மற்றும் ஆர்வமூட்டுகின்ற சவால்கள் இந்நிகழ்வின் செயற்பாடுகளில் உள்ளடக்கப்படவுள்ளன. முறையான போஷாக்கின் முக்கியத்துவம் மற்றும் சிறுவர்கள் உச்ச ஆற்றலை எட்டுவதற்கு அவர்களை எவ்வாறு




ஊக்குவிப்பது போன்ற விடயங்கள் உள்ளடங்கிய பெற்றோர்களுக்கான அறிவியல் கருத்தரங்குகளும் முன்னணி போஷாக்கு ஆலோசனை நிபுணர்கள் மற்றும் உளவியல் வைத்திய நிபுணர்களால் முன்னெடுக்கப்படவுள்ளன. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்க ளாக தங்கத் தரத்திலான போஷாக்கை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளதன் மூலமாக பூரண வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மிகச் சிறந்த போஷாக்கைத் தமது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்ற இலங்கை அன்னையர்களின் அபிலாஷைகளுக்கு அங்கர் பூரண ஆதரவளித்து வந்துள்ளது. இந்த சாதனையாளர்கள் சவால் முன்னெடுப்பின் ஊடாக ஒவ்வொரு சிறுவர்களையும் சாதனையாளர்களாக மிளிரச் செய்வதில் முறையான போஷாக்கு மற்றும் ஊக்குவிப்பை உறுதிசெய்வதில் அங்கர் தொடர்ந்தும் அன்னையர்களின் பங்காளராக இணைந்துள்ளது.'

# எமிரேட்ஸிடமிருந்து விற்பனை சாதனை விருதை வென்றுள்ள இலங்கை



எமிரேட்ஸ் விமானசேவையில் இலங்கைக்கான பயணிகள் விற்பனை நடவடிக்கைகள் 2010/11 ஆண்டுக்கான சிறந்த விற்பனை சாதனைவிருதை வென்று நிறுவனத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. டுபாயை தளமாகக் கொண்டு செயற்படும் விருது வென்ற சர்வதேச விமான சேவையான எமிரேட்ஸின் பிராந்திய மாநாட்டில் இலங்கைக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விமான நிறுவனத்தின் வருடாந்த வரவு-செலவுத் திட்ட மட்டத்தைத் தாண்டி வருவாய்த் துறையில் சாதனை படைத்தமைக்காக இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்தச் சாதனையானது கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் 31% அதிகரிப்பை பிரதிபலிக்கின்றது.

இந்த காலப்பகுதியில் முக்கியமான செலவுப் பிரிவுகளில் மேற்காசியா மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் கொழும்பு அலுவலகம் கணிசமான செலவுகளைக் குறைத்தும் சாதனை படைத்துள்ளது. அதேநேரம், ஆற்றல்மிக்க சந்தைப்படுத்தல் பிரசாரங்களிலும் திறமையை வெளிக்காட்டியுள்ளமை இந்த விருதை வெல்வதற்கான பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

இந்தச் சாதனை குறித்து கருத்து வெளியிட்ட எமிரேட்ஸின் கொழும்பு அலுவலக விற்பனை முகாமையாளர் தேவிகா எல்லே பொல, "இந்த விருதானது உண்மையில் மகிழ்ச்சி அளிக்கின்றது. காரணம், பொதுவாக சவால் மிக்க ஒரு சூழலில் கட்டண அதிகரிப்பு தொடர்பான போட்டி நிலை அதிகரித்துள்ள பின்னணியில் எமது சேவையை இந்த விருது அங்கீகரித்துள்ளது. குறிப்பாக எரிபொருள் விலையேற்ற நிலையில் இந்தச் சாதனையை அடையக் கிடைத்துள்ளமை பெரு மகிழ்ச்சியளிக்கின்றது" என்றார். கொழும்பு அலுவலகத்தில் விமான பயணத்திற்கான மூன்று பிரிவுகளிலும் கணிசமான வளர்ச்சி காணப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும் என்று அவர் மேலும் கூறினார். (த)

# நாட்டின் பொருளாதாரத் துறையில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட வேண்டும்

பொருளாதார நிபுணர்கள் அரசின் யுத்த வெற்றியை ஒரு சிறந்த உதாரணமாக எடுத்துக் கொண்டு பொருளாதாரத் துறையில் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்று தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா கூறினார்.

SLIM நிறுவனத்தால் Waters Edge இல் நடத்தப்பட்ட விருது வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்று சர்வதேசம் கூறிக் கொண்டிருந்த வேளையில் தான் நாம் புலிகளுடன் சண்டையிட்டு அவர்களைத் தோற்கடித்தோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளைத் தோற்கடிப்பதற்கான முழுப் பொறுப்பையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தார். அவர்கள் இருவரும் கூட்டாக இந்தச் சவாலை எதிர்கொண்டு வெற்றியடைந்தனர்.

முடியாமை என்று ஒன்றுமில்லை என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். ஜனாதிபதி முதலில் அவர் மீது நம்பிக்கை வைத்தார்.பிறகு கோத்தபாய ராஜபக்ஷ, முப்படையினர் மற்றும் நாட்டுமக்கள் ஆகியோர் மீது நம்பிக்கை வைத்தார்.இறுதியில் வெற்றியடைந்தார். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சுற்றுலாத்துறையைப் பாதுகாக்க நாம் எவ்வாறான


பிரதி அமைச்சர்
பைசர் முஸ்தபா

நடவடிக்கைகளை எடுத்தோம் என்பதை நான் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையில் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றிருந்த சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்களையும் மறைமுகமாக வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருந்த அதிகமானோரையும் பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டோம். எமது சர்வதேச விமான நிலையத்தின் மீதும் மக்களின் இலக்குகளின் மீதும் குண்டுகளைப் போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் நாம் சுற்றுலாத்துறையை மேம்படுத்திக் கொண்டிருந்தோம்.

ஒரு சுற்றுலாப் பயணிக்கு அவர் சுற்றுலாச் செல்லத் தீர்மானிக்கும் இடத்தின் பாது காப்பு மிக முக்கியம். இதன் அடிப்படையில் ஊடகங்கள், "இலங்கை ஒரு பாதுகாப்பான நாடா'' என்ற கேள்வியை எழுப்பின.பயங்கரவாதம் என்பது உலகம் பூராகவும் வியாபித்திருக்கும் ஒன்று. இலங்கை அதன் சிறிய பங்கைக் கொண்டுள்ளது என்று நாம் பதிலளித்தோம்.

அத்தோடு நின்றுவிடாது இந்தியா,மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பா போன்றே நாடுகளின் மீது எமது கவனத்தைச் செலுத்தி அந்தநாடுகளில் எமது சுற்றுலாத்துறையை மேம்படுத்தினோம். அவற்றில் நாம் வெற்றிகண்டோம். இன்றும் கூட அந்த நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகின்றனர். விருதைத் தட்டிச் செல்லத் துடிப்பவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் இதை உங்களுக்குக் கூறுகிறேன். அதற்காக நீங்கள் உங்கள் மீதும் நீங்கள் சேர்ந்து வேலை செய் யும் அணி மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும். உங்கள் வாடிக்கையாளர்களுக்கு உங்கள் பலத்தையும் பலவீனத்தையும் கூறிவிடுங்கள். உள்வாங்குங்கள். அவர்களுக்கு சிறந்தது எது என்று அவர்கள் நன்கு அறிவர். இந்த நாட்டின் சிற்றுலாத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்காக நாம் எவ்வாறு சந்தைகளைத் தெரிவு செய்தோமோ அதேபோல் வர்த்தக நிபுணர்களாகிய நீங்களும் தந்திரோபாயரீதியில் வெற்றிவாய்ப்புள்ள சந்தைகளைக் குறிவைத்து சாதனை நிகழ்த்த வேண்டும்- என்றார்.

# CIFL நிறுவனத்தின் நுண்கடன் திட்டம்

சென்றல் இன்வெஸ்ற் மென்ட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி (CIFL) நிறுவனத்தின் மைக்றோ பினான்ஸ் பிரிவு கடந்த 25 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்துக்கான முதல் நுண் கடன் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. இந்த நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொட்டடி கிராம சேவையாளர் நிலையத்தில் மைக்றோ பினான்ஸ் யாழ் .மாவட்ட வெளிக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கஜமுகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கொழும்பு CIFL நிறுவன மைக்றோ பினான்ஸ் பிரிவின் இயக்குநர் எல்.ரட்ணசூரியா பிரதம விருந்தினராகவும், மைக்றோ பிரிவின் ஒருங்கிணைப்பாளர் அன்ரன் ஜோய், யாழ். பிரதேச முகாமையாளர் இ.ராஜமகேந்திரசிங்கம், கொட்டடி கிராம சேவையாளர் சேந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்தத் திட்டத்தில் வேலணை, கொட்டடி, ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 48 சுய தொழில் முயற்சியாளர்கள் இக்கடனைப் பெற்றனர். (த)




இலங்கையின் மாபெரும் நவநாகரிக வலையமைப்பான நோலிமிட் இந்த வருடம் எசல பெரஹெரவுக்கு அனுசரணை வழங்கியதில் பெருமைப்படுகிறது. எசல பெரஹெர ''தந்தத் திருவிழா'' என பொதுவாக அழைக்கப்படுகிறது. மேலே காணப்படும் படத்தில் நோலிமிட்டின் பொது முகாமையாளர் ஹசன் அம்ஜாட் தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல பண்டாரவிடம் நன் கொடையளிப்பதைக் காணலாம். அவருக்கருகில் நோலிமிட் பிரதிநிதிகளான பண்டகசாலை முகாமையாளர் நிபாஉன், பிராந்திய முகாமையாளர் இம்ரான் மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி முகாமையாளர் நொசல் கொட்டிகல ஆகியோர் காணப்படுகின்றனர்.

# மாத்தளைப் பிரதேச பெருந்தோட்டங்களில் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா

## பணிபுரிந்த தொழிலாளர்கள் நிர்க்கதி

மஸ்கெலியா, நவ.1

மாத்தளை - அம்பதன்ன பிரதேசத்தில் அரச பெருந்தோட்டயாக்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களிலிருந்ததேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றன. இதனால் பலர் தொழிலை இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று அவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்கள் விசனிக்கின்றனர்.

இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக கடந்தவாரம், அந்தப் பிரதேசத்தில் எஞ்சியிருந்த ஒப்பதென்ன தொழிற்சாலையும் மூடப்பட்டு உபகரணங்களும் விற்பனை செய்யப்பட்டுவிட்டன என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேபோல் கம்மடுவ, மாகஸ்கந்த, கரகதென்ன, நாகல, எலகல ஆகிய தோட்டங்களிலிருந்த தொழிற்சாலைகளும் ஏற்கனவே மூடப்பட்டு அவற்றிலிருந்த இயந்திரங்களும் விற்பனை செய்யப்பட்டுவிட்டன.

தற்போது இந்த ஆறு தோட்டங்களிலும் பறிக்கப்படும் கொழுந்துகள் அண்மையிலுள்ள கெலாபொக்க தோட்டத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் தேயிலைக் கொழுந்துகள் பழுதடைந்து தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

தேயிலைத் தொழிற்சாலைகளை மூடியமையானது இலங்கையின் தேயிலை உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இழப்பாகும் என்று தோட்ட மக்களும், அங்கு கடமைபுரிகின்ற உத்தியோகத்தர்களும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இனியும், இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படக்கூடாது என்று அரசு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# ஆழ்கடல் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

அம்பாறை,நவ.1

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாகவும் திடீரென ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினாலும் ஆழ்கடல் மீனவர்கள் தங்களது மீன்பிடிப் படகுகளை வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டு சென்று தரித்து வைக்கும் தேவையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடிப் படகுகளை வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் தரித்து வைத்துவிட்டு மீண்டும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கல்முனைப் பிரதேசத்திற்கு வரவேண்டியுள்ளதால் மீனவர்களுக்கு பல அசௌகரியங்களும் மேலதிக செலவுகளும் ஏற்படும் நிலை காணப்பட்டது.

இந்தப் பிரச்சினையை அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் துறைமுக அதிகார சபையின் தலைவர் கலாநிதி விக்கிரமவை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறியதன் பயனாக, மீனவர்களின் மீன்பிடிப்படகுகளை ஒலுவில் துறைமுகத்தில் தற்காலிகமாகத் தரித்து வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (ச)



ஆயிரம் பாடசாலைகளை சகல வசதிகளுடன் அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ், மட்டக்களப்பு, முதலைக்குடா மகாவித் தியாலயத்தில் முதலாவது பாடசாலைக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. இந்த நிகழ்வில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# போகம்பரை சிறைச்சாலையில் தூக்குமேடை புனரமைப்பு

கண்டி,நவ.1

போகம்பரை சிறைச்சாலையில் தூக்கு மேடையும் அது அமைந்துள்ள இடமும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பல வருடங்களாக மூடப்பட்டுக் கிடந்த தூக்குமேடையும், அறை யும் இப்போது சுத்திகரிக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு வருகின்றன என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. தற்சமயம் மரண தண்டனை விதிக்கப்பட்ட 118 கைதிகள் போகம்பரை சிறைச்சாலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெடிபொருளுடன் ஒருவர் கைது

அப்புத்தளை,நவ.1

12 அங்குல குழல் துப்பாக்கிக்குப் பயன் படுத்தப்படும் குண்டொன்றை மறைத்து எடுத்துச்சென்ற நபரொருவரை வெலிமடை பொலிஸார் கடந்த சனிக்கிழமை போகஹகும்புரவில் வைத்து கைது செய்தனர்.

இந்த நபர் வீதியைக் கடக்க முற்பட்டபோது ரோந்துசேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டபோதே கைதுசெய்யப்பட்டார்.

# மஞ்சள் கோட்டில் பாதையைக் கடந்த பெண் மரணம்

கட்டுகஸ்தோட்டை,நவ.1

கட்டுகஸ்தோட்டை, அக்குறணை பிரதேசத்தில், மஞ்சள் கோட்டில் பாதையைக் கடந்த பெண்ணொருவர் பஸ்ஸினால் மோதுண்டு மரணமாகியுள்ளார் என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரம்புக்வெல வீதி, பொக்கவல பிரதேசத்தைச் சேர்ந்த பொடிமெனிக்கே என்ற பெண்ணே இவ்வாறு மரணமாகியுள்ளார். விபத்தில் பலத்த காயமுற்ற இந்தப் பெண் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.

பஸ்சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தேசப்பிரிய ஜயதிலகவின் தலைமையில் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

# மட்டக்களப்பில் தொடர்ந்து மழை; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



மட்டக்களப்பு,நவ.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி, செங்கலடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல இடங்களில் வெள்ளமும் ஏற் பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 140 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.சிவதாசன் தெரிவித்துள்ளார். (ச)

# மூதூர் உபதொழில் அலுவலகத்தை மீண்டும் திறக்க மக்கள் கோரிக்கை

மூதூர், நவ.1

மூதூர் பிரதேசத்தில் பல வருடங்களாக இயங்கிவந்த உப தொழில் அலுவலகத்தை மீண்டும் திறக்குமாறு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1962 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த உபதொழில் அலுவலகம் மூதூர் பிரதேச தொழில் பிரச்சினைகளைக் கவனிப்பதில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வந்தது. பின்னர் பல வருடங்களாக மூடப்பட்ட நிலையில் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை மீண்டும் இயங்கி வந்தது. தற்போது மீண்டும் மூடப்பட்ட நிலையில் உள்ளது.

இதனால் தொழிலாளர்கள் சில பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். எனவே, இந்த அலுவலகத்தை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# தமிழரைப் பாதிக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

வெல்லாவெளி,நவ.1

வளமான காணிகளைப் பிறருக்கு வழங்குதல், திட்டமிட்ட குடியேற்றம், மத்திய அரசின் முறைகேடான காணிப்பங்கீடு, ஒருபக்கச்சார்பான காணிப்பங்கீடுபோன்ற தமிழ்மக்களைப் பாதிக்கும் செயற்பாடுகளை கிழக்கு முதலமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் கிழக்கு முதலமைச்சருக்கு கடந்த வெள்ளிக் கிழமை அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைப்புறமாக உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான அரச காணிகளான மகாவலித் திட்டத்துக்குரிய காணி, உல்லாசத்துறைக்குச் சொந்தமான காணிகள், வன பரிபாலனத் திணைக்களங்களுக்குரிய எமது எல்லைகளிலுள்ள காணிகளைத் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்காமல் முறைகேடான முறையில் பெரும்பான்மை இனத்திற்கு மட்டும் பகிர்ந்தளித்து வருகிறது.

தமிழ்பேசும்மக்களுக்கு அரச காணியை கிழக்கு மாகாண சபை வழங்குவதற்குப் பல காணி வழங்கல் நிர்வாக முறைமையையும் சட்ட திட்டங்களையும் மத்திய அரசும் கிழக்கு மாகாணசபையும் கையாளும் நிலையில் கீழ் குறிப்பிடப்படும், அரச காணியை சகோதர இனத்திற்கு எவ்வாறு மத்திய அரசு பகிந்தளித்துள்ளது.

இந்த விடயத்தில் எந்த இடத்திலாவது காணிவழங்கல் முறைகள் கடைபிடிக்கப்பட்டனவா அல்லது மாவட்ட காணிக் குழுவின் சம்மதம் அரச அதிபர், பிரதேச செயலாளர் போன்றோரின் அனுமதி பெறப்பட்டதா அல்லது இவர்களுக்கு அறிவிக்கப்பட்டதா? கிழக்கு மாகாணசபைக்குத் தகவலுக்காகவேனும் தெரிவிக்கப்பட்டதா அல்லது கிழக்கு மாகாணசபை மூடிமறைக்க முனைகின்றதா? இதில் எவ்வித வெளிப்படைத் தன்மையும் பேணப்படவில்லை.

எல்லைப்புறங்களில் மூவின மக்களும் தொடர்ச்சியாக வாழ்ந்து வரும்போது இது தமிழர்களுக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும் : ஆனால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் காணிகள் வழங்கப்படுகின்றன. மத்திய அரசின் திணைக்கள உயர் அதிகாரிகள் மட்டுமே இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். இது ஒருவகையான மறைமுக திட்டமிட்ட குடியேற்றமாகக் காணப்படுகின்றது.

எனவே, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஒவ்வொரு நிமிடமும் தாமதிக்கும்போது பல்லாயிரக் கணக்கான காணிகள் இல்லாமல் போகும் நிலை ஏற்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
கையிலிருக்கும் பணத்தைத் தாராளமாகச் செலவு செய்து விட்டு, பிறரிடம் கடன் வாங்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். வியாபாரிகள், புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். .

**இடபம்:**
எளிதாக நினைத்த விவகாரம் ஒன்று சிக்கலாகி விடும். உங்களின் ரகசியங்களை, குறைகளை மற்றவர்கள் அறிந்து விமர்சனம் செய்யலாம். நொடிப் பொழுதில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு நெடுநேரம் காத்திருக்கலாம். வெளியூர்களில் இருக்கும் சிலரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**மிதுனம்:**
நண்பர்களால் உருவான பிரச்சினை தீர்வுக்கு வரும். மறைமுக எதிர்ப்புகள், போட்டிகள் விலகும். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் நீங்கி பாசம் கூடும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சிலரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு.

**கடகம்:**
நீண்ட நாளைய குழப்பம் ஒன்றுக்கு தீர்வு கிடைக்கும். உறவினர் ஒருவருக்காக மற்றவர்களிடம் ஜாமின் கொடுக்க நேரிடலாம். அயலார் தொடர்பான விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. குடும்ப உறுப்பினர்கள் சிலர் உங்களின் மீது சந்தேகம் கொள்ளலாம். உங்களின் தைரியமான செயலை மற்றவர்கள் பாராட்டுவர்

**சிங்கம்:**
இன்று எதிர்பாராத செலவு நேரும். பெற்றோர் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வெளியில் செல்லும் போது, சில பொருள்களை எடுத்துச் செல்ல மறந்து அவதிகளுக்கு ஆளாகலாம்.

**கன்னி:**
அதிகப் பிரசங்கித்தனமாக சில காரியங்களைச் செய்து, உறவினர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சக ஊழியர்களுடன் சில பிரச்சினைகள் தொடர்பாக வாக்குவாதம் செய்யலாம். தாயார் மீதான பாசம், நேசம் அதிகரிக்கும். நன்றி மறந்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**துலாம்:**
அனைவரிடமும் அன்பாக நடந்து கொள்வீர்கள். வழக்கத்திற்கு மாறாக சீக்கிரமே எழுந்து சில வேலைகளைச் செய்யலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த நபரை இன்று திடீரெனப் பார்க்கலாம். சந்தோஷமான செய்தியைக் கேட்கலாம்.

**விருச்சிகம்:**
இழப்புகள், ஏமாற்றங்களைத் தவிர்க்க எதிலும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். அயலார் சிலர் சொல்லும் யோசனைகளை பொறுமையாகக் கேட்பீர்கள். நீண்ட நாள்களாக தள்ளிக் கொண்டே வந்த வெளியூர் பயணத்தை மேற்கொள்ளலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**தனுசு:**
பிடிவாதமாக இருந்து, நினைத்த வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வீடு, மனை வாங்கும் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். ஓய்வாக இருக்க நினைத்தாலும் அது முடியாத வகையில் ஏதாவது வேலைகளைச் செய்யலாம். நாடி வந்த ஒருவருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். பெண்கள் வகையில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம்.

**மகரம்:**
பிறரை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். சில விடயங்களை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். அயலாருக்காக சிறிதளவு பணத்தைச் செலவிடலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம். தொழில் ரீதியாக சிலர் உதவி நாடி வரலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம்.

**கும்பம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பணம் இருந்தாலும், அதை செலவழிக்க மனம் வராது. மற்றவர்கள் உங்களின் செயற்பாடுகளைப் பாராட்டுவர். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். சில வேலைகளை அலைச்சல் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.

**மீனம்:**
சிலரிடம் உல்லாசமாக, கம்பீரமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை மேம்படும். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். உங்களுக்கு வேண்டிய வேலை ஒன்றை முடிக்க மற்றவர்களை நச்சரிப்பீர்கள். காத்திருப்புகள் நேரும்

# தமிழ் மக்... தலைவிதி ... கூட்டமை...

இலங்கைத் தமிழினத்தின் கேள்விக்கிடமற்ற தலைமை நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது வந்து விட்டது. இது, ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வகித்ததைப் போன்ற வரலாற்றுப் பாத்திரம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த இடத்தை அடைந்த வழிமுறைக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த இடத்தை அடைந்த வழிமுறைக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுகள் இருக்கலாம்.

அன்று விடுதலைப் புலிகள் மீதும், இன்று தமிழர் கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்களுக்கு ஆழமான அதிருப்திகள் இருந்திருக்கலாம், இருக்கலாம்.

ஆனால் - தவிர்க்க முடியாத உண்மை என்னவெனில் - அன்று விடுதலைப் புலிகள் இருந்த இடத்தில் இன்று கூட்டமைப்பு இருக்கின்றது.

தமிழர்கள் விரும்பி வாக்களித்திருந்தாலும், வேறு வழியின்றி வாக்களித்திருந்தாலும் - அன்று விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் சேர்ந்திருந்த ஒரு வரலாற்றுப் பொறுப்பு, இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் சேர்ந்திருக்கின்றது.

அது என்னவெனில் - தமிழ்த் தேசிய இனத்தை இன்னொரு தடவை நடுத் தெருவில் கைவிட்டுச் சென்று விடக் கூடாத வரலாற்றுப் பொறுப்பு.

வரலாற்றுப் பொறுப்பு எனும் போது - தமிழினத்துக்கு உரித்தான அரசியல் உரிமைகளைப் பெற்றெடுத்துவிடுவதை மட்டும் குறிப்பிடவில்லை.

அவ்வாறு அவற்றைப் பெற்றெடுக்க முடியாது போய்விட்டால் கூட, அவற்றைப் பெற்றெடுப்பதற்கான போராட்டத்தைப் பொருத்தமான முறையில், பொருத்தமான அடுத்த தலைமுறைக் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போக வேண்டிய பொறுப்பையும் சேர்த்தே நான் குறிப்பிடுகிறேன்.

குறிப்பாக, அந்தப் பொறுப்பு, இப்போது, இராஜவரோதயம் சம்பந்தர் அவர்களது தோள்களில்தான் உள்ளது.

ஏனென்றால் - அச்சுறுத்தல்கள், அறிவுறுத்தல்கள் ஏதுமற்று வாக்களித்த தமிழ்த் தேசிய இனம், தமது தலைமையாகத் தேர்ந்தெடுத்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையிலும், அனைத்துலக சமூகத்தை விட்டால் எமக்கு நீதியைப் பெற்றுத்தர வேறு யாருமே இப்போது இல்லை என்ற நிலையில், 'தமிழர்களின் தலைமை' என அந்த வல்லரசுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள தமிழ்த் 'தேசிய' கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையிலும்,

எவர் ஏற்றுக்கொண்டாலும் ஏற்காது விட்டாலும், அவரே விரும்பினாலும் விரும்பாது விட்டாலும், என்னுடைய கருத்து என்னவெனில் - இன்று. நடைமுறையில் அவர் தான் தமிழினத்தின் 'தேசியத் தலைவர்'.

நீண்ட பழுத்த அரசியல் அனுபவமும் இராஜதந்திர ஞானமும் மிக்க சம்பந்தன் ஐயா அவர்கள் தமிழினத்தின் வரலாற்றில் வீற்றிருக்கப் போகும் இடம் எது என்பதை, இதுவரை அவர் எந்தப் பாதையில் எவ்வாறு நடந்து வந்தார் என்பது தீர்மானிக்கப்போவதில்லை.

இனி அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவ்வாறு வழி நடத்திச் சென்று எவருடைய கையில் என்னவிதமாக ஒப்படைத்துவிட்டுச் செல்லப் போகின்றார் என்பதுவும், இனி அவர் தமிழினத்தை எந்தப் பாதையில் அழைத்துச் சென்று, எந்த இடத்தில் எந்த வடிவத்தில் விட்டுச் செல்லப் போகின்றார் என்பதுவுமே தமிழினத்தின் வரலாற்றில் அவருக்கான இடத்தைத் தீர்மானிக்கப்போகின்றன.

* * *

இப்போதையைப் போலவே - 2002 ஆம் ஆண்டிலும், இதே அனைத்துலக சமூகத்தின் அனுசரணையுடன்தான் தமிழினம் தனக்கான அரசியல் அதிகாரங்களைப் பெற்றெடுக்க முயற்சித்தது.

ஒரே வேறுபாடு என்னவெனில் - அப்போது, ஆயுத பலத்தோடு இருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் தலைமைப் பொறுப்பிலும் இருந்தது; இன்னொரு வகையில் சொல்வதானால் - தலைமைப் பொறுப்பில் இருந்த அமைப்பு ஆயுத பலத்தோடு இருந்தது.

அதனால் - உள்ளதில் சிறந்த சில அரசியல் அதிகாரங்களைப் பெறக் கூடிய ஆகக் கடைசி வாய்ப்பு 2002 ஆம் ஆண்டில்தான் தமிழினத்துக்கு இருந்தது என்பது என் கருத்து. பின்னர், அந்த வாய்ப்பு மெல்ல மெல்ல அருகி, நான்கு ஆண்டுகளில் முற்றாகவே அற்றுப் போனது.

அதன் பின்னரான - 2006 முதல் 2009 வரையான கால கட்டம் ஒரு பொருட்டே அல்ல: ஏனெனில், அது - நிர்ணயிக்கப்பட்ட ஒரு முடிவின் நிகழ்வுக்காகப் பொறுமையோடு காத்திருந்தவர்களுக்கும், அந்த முடிவை நிகழாமல் தடுப்பதற்காகப் பொறுமையிழந்து பாடுபட்டவர்களுக்கும் இடையிலான இழுபறியாகவே கழிந்து போனது.

2009 மே மாதத்தில் - நிர்ணயிக்கப்பட்ட அந்த முடிவு தீர்மானமாக நிகழ்ந்த போது ஒரு மிகப் பெரிய படையெடுப்புக்குள் சிக்கிப் பல்லாயிரம் பேரைப் பலி கொடுத்த பின்பு, தமிழ்த் தேசிய இனம் நடுத்தெருவுக்கு வந்தது.



இந்த யதார்த்தத்தில் - எங்களால் செய்ய முடிந்த, முடிகின்ற ஆகக் கூடிய அரசியற் செயற்பாடாக நடக்கின்ற தேர்தல்களில் எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அவர்களை எமது சட்டபூர்வமான பிரதிநிதிகள் ஆக்கிவிட்டு - அதன் மூலம் உலக சமூகத்தின் அங்கீகாரத்தையும் அவர்களுக்கு நாமே பெற்றுக்கொடுத்து விட்டு - அவர்கள் உருப்படியாக ஏதாவது செய்வார்கள் எனக் கண்கள் பனிக்கக் காத்திருக்கிறோம்.

இப்போது, எங்களது சார்பில், அவர்களை அனுப்பி, மீண்டும் அனைத்துலக சமூகத்திடம் நாம் கையேந்தி நிற்கின்றோம்.

எந்த மேற்குலகும் இந்தியாவும் விடுதலைப் புலிகளை அழித்து, பல்லாயிரம் தமிழர்களைப் படுகொலை செய்வித்து, எமது இனத்தையே நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தன என்று நாம் புலம்பித்தீர்த்தோமோ, அதே மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் வாசல்களில் மண்டியிட்டு நாம் இப்போது நியாயம் வேண்டிக் கிடக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டுமே தாமும் பேசிக்கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டுமே பேசுமாறு இலங்கை அரசுக்கும் இந்த வல்லரசுகள் அறிவுறுத்துவதை எமக்குக் கிடைத்த ஓர் உலக அங்கீகாரமாக எண்ணிப் பூரித்து நிற்கிறோம்.

எமக்கு இந்த அங்கீகாரத்தை வழங்கிய உலக வல்லரசுகள், எமக்கு அரசியல் அநீதி இழைத்தவர்களைத் தண்டிப்பதுடன், எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மாற்றீடாக ஏதாவதொரு நற்பயனையும்; பெற்றுத் தருவார்கள் என ஏங்கி இருக்கிறோம்.


எமது இனத்தின் புலம்பெயர்ந்த சமூகத்தினராகிய நாங்கள் - எமது அறிவு, உணர்வு, உழைப்பு, வளம், சக்தி, நேரம் எல்லாவற்றையும் இந்த வல்லரசுகளின் காலடியிலேயே ஒட்டுமொத்தமாகக் காணிக்கையாக்கி விட்டு வரம் வேண்டித் தவமிருக்கின்றோம்.

இன்னும் தாயகத்திலேயே நிலைத்து வாழும் மக்களாகிய நாங்கள் - எங்களது எல்லா நம்பிக்கைகளையும் ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே ஒப்படைத்திருக்க - எங்களது ஆதங்கங்களையும் அபிலாசைகளையும் தமது ஆன்மாக்களில் சுமந்து செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தளகர்த்தர்கள், அதே வல்லரசுகளின் பிரதிநிதிகளுடன் எல்லா இடங்களிலும் பேசுகின்றார்கள். நாங்கள் காத்திருக்கிறோம்.

* * *

*பொறுமையாகக் கேளுங்கள். நான் தெளிவாக விளக்குகின்றேன்.* - நிதானமாகத் தொடங்கினார்

# க்களின்
# தற்போது
# ப்பிடமே



அந்த வெள்ளைக்கார அம்மையார். கொழும்புக்கான தனது நாட்டுத் தூதரகத்தில் அவர் முதன்மைப் புள்ளி.

சில நாள்கள் முன்னதாக, கொழும்பில், சிவப்பு மதுப்பழரசத்தை உறிஞ்சியபடி என்னோடு கதைத்துக் கொண்டிருந்தவர், சொல்ல வேண்டியவற்றை நான் சொல்லி முடித்த போது, கையிலிருந்த கண்ணாடிக் குவளையை மேசையில் வைத்தார்.

இலங்கை தொடர்பான தனது நாட்டின் கொள்கையைத் தீர்மானிப்பதில் அந்த அம்மையார் தவிர்க்க முடியாத அளவுக்கு முக்கியமானவர் என்பதால், எமது இனத்தின் வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிப்பதில் அவர் என்னிடம் சொல்லிய கருத்துக்கள் பெறுமதியானவை என்பது எனது கருத்து. அவர் சொல்லுவதை முதலில் கேளுங்கள். எனது கருத்தை நான் பின்னர் கூறுகின்றேன்.

*''நீங்கள் எல்லோரும் உங்கள் நாட்டை விட்டு ஓடி விட்டீர்கள். நடந்துகொண்டிருந்த போரைக் காரணம் காட்டி ஓடியவர்களே உங்களில் 90 வீதமானோர். இப்போது, வெளிநாடுகளில் சுதந்திரத்தையும் நல்ல வசதிகளையும் அனுபவித்தபடி, பிரச்சினையிலிருந்து எங்கோ தூரத்தில் இருந்தபடி, பகுதி நேர அரசியல் செய்து தமிழீழம் எடுத்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில், இந்த விதமாக அரசியல் செய்வது சில சமயங்களில் பொருந்திப் போயிருக்கலாம்; ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறி விட்டது. உங்களுக்கு இங்குள்ள யதார்த்த நிலை*

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களின் நிலைப்பாடும் தொடர்பாக தி.வழுதி இணையத்தளம் ஒன்றுக்கு எழுதியுள்ள கட்டுரை.**

*மையே விளங்கவில்லை.*

*நீங்கள் அறியத் தவறுகின்ற, அல்லது அறிய விரும்பாத ஒரு கசப்பான உண்மை இங்கு உள்ளது. அது - உங்களது இனத்தின் சனத்தொகை இந்த நாட்டில் இப்போது 10 வீதத்துக்கும் குறைவாக ஆகிவிட்டது என்பதும், இந்த நாட்டின் இரண்டாவது கூடிய சனத்தொகையினராக முஸ்லிம்கள் ஏற்கெனவே ஆகிவிட்டார்கள் என்பதும் ஆகும். பௌத்தர் அல்லாத உங்கள் எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்தாலும் கூட, நீங்கள் அவர்களில் காற் பங்குக்குக் கூட வர மாட்டீர்கள். உங்களுக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ எண்ணிக்கையே குறைந்துவிடப் போகின்றது என்றும், அது தொடர்ந்தும் குறைந்துகொண்டேயிருக்கும் என்றும் ஓராண்டுக்கு முன்னரேயே நான் உங்களிடம் குறிப்பிட்டேனா இல்லையா? இப்போது பாருங்கள் அது நடக்க ஆரம்பித்துவிட்டது.*

*உரிமைகள் வேண்டுமென்றால் நீங்கள் வெளிநாடுகளில் இருந்தபடி பழைய பாணியில் அரசியல் செய்ய முடியாது. நீங்கள் உங்கள் இனத்தை இங்கே பலப்படுத்த வேண்டும் - பொருளாதார ரீதியாகப் பலப்படுத்த வேண்டும். உங்கள் நிலத்தைப் பாதுகாக்க வேண்டும். உங்கள் பண்பாட்டைச் செழுமைப் படுத்த வேண்டும். நேர்த்தியான தேர்தல்கள் மூலம் தலைமைப் பொறுப்புக்கு மேலெழுந்து வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் ஜனநாயக ரீதியாகச் சீர்ப்படுத்தி, அதனை நீங்கள் அரசியல் ரீதியாகப் பலப்படுத்த வேண்டும். இனத்தின் மீது அவ்வளவு அக்கறை உங்களுக்கு இருக்கின்றது என்றால் வெளிநாட்டு வசதிகளைத் தூக்கி எறிந்துவிட்டு உங்கள் வளங்களோடு இங்கே வரவும் தயாராக இருக்க வேண்டும். அதை விடுத்துவிட்டு, நீங்கள் எங்கோ தூரத்தில் இருந்து கொண்டு remote control அரசியல் செய்தபடி, இங்குள்ள மக்களுக்கு உரிமை பெற்றுத்தருமாறும், ராஜபக்ஷ குடும்பத்துக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்குமாறும் எங்களிடம் கேட்பதில் எந்தப் பயனும் இல்லை...*

*ஏனென்றால்,...''* ஒரு கணம் நிறுத்தி, அவர் தொடர்ந்தார் -

*''ஏனென்றால், உங்களுடைய உரிமைகள் அல்ல, எமக்கு எங்களுடைய நலன்கள் தான் முக்கியமானவை.''*

கண்ணாடிக் குவளையை எடுத்து, மதுரசத்தை இன்னொரு தடவை உறிஞ்சிய பின்பு தொடர்ந்தார்.

*''இரண்டு விடயங்களை நீங்கள் புரிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். உங்களோடு இருக்கும் நட்பின் காரணமாகத்தான் நான் வெளிப்படையாகப் பேசுகின்றேன். திறந்த மனதோடு விடயங்களை அணுகக் கூடிய உங்கள் நண்பர்களோடு இவற்றை நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். முதலாவது, இங்கு நடந்த, இப்போதும் நடக்கின்ற நிகழ்வுகள் எவையுமே எமக்குத் தெரியாதவை அல்ல.*

*இரண்டாவது, தெரிய வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளும் போது, அந்த நிகழ்வுகளின் விளைவுகள் எமது நாட்டின் நலன்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றி மட்டும் தான் நாம் யோசிப்போம்.*

*ஒரு நாடு எமக்கு மூலோபாய முக்கியத்துவம் 'stretegically important' உள்ளதாக இருக்கும் போது - அந்த நாட்டை எமது செல்வாக்குக்குள் வைத்திருப்பதற்கு ஏற்ற அக மற்றும் புறக் காரணிகளைக் கண்டறிந்து அப்படி எவையும் அங்கு இல்லை எனில் புதியவற்றை நாமே உருவாக்கி, அல்லது போதிய அளவுக்கு இல்லையெனில், இருப்பவற்றைப் பெரிதாக்கி அவற்றை எமது நலன்களுக்காக எவ்வாறு எங்கு பயன்படுத்துவது என்ற வழிகளை வகுத்த பின்பு எமது கால்களைப் பதிப்போம்.*

*இலங்கையைப் பொறுத்தவரை, 2002களில், அவ்வாறு நாம் கருத்தில் கொண்ட ஒரு தீர்க்கமான காரணியாக விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தது. ஆனால், அவர்களையும் பங்காளிகளாகச் சேர்த்துச் செல்ல நாம் எடுத்த முயற்சிகள் பிரபாகரனின் விட்டுக் கொடாத் தன்மைகளால் தோல்வியடைந்ததுடன், அவர் செய்துவிட்ட தவறுகளாலும் புலிகள் இயக்கம் இறுதியில் அழிந்தே போன அந்தப் பழைய கதைகளுக்குள் போக வேண்டிய தேவை இப்போது இல்லை.*

*இலங்கையில் இப்போது நாம் கருத்தில் எடுக்க வேண்டிய முக்கிய காரணிகளாக இரண்டு விடயங்கள் இருந்து வருகின்றன: ஒன்று, முடிவின்றித் தொடரும் இன ரீதியான அரசியல் பிணக்கு. அடுத்தது, தொடர்ந்து வளர்ந்து செல்லும் அந்த இனங்களுக்கு இடையிலான சனத்தொகை வேறுபாடு. இவற்றோடு இப்போது இன்னொரு விடயமும் சேர்ந்திருக்கிறது - இலங்கை அரசு போரை முடித்த விதம்.*

*இந்த மூன்று காரணிகளையும் வைத்துக்கொண்டு தான் நாம் எமது காய்களை நகர்த்த வேண்டும்.*

*(வளரும்)*

*நன்றி: புதினப்பலகை*



## போனால் போகட்டும் போடா



எத்தனையோ தோல்விகள், எண்ணற்ற ஏமாற்றங்கள், எவ்வளவோ அவலங்களைச் சந்தித்தும் அசராத அசையாத இமயமலை இதயங்களை ஏன் நம்மவர்கள் உணர மறுக்கிறார்கள். ஆபிரஹாம் லிங்கன் சந்திக்காத அவமானங்களா? ஏமாற்றங்களா? பேரறிஞர் அண்ணாவும், பெருந் தலைவர் காமராசரும் தேர்தலில் தோற்கவில்லையா? தோல்வியை இயற்கை என்று ஏற்கவில்லையா? அப்படியிருக்க, சின்ன நூல் கண்டுகளில் சிறைப்பட்டுப் போகிற சிறு மனிதராக நாம் இருக்கலாமா? போனால் போகட்டும் போடா....என்று நெஞ்சை நிமிர்த்த வேண்டாமா?

எந்தக் கொடிய இரவுக்கும் ஒரு நல்ல விடியல் உண்டு.எந்தக்கறுப்பு மேகத்துக்கும் ஒரு வெள்ளி விளிம்பு உண்டு என்று புரிந்து கொள்வது அவசியம். அதைவிட எந்தவொரு நிகழ்வையும் நாம் எப்படி எடுத்துக்கொள்கிறோம் என்பதே முக்கியம்.

ஒரு கிராமத்தில் ஒரே சமயத்தில் இரண்டு குடும்பங்கள். சிரமப்பட்டு சுமாரான வீடு கட்டினார்கள். அந்தக் காலத்து மண் வீடு அவை. வறுமையோடு போராடி வீட்டைக் கட்டி முடித்து இருந்தார்கள். கிருஹப்பிர வேசத்துக்கு ஒருவாரம் முன்பாக, தொடர்ச்சியாக அப்படி ஒரு மழை அடித்தது.. பாவம்... அவர்கள் இருவரும் கட்டிய இரண்டு வீடுகளுமே இடிந்து விழுந்தன. அந்தச் செய்தி கேட்ட அதிர்ச்சியிலேயே ஒரு வீட்டுக்காரர் இறந்து போனார். ஆனால் இன்னொருவர் கிராமத்தில் எல்லோருக்கும் இனிப்பு வாங்கிக் கொடுத்தார். ''கட்டிய புது வீடு இடிந்து போய்விட்டது... இனிப்பு தருகிறீர்களே என்ன வைத்தியமா?'' என்று ஊரே அவரை ஏசியது.

நிதானமாக அவர் சொன்னார் '' நல்ல வேளை நாங்கள் குடி பெயர்ந்து போகும் முன்பே இடிந்து விட்டது. ஒரு வாரம் கடந்து நாங்கள் குடிபெயர்ந்த பின்னர் இடிந்திருந்தால் என் ஐந்து பிள்ளைகள், என் மனைவி நான் என்ன கதிக்கு போயிருப்போம். முன்னரே இடித்து உதவிய கடவுளுக்கு நன்றி '' என்றபடி அவர் கொடுத்தார்.

சம்பவம் ஒன்று..... அனுபவம் வேறு வேறு. சம்பவம் உயர்த்தாது. சம்பவம் பற்றிய உங்கள் அனுபவம்தான் உங்களை உயர்த்த முடியும்.

சோக்ரட்டீசுக்கு விஷம் கொடுத்து கொல்ல வேண்டும் என்று தண்டனை தரப்பட்டது. அரளிக் கொட்டைகளை அம்மியில் அரைப்பவன் அழுதபடியே தாமதப்படுத்தினான். ''கடமையை ஒழுங்காகச் செய்...... அநாவசியமாகத் தாமதப்படுத்தாதே.... பத்து நிமிடம் கூடுதலாக இருந்து என்ன நடந்து விடப்போகிறது'' என்று அவசரப்படுத்தினார் சோக்ரட்டீஸ். விஷக்கோப்பையை நடுங்கியபடியே அவர் முன் நீட்ட, எந்தப் பதட்டமும் இன்றி சிரித்தபடி வாங்கினார் சோக்ரட்டீஸ். அவரது சீடர் கிரிட்டோ ''என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது. நாங்கள் கண்ணீர் விடுகின்றோம். மனம் துடிக்கிறது'' என்றார். சோக்கிரட்டீஸ் பெரிதாகச் சிரித்தபடி ''இதோ பார்... இதில் வருத்தம் எங்கே இருக்கிறது; நான் இறந்து விட்டால் முழுவதுமாக நான் இல்லாமல் போய் விடுவேன் என்று வைத்துக் கொண்டால் துக்கத்தை அனுபவிக்க யாரும் எஞ்சி இருக்கவில்லை என்று ஆகிவிடும்போதும் வருத்தம் வேண்டாம். இறந்த பின்னும் ஏதோ ஒன்று (ஆன்மா) எஞ்சி இருக்கும் என்று வைத்துக் கொண்டால் அப்போதும், வருத்தம் ஏன்? நான் தான் இருக்கிறேனே...எது இல்லாமல் போகமுடியுமோ அது இல்லாமல் போவதும் எது இருக்க முடியுமோ அது அப்படியே இருப்பது தானே மரணம். எப்படி இருந்தாலும் எனக்கு மகிழ்ச்சியே'' என்றார் சோக்ரட்டீஸ்.

மன்சூர் என்றொரு இஸ்லாமிய சூஃபி ஞானி... அவரைக் கண்டம் துண்டமாக வெட்டினார்கள். கண்களைப் பிடுங்கினார்கள். கற்களால் அடித்து சித்திரவதை செய்தார்கள். மனிதகுல வரலாற்றிலேயே அதிகக் கொடுமைகளுக்கு உள்ளான ஞானி மன்சூர்.

அவரது கால்கள் வெட்டப்பட்ட போது ரத்தத்தைத் தம் கைகளில் ஏந்திக் கொண்டார். கல்லால் அடித்துக் கொண்டிருந்த மக்கள் ''பைத்தியமே.... என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார்கள். ''வுஜூ செய்கிறேன்'' என்றார். முஸ்லிம்கள் வணக்கத்துக்கு முன் கைகளைக் கழுவுவதற்கு வுஜூ செய்தல் என்று பெயர். அடர்த்தியான தனது குருதியினாலேயே தமது கைகளைக் கழுவிக்கொண்டார். இரத்தத்தினால் செய்யப்பட்ட மிக உயர்ந்த உண்மையான அன்பான வுஜூ அது மட்டுமே அவரது கண்களைப் பிடுங்கியபோது அவர் ''இறைவா மன்சூர் வெற்றி பெற்றான்'' என்றார் ''பைத்தியமே நீ சாகப்போகிறாய்... நீ எப்படி வெற்றி பெற்றாய்,'' என்று கூறியபடி மக்கள் கற்களை வீசினர். ''இத்தனை எதிர்ப்பு, கொடுமையிலும் என்னில் அன்பு நிரம்பி வழிகிறது. நான் முன்பு போலவே அப்படியே இருக்கிறேன். என் பிரேமை நிஜமானது. இப்போது இறைவனுக்கு நன்றி உள்ளவனாக நிறைவாக இருக்கிறேன்.என் அன்பே என் பிரார்த்தனை... இதுவே மன்சூரின் வெற்றி'' என்றார். இப்படி மரணத்தின் எதிரே கூட சிரித்தவாறு ஆனந்தமாக இருந்த மேலோரைப் பற்றி கொஞ்சமாவது அறிந்து வையுங்கள்.

சிடுசிடுக்கிறவர்கள், சிரிக்க மறப்பவர்கள், சுள்ளென்று எரிந்து விழுகிறவர்கள், சோகமே வடிவான முகத்தோடு உலாவரும் உம்மணா மூஞ்சிகள் ஒரு போதும் ஞானம் அடைந்து விட்டவர்கள் அல்ல. அவர்கள் சராசரி ஜென்மங்கள். அதாவது சமய வியாபாரிகள்.... கடல் கொள்ளைக்காரர் போன்ற கடவுள் கொள்ளைக்காரர்கள். இவர்களிடம் கவனமாக இருங்கள்!.

**சுகி. சிவம்**

உதயன்
01 நவம்பர் 2011 செவ்வாய்க்கிழமை



ஏழாலை வாணி எழுதிய 'இப்போது சொல் நீ எப்போது வந்த கவிதை' என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா கவிஞர் கு.றஜீவன் தலைமையில் ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூத்த அறிவிப்பாளர் ராஜேஸ்வரி சண்முகம் நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் முதற் பிரதியை ஓய்வுபெற்ற அதிபர் சி.கணேசராஜா பெற்றுக் கொண்டார். கிளிநொச்சி முருகானந்த வித்தியாலய ஆசிரியரும், எழுத்தாளருமான சி.ரமேஷ் ஆய்வுரை நிகழ்த்தினார்.
(ம-38)

# உரிமைகளை மறுக்கும் சமுதாயமே தற்போது உருவாகி வருகின்றது

## யாழ். அரச அதிபர் கருத்து

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். மாவட்டத்தில் மற்றவர்களின் உரிமைகளை மறுக்கும் சமுதாயமே அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், வலுவிழந்தோர் போன்றோரின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு தின விழா கடந்த சனிக்கிழமை சங்கத்தின் விடுதிக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போதே தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் வலுவிழந்தோருக்கு சமூக சேவை அமைப்புகள் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

வெளிநாடுகளில் வலுவிழந்தோருக்கென மருத்துவ வசதி, ஓய்வூதியக் கொடுப்பனவு, மொழிப்பரிமாற்ற சேவை, வாகன தரிப்பிட வசதி, மலசலகூட வசதி, போக்குவரத்து வசதி போன்றன உள்ளன.

இதுபோன்ற செயற்பாடுகளை மிக விரைவில் யாழ். மாவட்டத்திலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாற்றுவலுவுடையோர் ஏதோ ஓர் அடிப்படையில் திறமையுடையவர்களாக இருப்பர். குறிப்பாக சமுதாயம் இவர்களது உரிமைகளை மறுக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

போக்குவரத்தே இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. பேருந்துகளில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தை எவரும் கொடுப்பது கிடையாது.

அத்துடன் சமூகத்தில் அவர்களுக்கென்று ஓர் அந்தஸ்தைக் கொடுப்பதற்கும் மறுக்கின்றோம்.

இதனால் சமுதாயம் பல வழிகளில் சீரழிந்து கொண்டிருக்கிறது.

எனவே, இதற்கு குரல் கொடுப்பவர்கள் முன்வந்து சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும். அவரவர் உரிமைகளை விட்டுக் கொடுக்கும் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.- என்றார்.
(ம-313)

# அனைத்துத் துறைகளிலும் உயர்வான நிலையில் யாழ். மாவட்ட மாணவர்களின் திறன் உள்ளது

## யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மாணவர்கள் அனைத்துத் துறையிலும் உயர்வான நிலையில் திறமை மிக்கவர்களாக உள்ளனர் என்று தெரிவித்தார். யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க.

521 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில் அண்மையில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்கால வலுமிக்க முன்னேற்றகரமான நாட்டை உருவாக்க எதிர்கால சந்ததியினரின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் கல்வித்துறை துரதிஷ்ட காலங்களைக் கடந்து பின் வளர்ச்சியடைந்து செல்லக் கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணக் கல்வித்துறை உயர்ந்த நிலையிலேயே உள்ளது.

ஒருவருக்கு சிறந்த பரிசைக் கொடுக்க வேண்டும் என்றால் அது கல்வியாகத்தான் இருக்கும்.

உங்களுக்கு கிடைத்துள்ள சமாதானத்தை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாழும் சூழ்நிலையை நாம் உருவாக்கியுள்ளோம். - என்றார்.

521 ஆவது படைப்பிரிவினரின் கட்டளைத் தளபதி டிசிறி திஸாநாயக்க உரையாற்றும்போது:

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்த பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றோம்.

பாடசாலைகளுக்கான அபிவிருத்திகளுக்கு உதவி வருகின்றோம். கல்வி உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றோம். மாணவர்களுக்கான சுற்றுலா வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். விளையாட்டுப் போட்டிகளின் போது விளையாட்டு உபகரணங்களை வழங்கிவருகின்றோம். இந்தத் திட்டங்கள் எதிர்காலத்திலும் முன் எடுக்கப்படும். - என்றார்.
(ம-319)

# தென்மராட்சி வலய மட்ட குறுவினா போட்டி முடிவுகள்

தென்மராட்சி, நவ.1

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட வலய மட்ட விவசாய பாட குறுவினாப்போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த முடிவுகளின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

**தரம் 11**

**வகை 1 ஏ.பி**

ஸ்ரீ.துளசிகரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ந.விசோபன் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, ம.சிந்துஷா-வரணி ம.வி,

**தேர்ச்சி**

நா.தனுசிகா - மீசாலை வீரசிங்கம் ம.வி., வ.கிறிஸ்டீன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இ.லவீனா - வரணி ம.வி., நா.கோதன்ஜா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பா.சுகன்யா- மீசாலை வீரசிங்கம் ம.வி., ம.மதுசன்-மீசாலை வீரசிங்கம் ம.வி, த. மாதுளா - வரணி ம.வி.

**வகை 1 சி**

மு.சயூத்பவான்- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., ச.சுகந்தினி- உசன் இராமநாதன் ம.வி., வ.சுதர்ஷன்- உசன் இராமநாதன் ம.வி,

**தேர்ச்சி**

கி.விசிகரன்- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, த.பிருந்தன்-உசன் இராமநாதன் ம.வி.

**வகை 11**

ஞா.சார்த்திகா- இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்ரமணிய வித்தி., கு.திலக்ஸனா- கைதடி குருசாமி வித்தி., சி.தீர்த்திகா- கைதடி விக்னேஸ்வரா வித்தி., மு.பவித்திரன்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை,

**தேர்ச்சி**

அ.லக்சனா - கைதடி விக்னேஸ்வரா வித்தி., வி.அஜந்தா- கொடிகாமம் அ.த.க.பாடசாலை, லோ.ருக்ஷாயினி- கைதடி குருசாமி வித்தி, சி.லதுஷா- விடத்தற்பளை கமலாசனி வித்தி, யோ.நிரோஜன்- கொடிகாமம் அ.த.க.பாடசாலை, செ.தர்சிகா- கைதடி விக்னேஸ்வரா வித்தி.
(ம-207)

# கணினி அன்பளிப்பு

காரைநகர், நவ.1

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரிக்கு பாடசாலையின் பழைய மாணவர் ஒருவரால் கணினி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர் அறுகம்புலத்தைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமாகிய ஜி.சபாநடேசன் என்பவரே பாடசாலைக்கு கணினியையும் அதன் உபகரணங்களையும் வழங்கி உள்ளார்.

பாடசாலை அதிபர் வே.முருகமூர்த்தியிடம் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக இவை வழங்கப்பட்டுள்ளன. (ம-250)

# மாகாண ரீதியில் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ.1

உலக அஞ்சல் தினத்தில் நடைபெற்ற உப அஞ்சல் அலுவலகங்களுக்கு இடையிலான போட்டிகளில் குடத்தனை உப அஞ்சல் அலுவலகம் மாகாண ரீதியில் முதலிடம் பெற்றுள்ளது.

இந்த உப அஞ்சல் அலுவலகத்தில் உப அஞ்சல் அதிபராக திருமதி ச.சுரேஸ், தபால் ஊழியர்களான ச.சிவனேந்திரன், நா.சிவனேசன், பா.மன்மாதகுமார் ஆகியோர் கடமையில் உள்ளனர். (ம-14)

# பதில் அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ.1

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பதில் அதிபராக வண.ஜி.நடராஜா தென்னிந்திய திருச்சபையின் உயர்பீடத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி முதல் இந்தப் பதில் அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிரானிமில்ஸ் ஆகியோர் அமெரிக்கா சென்றதையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-302)

# நிர்வாகிகள் தெரிவு

கெருடாவில், நவ.1

பருத்தித்துறை அஞ்சலக அபிவிருத்திச் சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக தபால் திணைக்கள ஓய்வுபெற்ற அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கமும் செயலாளராக மத்தியஸ்தர் சபைத் தலைவர் ஆர்.வடிவேலுவும் இணைச் செயலாளராக தபாலதிபர் உ.ரகுபதியும் பொருளாளராக பி.வின்சென்போலும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் க.ஈசுரபாதம், இ.சிவபுண்ணியம், நா.குகன், இ.து.குலசிங்கம், மு.தர்மலிங்கம் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
(ம-253)

# திருநெல்வேலி சந்தையின் அவலம்



திருநெல்வேலி பொதுச் சந்தை தற்சமயம் நுகர்வோர் சென்று தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து திரும்ப விரும்பாத அளவிற்கு மோசமாகக் காணப்படுகின்றது.

தற்போது கட்டப்பட்டுவரும் சந்தைக் கட்டடத்தில் வேலைகள் முழுமையடையாத நிலையில் பெய்துவரும் மழை நீர் பெருமளவில் சந்தையின் கீழ்ப்பகுதிகளை வெள்ளக் காடாக மாற்றிவருகிறது. பொதுமக்கள் மட்டுமன்றி அங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் விசனமடைந்துள்ளனர்.

மழை வெள்ளம் கடைகளுக்குள் விழுந்து கொண்டிருப்பதால் பொருள்கள் பழுதடைகிறது பாதைகளில் வெள்ளம் நிரம்பியும் குப்பைகளாகக் காணப்படுவதாலும் பொதுமக்கள் சந்தைக்குள் வருவதற்குத் தயங்குகிறார்கள். இந்த மழையுடன் மக்கள் சந்தைக்கு வருவது குறைந்துள்ளதால் வியாபாரம் குறைவடைந்து விட்டதாக கவலை தெரிவிக்கின்றார் ஒரு பெண்மணி.

சந்தையின் நுழைவாயில்களோ படுமோசம் சேறும் சகதியுமாக நடப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருப்பதாக பொதுமக்களும் அங்கே பணியில் உள்ள கூலித் தொழிலாளர்களும் கூறுகிறார்கள். பெரிய மூடைகளைச் சுமந்தபடி வழுக்கல் நிலத்தில் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளதாகக் கவலைப்படுகிறார்கள் கூலித் தொழிலாளர்கள்.

குப்பைகள் தினசரி எடுக்கப்படுவதில்லை எனவும் மூன்று நான்கு நாள்களுக்கு ஒரு தடவையே எடுக்கப்படுகின்றது எனவும் வர்த்தகர்கள் கூறுகிறார்கள். சந்தையின் சில பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றது. சுகாதார சீர்கேடுகள் காணப்படுகின்றது.

பிற்பகலின் பின் சந்தை வெறிச்சோடிக் காணப்படும். இது மதுப்பிரியர்களுக்கு வாய்ப்பாக உள்ளது போலும். சாராயப் போத்தல்கள், குவளைகள் காணப்படுகின்றன. குவளைகளில் தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது. டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் துரித வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் பிரதேச சபை இது விடயத்தைக் கவனிக்கத் தவறிவிட்டதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள உணவு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ள விருப்பமில்லை என்றும் மக்கள் கூறுகிறார்கள். தமது கழிவுப் பொருள்களை கடைகளின் பின்புறமாக வாழைக் குலைச் சந்தைக்குள் கொட்டிவிடுகிறார்கள். சேறும் சகதியுமாக மக்கள் நடமாட முடியாதவாறு சந்தை காணப்படுகின்றது.

இது தொடர்பாக சுகாதார பரிசோதகர்களிடம் முறையிடப்பட்டதாகவும் அவர்கள் கவனித்ததாக இல்லை எனவும் வாழைக்குலை வியாபாரிகள் கூறுகிறார்கள். உணவு நிலையங்களிலும் அதிகாரிகளின் கவனம் தேவை. மழைகாலம் இலையான்களின் பெருக்கத்தையும் அவதானிக்க வேண்டியது அவசியம்.

சந்தைக்கான புதிய கட்டடப் பணிகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. அவை இன்னமும் பூர்த்தியடையாத நிலையில் தற்போது பணிகள் இடம் பெறவில்லை. ஒப்பந்தகாரர் கொஞ்சம் ஓய்வாக இருக்கிறார் போலும். கட்டடம் பூர்த்தியடையாத நிலையில் வியாபாரிகளும் பாவனையாளர்களும் தற்போதய மழையில் சிரமமடைகின்றனர்.

கடையின் கூரைகள் உரியமுறையில் போடப்படாதுள்ளது. இதனால் மழை நீர் உட்புகுந்து உட்பகுதிகள் வெள்ளத்தால் நிரம்பிக் கிடக்கிறது. கட்டடப் பணிகளைப் பூர்த்தி செய்து தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளியிட பிரதேச சபை உடன் கவனம் செலுத்த வேண்டும் என்பது அனைவரது கருத்துமாக உள்ளது. கட்டடப் பணிகள் குறித்து பிரதேச சபையின் செயலாளர் மேரி சாந்தசீலன் கூறுகையில்:

இன்னும் ஒரு மாதத்தில் பணிகள் முழுமையடைந்து விடும் எனவும் இது மழை நேரம் தற்போது சிறிது சிரமங்கள் ஏற்படுவது குறித்தும் வருத்தப்பட்டார். ஒரு நல்ல பொதுச் சந்தை அமைவதற்காக பிரதேச சபை உரிய ஒழுங்குகளை முன்னெடுப்பதாகவும் அவர் கூறுகிறார்.

சந்தையின் கிழக்குப் பகுதியில் உள்ள இந்து பாடசாலை வீதியும் மிகவும் மோசம். மழைநீர் தேங்கி வெள்ளக் காடாகக் காட்சியளிக்கும் இந்த வீதியில் குப்பைக்ள் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. வீதியின் இரு மருங்கிலும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. மலசல கூடப்பகுதியும் மேலதிக கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பெருமளவு மக்கள் கூடும் இடம் என்பதால் மழை, வெய்யில் இரண்டு காலங்களிலும் உரிய கவனிப்புக்கள் இடம்பெற வேண்டும். காய்கறிகள் பழுதடைந்தவற்றை சந்தைப்பகுதியில் தமது கடைகளுக்குச் சமீபமாகவே வீசிவிட்டு பிரதேச சபை கவனிக்கவில்லை, குப்பைகளை ஒழுங்காக எடுப்பதில்லை என்று குற்றம் சாட்டுவது ஏற்புடையதல்ல. குப்பைகளை கடைகளுக்கு அருகில் போடுவதைத் தவிர்த்து உரிய இடங்களில் அவற்றைப் போட வர்த்தகவர்கள் முன்வர வேண்டும். உணவு நிலையங்களில் உள்ள கழிவுகளை வாழைக்குலைச் சந்தைக்குள் வீசி விட்டால் தமது கடமை முடிந்தது எனக் கொள்வதும் தவறு. முதலில் சந்தைப் பகுதியைத் துப்புரவாக வைப்பதற்கு அங்குள்ள அனைத்து வியாபாரிகளும் முழு ஆதரவையும் வழங்க வேண்டும்.

சந்தைப் பகுதிக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்காதவாறும் உள்ளே கடைகளுள் மழைத் துளிகள் விழாதவாறு




கட்டுமானப் பணிகள் சரியான முறையில் இடம்பெற வேண்டும். சேறு சகதிகள் ஏற்படாதவாறு பாதைகள் அமைப்பு, கட்டுமானப் பணிகள் இடம்பெறக் கூடியதாகவும் பிரதேச சபை தனது நடவடிக்கைகளைக் கையாள வேண்டும்.

ஒரு பொதுச் சந்தை தொழில் செய்வோர், நுகர்வோருக்கு உரிய பாதுகாப்பும் பயன்மிக்கதாகவும் சுகாதார கட்டமைப்புக்கள் கொண்டதாகவும் அமைவதே அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான அங்கமாக இருக்கும். ✱

**லக்ஸ்மன்**

## வரிதிரட்டி பாதாள கோஷ்டிக்கு பாதுகாப்பு

**ரஞ்சித் மத்தும பண்டார**

மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டிய இத்தருணத்தில் அரசு விலை அதிகரிப்புகளை இரவோடிரவாக மேற்கொள்கின்றது. இதுதான் நிவாரணமா என நாம் கேட்கின்றோம்.

வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அண்மையில் சாராயம், பியர் போன்ற மதுபானங்களுக்கும், சிகரெட்டுக்கும் அரசு விலையை அதிகரித்தது.

அதேபோன்று இன்று எரிபொருள்களின் விலையையும் அதிகரித்துள்ளது. நாளை உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படலாம்.

மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்து வாழ முடியாது தவிக்கும் இந்த நிலையில், எதற்கு விலை அதிகரிப்பு? பல்வேறு வழிகளில் வரிப்பணம் திரட்டி பாதாள கோஷ்டியினரைப் பாதுகாக்க அரசு முயற்சிக்கின்றதா? - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார.

## எரிபொருள் விலையேற்றத்தால் விளங்கிக் கொள்வது என்ன?

அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்குமா என பரவலாக எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில், சனிக்கிழமை தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் அரசு எரிபொருள்களின் விலையை அதிகரித்தது.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக அரசியல் பிரமுகர்களிடமும், தொழிற்சங்க பிரமுகரிடமும் நாம் வினவினோம்.

## உணவுப் பொருள்களின் விலையும் அதிகரிக்கும்

**லோரன்ஸ்**

எரிபொருள் விலை அதிகரிப்பானது உடனடியாக உணவுப்பொருள்களின் விலை அதிகரிப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நாட்டில் தற்பொழுதுள்ள பொருளாதார நிலைமையில் எந்தவொரு விலை அதிகரிப்பையும் ஏற்கும் சக்தி ஊழியர் வர்க்கத்தினரிடம் இல்லை.

குறிப்பாக, சொல்லப்போனால் மலையக மக்களின் வாழ்க்கையில் இது பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் ஏ.லோரன்ஸ்.

## அரசின் கபடத்தனம் அம்பலம்

**ரஞ்சன் ஜெயலால்**

எரிபொருள் விலை அதிகரிப்பானது ஏனைய பொருள்களின் விலையைத் தானாக அதிகரிக்கச் செய்யும்.

வெகுவிரைவில் மின்சாரம், போக்குவரத்து உட்பட முக்கிய சில பொருள்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளன.

அரசின் கடன் சுமையைக் குறைப்பதற்கு மக்கள் மீது சுமையைத் திணிக்க முயல்கிறது இந்த அரசு.

வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அரசு தனது கபடத்தனத்தைத் தானே அம்பலப்படுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் இன்று அதலபாதாளத்தை நோக்கிப் பயணிக்கின்றது. எனவே, வரவு-செலவுத் திட்டத்தில் மக்கள் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது - என்றார் இலங்கை மின்சார சபை தொழிற்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜெயலால்.

## சர்வாதிகாரப் போக்கில் அரசு

**சிவாஜிலிங்கம்**

யுத்தம் முடிவடைந்தவுடன் விலைவாசிகளைக் குறைப்போம் என சூளுரைத்த மஹிந்த அரசு, நள்ளிரவு வேளைகளில் விலைவாசிகளை அதிகரிப்பதன் மர்மம் என்ன?

மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம் என மார்தட்டிக்
கொள்ளும் அரசு, மக்கள் மீது சுமைகளைத் திணித்து அடக்கி ஒடுக்கி ஆள முயற்சிக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு இம்முறையும் அரசு, அதிக நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இதிலிருந்து நாடு சர்வாதிகார ஆட்சி முறைமையின் கீழ் பயணிக்கின்றது என்ற மர்மம் அம்பலமாகியுள்ளது.

மக்கள் மீது கரிசனையிருந்தால் மக்கள் நலன்பேணும் சுகாதாரத்துறைக்கும், அறிவை மேம்படுத்தும் கல்வித்துறைக்கும் அதிக நிதியை ஒதுக்கியிருக்கலாம் அல்லவா?

இந்த அரசின் சர்வாதிகாரப் போக்குக்கும், தன்னிச்சையான முடிவுகளுக்கும் எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நாள் வெகு தொலைவில் இல்லை - என்றார் ரெலோ அமைப்பின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவாஜிலிங்கம்.

# தென்னம்பிள்ளை காய்த்தால் புலமைப் பரிசில் சம்மாந்துறையில் "கப்றுக சிப்னேல்" திட்டம் அறிமுகம்

தென்னை அபிவிருத்தி அதிகார சபை, நாட்டில் ''கப்றுக சிப்னேல்'' திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தரம் 6 இல் கற்கும் 120 மாணவர்களுக்கு 2 தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கப்பட்டன.

கல்லூரி அதிபர் எஸ்.அபூ பக்கர் தலைமையில் நடைபெற்ற தென்னம்பிள்ளை வழங்கும் விழாவில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. எம்.முஸ்தபா மாணவர்களுக்கு அவற்றை வழங்கினார்.

விவசாய பாட ஆசிரியர் ஏ. எல்.அலியார் உள்ளிட்டோரும் இந்தக் கன்றுகளை வழங்கினர்.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தென்னம் பிள்ளைகளை உரிய நியமப்படி நட்டு, பராமரித்து 4 வருட காலத்தில் காய்த்தால் அப்பிள்ளையைப் பராமரிக்கும் மாணவனுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

தரம் 10 இற்கு இம் மாணவர்கள் வரும் போது தென்னம் பிள்ளைகள் காய்க்க வேண்டும். காய்ப்பதை அதிகார சபைக்குத் தெரிவிக்கும் பட்சத்தில் அதிகாரிகள் வந்து பார்த்து புலமைப் பரிசிலுக்கு சிபார்சு செய்வார்கள்.

ஒவ்வொரு மாணவனுக்கு தலா இரண்டு வீதம் 240 தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன. அவற்றை எவ்வாறு நட்டுப் பராமரிப்பது என்பது தொடர்பாக செய்முறை ரீதியாக விளக்கமளிக்கப்பட்டது.

நான்கு வருடத்தில் காய்க்கும் இந்தப் ''பொலிபேன்'' இன தென்னம்பிள்ளைகள் மாணவர் வீட்டில் காய்த்தால் மாணவர் புலமைப்பரிசிலுக்குத் தகுதி பெறுவார்.

உயர்தரம் வரை இப்புலமைப் பரிசில் வழங்கப்படும் என்று சபையினர் தெரிவிக்கின்றனர்.

''கப்றுக சிப்னேல்'' புலமைப் பரிசில் திட்டம் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் பரீட்சார்த்தமாக அறிமுகப் படுத்தப்படுகிறது. 4 வருட காலத்தில் ஏதாவது நோய் நொடி ஏற்பட்டால் உடனடியாக அவற்றை தென்னை அபிவிருத்தி அதிகாரிகளிடம் அறிவிக்கவேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. (ம)

# மாவீரன் பண்டாரவன்னியனின் 208ஆவது நினைவு தினம்

மாவீரன் பண்டார வன்னியனின் 208 ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.



இதன்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளபண்டாரவன்னியனின் சிலைக்கு வவுனியா நகர சபைத் தலைவர் ஐ.கனகையா மாலை அணிவித்ததுடன் சமூக சேவையாளர் கண்ணகி தேவராஜா பொன்னாடை போர்த்தினார்.

இதன் பின்னர் வவுனியாநகரசபை மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பண்டாரவன்னியனின் திருவுருவப் படத்துக்கு அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதன்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவ.சக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ கட்சியின் தலைவர் உதயராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தயாராகின்றது

கொழும்பு, நவ.1

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு தயார்படுத்தப்படுவதாகவும் அதன் பின் அவ்வறிக்கையை பகிரங்கப்படுத்துவது குறித்து ஜனாதிபதி தீர்மானிப்பார் எனவும் அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க முடியும் என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க கூறினார்.

இதற்காக திட்டவட்டமான திகதி நிர்ணயிக்கப்படாவிடினும் நவம்பர் 2 ஆம் வாரத்தில் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படலாம் என அவர் தெரிவித்தார்.

அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு மாத்திரமே எமக்கு ஆணை உள்ளது. அதை பகிரங்கப்படுத்துவதாக இல்லையா என்பது முற்றாக ஜனாதிபதின் தீர்மானத்தில் தங்கியுள்ளது எனவும் அவர் கூறினார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது 2010 ஆம் ஆண்டு மே மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. (ம)

விற்பனைக்கு

3'5'' சுற்றளவுள்ள வேப்பமரம் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 0775060023, 0778448747

# தாயாரின் கழுத்தை நெரித்து மூக்குத்தியைப் பறித்தவருக்கு மறியல்

கொழும்பு, நவ.1

71 வயதான தனது தாயாரின் கழுத்தை நெரித்து அவரின் மூக்குத்தியை பறித்ததாக குற்றம் சுமத்தப்பட்ட, போதைப் பொருளுக்கு அடிமையான நபர் ஒருவரை நவம்பர் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புகோட்டை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

கடந்தசிலவாரங்களாக ஹெரோயின் விலை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் ஹெரோயின் வாங்குவதற்கு போதிய பணமில்லாததால் சந்தேக நபர் இக்குற்றத்தை செய்திருக்கலாம் என்று கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரட்னவிடம் கொம்பனித் தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபர் அவரின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து கைதானார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

இராமு தனபாலசிங்கம்

(பிள்ளையார்)



மலர்வு
12.11.1943

உதிர்வு
11.11.2010

எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (01.11.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
பதவி வெற்றிடங்கள்

சைவச் சிறுவர் இல்லத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. உபவிடுதிக் காப்பாளர்

தகைமைகள்-

- க.பொ.த. சாதாரண தரத்துக்குக் குறையாத கல்வித் தகைமை
- வயதெல்லை 30- 60
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்; உணவும் தங்கு மிட வசதியும் இலவசம்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும் சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஊதியத் திட்டம்: 7700 - 6 X 225 + 10 X 255 - 11600/=

II. சமையலாளர் - பெண்

- சைவச் சிறுவர் இல்லத்துக்கு அனுபவம் வாய்ந்த பெண் சமையலாளர் தேவை.
- இல்லத்தில் தங்கியிருப்பது கட்டாயம்
- வயதெல்லை 35- 55
- ஊதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 12.11.2011

க.வை.குணசேகரம்
செயலாளர்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
12
04
1935



மறைவு
04
11
2008

அமரர்
கணபதிப்பிள்ளை பொன்னையா

திதி: 01.11.2011

வருடங்கள் மூன்றான போதும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சமெலாம்
நிறைந்து நிற்கின்றன
இறைவன் பாதம் தேடிச்சென்ற உங்கள் ஆத்மா
அமைதியாய் உறங்க இறைவனை
நாம் பிரார்த்திக்கின்றோம்.

''நிலானி இல்லம்''
மட்டைச்செடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
021 3219681

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# புலோலி காந்தியூர் மக்கள் நலனுக்காக இலவச கல்வி நிலையத்தை நடத்தும் சனசமூக நிலையம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

காந்தியூர் சனசமூக நிலையம் புத்தகங்களை கிராம மக்கள் வாசிப்பதற்காக இரவல் கொடுத்து வந்தது. இதனைத் தொடர்ந்து இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிறார்களின் கல்வியில் மாறி மாறி வந்த சனசமூக நிலைய நிர்வாகத்தினர், பொதுச் சபை உறுப்பினர்கள் பெரிதும் அக்கறை கொண்டனர். சிறார்களுக்கு பல்வேறு வசதிகளுடன் அரசினர் பாடசாலைகளுக்குப் புறம்பாக மேலும் கல்வியறிவை ஊட்ட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு முதலாம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி போதிக்க வேண்டும் எனத் தீர்மானம் எடுத்தனர். அந்தவகையில் வீரபத்திரர் கோயில் சூழலில் அமைந்துள்ள சனசமூக நிலையத்துக்குச் சொந்தமான நெசவுச் சாலைக் கட்டடத்தில் 1985 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இலவசக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. நிலைய அங்கத்தவர்களால் பல்வேறு வழிகளில் சேகரித்து வங்கியில் முதலீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து இந்தக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கெனப் புதிய தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆசிரியர்களுக்கு மாதா மாதம் கொடுப்பனவுகள் யாவும் முதலீட்டுப் பணத்தில் இருந்து பெறப்பட்டு வழங்கப்பட்டு வந்தன.

இந்த இலவசக் கல்வி நிலையம் சிறப்பான முறையில் செயற்பட்டதனால் முதலாம் ஆம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் வரையான மாணவர்களின் கல்வி மிக முன்னேற்றமடைந்து வந்தது. அன்றைய காலகட்டத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிறார்கள் எவரும் சித்தியடையாத நிலையை இந்த இலவசக் கல்வி நிலையம் மாற்றியமைத்தது என்றால் அது மிகை யாகாது. அன்றைய காலகட்டங்களில் ஒரு சில மாணவர்களையாவது ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் சித்தியடைய வைத்து சாதனை படைத்த பெருமை ஆசிரியை திருமதி ஆர். சறோஜினியையே சாரும். மிகவும் குறைந்த ஊதியத்தில் தொண்டு அடிப்படையில் ஒரு சில ஆண்டுகள் அவர் ஆற்றிய கல்விப் பணி போற்றத்தக்கது. காந்தியூர் சனசமூக நிலையம் மேற்கொண்ட இலவச கல்விப் பணியில் சேவையாற்றியவர்களில் இந்த ஆசிரியைக்கு வரலாற்றில் ஓர் இடம் உண்டு என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

அன்றைய காலகட்டத்தில் இருந்து வந்த சனசமூக நிலைய நிர்வாகம் சனசமூக நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற அவாவுடன் இருந்தது. சனசமூக நிலையக் கட்டடத்தைப் பின்புறமாக உடைத்து விஸ்தரிக்க வேண்டும் எனத் திட்டமிட்ட நிர்வாகம் இதற்கென அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியுடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு தொகை நிதியைப் பெற்றிருந்தது. அந்த நிதி யிலிருந்து சனசமூகக் கட்டடம் நீளமாகக் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த நிலையில் சனசமூக நிலையத்தில் மேலும் அபிவிருத்தி செய்ய பணம் (நிதி) அவசியமாகத் தேவைப்பட்டது. அபிவிருத்திக்கான நிதியை வழங்க சனசமூக நிலைய அங்கத்தவர்கள் போதுமானதாக இருக்கவில்லை. இந்த வேளையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எவ்வாறு நிதியைப் பெற்றுக் கொள்வது என்பதில் நிர்வாகம் கடுமையாகச் சிந்திக்கத் தொடங்கியது.

இந்த நேரத்தில் சனசமூக நிலையத்தை அபிவிருத்தி செய்யவும், இலவசக் கல்வி போன்ற பணிகளைச் செய்யவும் மேலும் நிதி தேவைப்பட்டது. அங்கத்தவர்கள் வழங்கும் நிதியும் போதாமல் இருந்தது. இந்த தருணத்தில் இருந்த முற்போக்கு எண்ணம் கொண்ட சனசமூக நிலைய நிர்வாகத்தினர் எமது கிராமத்தவர்களைப் போன்று இளைய சமுதாயமும் விவசாயத்துறையில் ஈடுபாடு காட்டி வந்தமையால் சனசமூக நிலைய அபிவிருத்திக்கென இளைஞர்களால் விவசாயச் செய்கையில் ஈடு பட்டு அதன் வருமானத்தை நிதியாகப் பெற்றுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இந்தக் கிராமத்திலிருந்து சுமார் 5 மைல் தொலைவில் உள்ள குடத்தனைப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் ஒன்றைத் தெரிவுசெய்து நெற்செய்கை மேற்கொள்ளப்படாத காலத்தில், அதாவது 1968 ஆண்டளவில் இளைஞர்களால் வெங்காயப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய நிர்வாகத்தில் இருந்த முற்போக்கான இளைஞர்கள் நீண்ட பயணம் மேற்கொண்டு வியர்வை சிந்தி உழைத்தமையினால் முத்து முத்தாக வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு விற்று ஒரு தொகை நிதியைப் பெற்று சனசமூக நிலையத்தின் பேரில் வைப்புச் செய்தார்கள்.

கடந்த 1987 தொடக்கம் இருந்து வந்த சனசமூக நிலைய நிர்வாகத்தினர் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை அவ்வப்போது தேவையான நிதிகளைத் திரட்டி மேற்கொண்டனர்.

இந்தப் பணிகளில், அங்கத்தவர்களிடம் 25ரூபா வீதம் சந்தாப் பணத்தைப் பெற்று அங்கத்தவர்கள் தமது தொண்டு அடிப்படையில் சனசமூக நிலையத்துக்கு வர்ணம் பூசி அழகுபடுத்தினார்கள். 1989 ஆம் ஆண்டு

### கர்ணன்

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்தத் திருவிழாவின் போது சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை நடத்தி ஒரு தொகைப் பணத்தை மேலும் நிதியாகப் பெற்று சனசமூக நிலையக் கணக்கில் வைப்பிலிட்டனர். இந்த கிராமத்தில் பருத்தித்துறை பிரதேச சபை 1990 ஆம் ஆண்டு வீதி ஒன்றைத் திருத்தித்தர முன் வந்த போது, அந்த திருத்த வேலைக்கான ஒப்பந்தத்தைப் பெற்று இளைஞர்கள் சிரமதான அடிப்படையில் வீதியைத் திருத்தி அதற்கான பணத்தை சனசமூக நிலையத்திற்கான நிதியாகச் சேர்த்துக் கொண்டனர்.

மிக வலுக்குறைந்த மின் சாரமே இந்த கிராமத்துக்குக் கிடைத்து வந்தமையினால், சனசமூக நிலையத்தின் கோரிக்கைக்கு அமைய இலங்கை மின்சார சபையால் இந்த கிராமத்துக்கென மின் மாற்றி ஒன்று 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த மின் மாற்றி திறப்பு விழா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்களின் சரீரத் தொண்டின் மூலமும் ஊரவரின் நிதிப் பங்களிப்புடனும் சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த சன சமூக நிலையத்துக்கு தண்ணீர் வசதியைப் பெற்றுக் கொள்ள குழாய்க்கிணறு ஒன்று அவசியமாகக் கருதப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக நிலைய நிர்வாகம் போரூட் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்து கிராம மக்களின் பங்களிப்புடன் 1992 ஆம் ஆண்டளவில் சனசமூக நிலையத்துக்கு அருகில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. தண்ணீர் பெறப்பட்டதுடன் கிராமமும் செழிப்புற்றது. 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த கிராமத்தில் உள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம், தில்லையம்பலப்பிள்ளையார் கோயில் ஆகிய வற்றின் உற்சவ காலத்தில் நிர்வாகத்தினரால் தேநீர்க்கடை நடத்தப்பட்டு அதன் மூலம் கிடைத்த வருமானமும் சனசமூக நிலைய அபிவிருத்தி நிதிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

(தொடரும்)


## பணிநிலை வேண்டுகை

01. கணக்குப் பதிவாளர் - பெண்
A/L வர்த்தக பிரிவில் சித்தி பெற்றிருப்பதுடன் 03 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும். யாழ். நகர எல்லைக்குள் வதிபவராக இருக்கவேண்டும்.
02. பண வசூலிப்பாளர் - (ஆண்),
03. விற்பனை உதவியாளர் - (ஆண்)
யாழ். நகர எல்லைக்குள் வதிபவராக இருக்கவேண்டும்.
04. வாகன சாரதி
கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.(A/D)
தகைமைச் சான்றிதழ்களுடன் 02.11.2011 மு.ப. 11 மணிக்கு நேரில் வருகை தரவும்.

தொடர்பு: Ambikai Kalangiyam, 304, Hospital Road, Jaffna. T.P. 021- 2222511

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ மாசார் அ.த.க.பாடசாலை
முதன்மை ஆசிரியர்
திரு.முத்துக்குமாரு கண்ணகுமார் [B.Com]

கற்றவர் நிறை கற்கோவள நகர் மைந்தனாய்
நல்லாசிரியர் பணி பூண்டு ஆசிரியர் தினமதிலே
நற்குருவாய் ஓங்கி மாண்புமிகு ஜனாதிபதியிடம்
ஆசிரியர் "பிரதீபா பிரபா" விருது பெற்ற நீவிர்
என்றும் பட்டங்கள் பெற்று மாண்புடன் இலங்கிடுவீர்

வாழ்த்துபவர்கள்:
ஆலய நிர்வாகம்
ஸ்ரீ கும்பிமுருகன் தேவஸ்தானம்.
கற்கோவளம், பருத்தித்துறை

## கண்ணீர் அஞ்சலி

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய
விஞ்ஞான ஆசிரியை
திருமதி சர்வபாலா தர்மபுத்திரன் அவர்களின் அன்புத் தாய்
அமரர் சோமசுந்தரம் நீலம்மா
அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக்கொள்ளுகின்றோம்.
அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களின் துயரில் நாங்களும் பங்கு கொள்ளுகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

## 1911 - 100 ஆவது பிறந்த நாள் நினைவு - 2011

ஸ்ரீமான் வைரவப்பிள்ளை வேலாயுதர்



(உபதபால் அதிபர் உடுவில் 1951-1971, சித்த வைத்தியர், கஸ்தூரியார் வைத்திய சாலை, யாழ்ப்பாணம் 1931-1951)

மலர்வு: 1.11.1911 குளமங்கால், மல்லாகம்.
உதிர்வு: 10.6.1980 உடுவில் தெற்கு, உடுவில்.

அன்னாரின் ஆத்மா நிரந்தர சாந்தி பெற மல்லாகம் கோணப்புலம் வைரவர், மற்றும் உடுவில் தெற்கு குமரகோட்டம் முருக மூர்த்தி தெய்வங்களின் இறை அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
மக்கள், மருமக்கள், பேரமக்கள், உறவினர்கள்

வேலாயுதம், ஜனகன் (ஜெகன்- P.M)
"போஸ்ட் மாஸ்ரர் காம்ப்", கென்னடி றோட், 3 ஆம் வாய்க்கால், பரந்தன்.

"அருள்வாசா"
உடுவில்தெற்கு, உடுவில்,
சுன்னாகம்.
0779352274

# வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்கு பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி

## கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கூறுகிறார்



கொழும்பு,நவ.1

சீனா, ஜப்பான், கொரிய மொழி போன்ற வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்காக பாடசாலை ஆசிரியர்களுக்கு முதல் தடவையாக பயிற்சியளிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

முதற்கட்டமாக 100 ஆசிரியர்களைக் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதல் ஒருவருட கால முழுநேர பயிற்சி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஜப்பான், கொரியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து பயிற்றுநர்கள் அழைக்கப்படுவர் என்று அவர் தெரிவித்தார்.

பயிற்றுநர்களை வழங்குமாறு ஏற்கெனவே இந்நாடுகளின் தூதரகங்களிடம் நாம் கோரியுள்ளோம்.

அவர்களுக்கு தங்குமிட வசதியும் ஏனைய வசதிகளும் அமைச்சினால் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



நடந்துமுடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கல்முனை மாநகரசபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள், அந்தக்கட்சியின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்கின்றனர்.

# 50 வாகனங்களை நொறுக்கியது காட்டு யானை !

கொழும்பு, நவ.1

அநுராதபுரம் - கெக்கிராவை பிரதேசத்திலுள்ள திப்பட்டுவெவ நகருக்குள் பிரவேசித்த காட்டுயானை ஒன்று சுமார் 50 வாகனங்களைத் தாக்கி தேசப்படுத்தி சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

நகரத்திற்குள் புகுந்த யானையிடமிருந்து தப்புவதற்காக மக்கள் பதறியோடியபோது பெரும் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டது. இந்த யானையை பொலிஸாரும் வனத்துறை அதிகாரிகளும் இணைந்து காட்டுப் பகுதிக்குள் துரத்தியுள்ளனர். (ச)

# காலிமுகத்திடல் காணி விவகாரம்; சீன நிறுவனத்துடன் அரசு முறுகல்

கொழும்பு, ஒக்.31

இலங்கையின் காலிமுகத்திடலுக்கு அண்மையில் பலநோக்கு கட்டடத்தொகுதியை அமைக்கவுள்ள சீனநிறுவனம் அதற்கான முற்பணத்தை வழங்க மறுத்துள்ளது.

இந்தக் கட்டடம் அமையவுள்ள இடத்தை முழுமையாக விற்பனை செய்வதில்லை என்ற அரசின் கொள்கையை அடுத்தே சீன நிறுவனம் முற்பணத்தை வழங்க மறுத்துள்ளது.

இந்தசீன நிறுவனம் காணியை 99 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதை விரும்பவில்லை. இந்த நிலத்தை முழுமையாக விற்பனை செய்வதாக இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழி மீறப்பட்டமைக்கு எதிராக சட்ட உதவிநாடப்படவுள்ளதுஎன்று அந்த நிறுவனம் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, முன்னர் இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த காணிப்பரப்பு 'சங்ரி லா' ஹோட்டலுக்குவழங்கப்பட்டுள்ளமையை சீன நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிறுவனமும் இலங்கையின் நிதியமைச்சும் குறித்த நிர்மாணம் தொடர்பில் கடந்த பெப்ரவரியில் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டன.

இதன்படி 50 மில்லியன் டொலர்களை முற்பணமாக வழங்கவேண்டும். அத்துடன் மீதித் தொகையான 86 மில்லியன் டொலர்களை 2011 ஏப்ரல் 21ஆம் திகதிக்குள் வழங்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

எனினும் அதனை சீன நிறுவனம் வழங்கவில்லை. இதன் காரணமாக அந்த நிறுவனத்துடனான உடன்படிக்கை இரத்தாகி விட்டதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. எனினும், இந்த விவகாரம் தொடர்பில் தாம் சட்ட உதவியை நாடவுள்ளதாக சீனநிறுவனத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச)


# கஞ்சாவுடன் ஒருவர் கைது

மொனராகலை, நவ.1

மொனராகலை பஸ் நிலையத்திலிருந்து இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் இருந்த பயணி ஒருவரிடமிருந்து 3 கிலோ 600 கிராம் எடையுள்ள கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றினர்.

பொலன்னறுவைக்குச் செல்லவிருந்த இவர் கஞ்சாவை தனது உடைகளுக்குள் சூட்சுமமாக மறைத்து மடிமீது வைத்திருந்தார் எனவும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபா எனவும் மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மரண அறிவித்தல்



## பொன்னர் றாதா

### (கிளை முகாமையாளர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

சங்கானை மேற்கு, நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் றாதா 30.10.2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - முத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வல்லியர் - தெய்வானை தம்பதியரின் மருமகனும் அகல்யா (ஜேர்மனி), அரங்கா (புவியியல்துறை இறுதி வருடம் யாழ். பல்கலைக் கழகம்), ஆரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் கதீசன் (ஜேர்மனி), யூட்பிரதீபன், விஜயராஜ் (புவியியல்துறை இறுதி வருடம் யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனும் அனிருத் (ஜேர்மனி), சற்குணம், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் கௌசலாதேவி, தியாகராஜா (கேம்பிறிஜ் கல்வி நிலைய இயக்குநர், சங்கானை), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பூமலர், வில்லிமலர் (சுவிஸ்), ஜெயரட் ணம், கனகேஸ்வரி, மகாதேவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.11.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை மேற்கு,
நிற்சாமம்

தகவல்:
குடும்பத்தினர்.

# இலங்கையில் அடுத்த பொதுநலவாய மாநாடு இந்தியா துணை நிற்பது வெட்கக்கேடானது



## பழ.நெடுமாறன் கடும் கண்டனம்

சென்னை, நவ.1

இலங்கையில் கொமன் வெல்த் மாநாடு நடக்க இந்தியா துணை நிற்பது வெட்கக் கேடானதாகும். தொலைதூரத்தில் இருக்கும் கனடாவுக்கு இருக்கும் மனிதநேய உணர்வு கூட மத்திய அரசுக்கு இல்லாததை வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தை இலங்கையில் நடத்துவதற்கு இந்தியா உதவி செய்துள்ளது என்ற செய்தி மனித நேயம் படைத்தவர்கள் அத்தனை பேருக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் கொமன்வெல்த் அரசு தலைவர்களின் கூட்டம் இலங்கையில் நடப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் ஆகிய குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசு சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் அங்கு கொமன்வெல்த் கூட்டத்தை நடத்தக் கூடாது என்று கனடா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

ஆனால், அந்தக் கூட்டத்தை இலங்கையிலேயே நடத்த வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

லட்சக்கணக்கான தமிழர்களை படுகொலை செய்த இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடக்க இந்தியா துணை நிற்பது வெட்கக் கேடானதாகும்.

தொலைதூரத்தில் இருக்கும் கனடா நாட்டுக்கு இருக்கும் மனிதநேயம்கூட மத்திய அரசுக்கு இல்லாததை வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்றுள்ளது. (வ)

# ஆந்திர அரசைப் பதவி விலகச் செய்ய வேண்டும்

## நடிகை ரோஜா



ஐதராபாத், நவ.1

ஆந்திராவில் தற்போது சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டது. கிரண்குமார் ரெட்டி தலைமையிலான அரசு செயற்படாத அரசாக உள்ளது. தெலுங்கானா போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் தவிக்கிறார். எனவே ஆந்திர அரசை பதவியிலிருந்து விலகச் செய்ய வேண்டும் என்று வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி நிர்வாகியும் நடிகையுமான ரோஜா தெரிவித்தார்.

ஐதராபாத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:

ஆந்திரா அரசு சரியான முறையில் செயற்படவில்லை. இதனால் ஐதராபாத் உள்ளிட்ட நகரங்களில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 822 இளம் பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 825 பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர். தினமும் ஆந்திராவில் 17 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடக்கின்றன.

எனவே சட்டம், ஒழுங்கை காக்கத் தவறிய ஆந்திர அரசை பதவியில் இருந்து விலக்க வேண்டும் என்று கூறினார். (வ)

# கடந்த ஆண்டில் 10.670 குழந்தைகள் இந்தியாவில் கடத்தல்


டில்லி, நவ.1

இந்தியா முழுவதும் கடந்த 2010 ஆம் ஆண்டில் பல்வேறு மாநிலங்களில் 10 ஆயிரத்து 670 குழந்தைகள் கடத்தப்பட்டு உள்ளனர். ஆயிரத்து 408 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். 5 ஆயிரத்து 484 குழந்தைகள் பாலியல் தொல்லைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்று தேசிய குற்ற நிகழ்வுகள் பதிவு அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிராக நடந்த குற்றங்கள் குறித்த விவரங்களை மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

குழந்தைகள் கடத்தலில் தலைநகர் டில்லி முதல் இடத்தில் உள்ளது. அங்கு 2,982 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அங்கு 29 குழந்தைகள் கொலை செய்யப் பட்டும், 304 பேர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டும் உள்ளனர். குழந்தைகள் கடத்தலில் டில்லியை அடுத்து பீகார், உத்தரபிரதேசம், மராட்டியம், ராஜஸ்தான், ஆந்திரா, குஜராத் மாநிலங்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)



தெலுங்கானா தனி மாநில கோரிக்கைக்காக பதவி விலகிய ஆந்திர மாநில காங்கிரஸ் சட்ட பேரவை உறுப்பினர்கள் கிருஷ்ணா ராவ், சத்யநாராயணா மற்றும் ராஜய்யா ஆகியோர், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதியில், அந்தக்கட்சித் தலைவர் சந்திரசேகர ராவ் முன்னிலையில் இணைந்தனர். அவர்களுடன் சட்ட பேரவை உறுப்பினர் விஜயசாந்தி நிற்கின்றார்.

# பிரபல வர்த்தகத்துறை ஆலோசகர் நீரா டிராயா பதவி விலகல்

டில்லி, நவ.1

பிரபல வர்த்தக நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கும் வைஷ்ணவி குழுமத்தின் உரிமையாளர், நீரா ராடியா தன்னுடைய தொடர்பு ஆலோசக வர்த்தகத் துறைப் பணிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனது உடல் நிலை மற்றும் குடும்பத்துடன் நேரம் செலவழிக்க வேண்டிய கட்டாயத்தினால் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், எனினும் இந்த முடிவு எடுப்பதற்கு பலமாக ஆலோசித்ததையும் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

# நான்கு பேரின் உயிரை காப்பாற்றிய நாய்



கோத்தகிரி, நவ.1

கோத்தகிரியில் நாய் ஒன்று 4 பேரின் உயிரைக் காப்பாற்றிய அதிசய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியை அடுத்த தவிட்டுமேடு பகுதியைச் சேர்ந்தவர் சரஸ்வதி(வயது 45). இவரது மகன் சங்கர்(வயது 20). கடந்த சனிக்கிழமை தாயும், மகனும் மண் சுவர் கொண்ட குடிசை வீட்டுக்குள் உறங்கிக்கொண்டிருந்தனர்.

கடந்த ஒரு வாரமாக கோத்தகிரியில் கனமழை பெய்து வருவதால் அந்த குடிசை மழையில் நனைந்து வலுவிழந்து இருந்தது. இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை 2 மணியளவில் கன மழை கொட்டித் தீர்த் தது.

அப்போது வெளியே நின்று கொண்டிருந்த சரஸ்வதியின் வீட்டு நாய் வழக்கத்திற்கு மாறாக தொடர்ந்து குரைத்தது. நாய் ஏன் இப்படிக் குரைக்கிறது என்று பார்க்க சரஸ்வதியும், அவரது மகனும் வீட்டுக்கு வெளியே வந்தனர். அப்போது வீட்டின் மண் சுவர் இடிந்து விழுந்தது. தக்க நேரத்தில் வெளியே வந்ததால் தாயும், மகனும் எந்தக் காயமுமின்றி உயிர் தப்பினர்.

நாய் குரைத்திருக்காவிட்டால் 2 பேரும் வீட்டின் உள்ளே இருந்து இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருக்கக்கூடும். சரஸ்வதியின் வீட்டு நாய் குரைத்ததால் தூக்கம் கலைந்த அதே பகுதி யைச் சேர்ந்த ஜெகந்நாதன்(வயது 49) மற்றும் அவரது மனைவியும் வீட்டை விட்டு வெளியே வந்தனர். அப்போது அவர்கள் வீட்டுச் சுவரும் இடிந்து வீழ்ந்தது.

நாய் நன்றியுள்ள ஜீவன் என்பது இந்த சம்பவம் மூலம் மீண்டும் நிரூபணமாகி உள்ளது. (வ)

# ஊழலை ஒழிக்க சரியான தருணம்

## பிரதமர் கருத்து

டில்லி, நவ.1

ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்த மாநில ஆளுநர்கள் மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் அவர் உரைநிகழ்த்தும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

பணவீக்கம் கடந்த ஆறு மாதங்களில் 11.43 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. இதுவே வளர்ச்சிப் பாதையில் நாம் எதிர் கொள்ளும் உடனடியான சவாலாகும். தற்பொழுது அரசின் கவலைகளுக்கு இதுவே முக்கிய காரணமாகவும் இருக்கிறது. இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அரசும், ரிசர்வ் வங்கியும் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

பொது நிர்வாகத்தில் உள்ள ஊழலை ஒழித்தால் தான் நமது நாடு வேகமான வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் அடையும். ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இதுவே சரியான நேரம் என்று நான் கருதுகிறேன்.

எல்லா நிலைகளிலும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது. ஊழலை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் லோக் பால் பிரேரணையும் ஒன்று. இது தவிர, நிலம் கையகப்படுத்தும் சட்டத்தைத் திருத்துவதற்கான பிரேரணையும் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது என்றார். (வ)

# அயோத்தியில் இராமர் கோயில் அமைக்க சட்டம் இயற்றுவோம்

## பா.ஜ. துணைத்தலைவர் அறிவிப்பு

குஷிநகர், நவ.1

ராமர் கோயில் விவகாரம் தொடர்பாக, கருத்தொற்றுமையை ஏற்படுத்த பா.ஜ. கட்சி முற்படும். அதேநேரத்தில், உத்தரப் பிரதேசத்தில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் போதுமான பலத்தைப் பெற்றால், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பாக சட்டம் இயற்ற முற்படுவோம், என்று பா.ஜ. துணைத் தலைவர் கல்ராஜ் மிஸ்ரா கூறினார்.

உத்தரப் பிரதேச மாநிலம், குஷிநகரில், பா.ஜ. கட்சியின் இரண்டு நாள் மாநில செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. அப்போது, கட்சியின் துணைத் தலைவர் கல்ராஜ் மிஸ்ரா பேசுகையில்:

தேசியம், கலாசாரம் இரண்டும் பா.ஜ.வின் அடிப்படை அதேபோல, ராமர் கோயிலுக்கான முன்னுரிமை தொடரும். தேசிய அளவில் சொன்னால், நமக்கு இது ஒரு தேசியப் பிரச்சினை. ராமர் கோயில் விவகாரத்தில், ஒருமித்த கருத்தை எட்ட முற்படுவோம். அப்படி இல்லையெனில், மாநில சட்ட சபையில் எமது பலம் அதிகரித்தால், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பாக சட்டம் இயற்ற முற்படுவோம். அயோத்தியில் பிரமாண்ட ராமர் கோவில் கட்ட வேண்டும் என்பது, ஒவ்வொரு பா.ஜ., தொண்டனின் உறுதிப்பாடு இதுவேயாகும்.

இதற்கான வாய்ப்பு எப்போது உருவாகிறது என்று பார்க்க வேண்டும். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், இதற்கான முயற்சிகள் தொடர வேண்டும். யார் தலைமையில், மாநிலத்தில் பா.ஜ. கட்சி தேர்தலை சந்திக்கும் என்று தொண்டர்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை. யாரை வேண்டுமானாலும், கட்சி தெரிவு செய்யலாம். இந்த விடயத்தில், ஏனைய கட்சிகளில் இருந்து பா.ஜ. மாறுபட்டு செயற்படும். இவ்வாறு கல்ராஜ் மிஸ்ரா பேசினார். (வ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ.1

பொலிகண்டி கந்தவனம் சுப் பிரமணிய சுவாமி ஆலயத் தின் கந்தசட்டி திருவிழா கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை ஐந்தாம் திருவிழாவில் மாலை 7 மணிக்கு சூரசம்காரம் இடம் பெறும். மறுநாள் புதன் கிழமை ஆறாம் திருவிழாவில் காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ம-313)

* * *

கந்தசட்டி விரதத்தை முன் னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம் பாள் ஆலயத்தில் தினமும் காலை 8 மணிக்கு விசேட அபிஷேகபூசைகள் இடம் பெற்று வருகின்றன.(ம-313)

* * *

கந்தசட்டி விரதத்தை முன் னிட்டு நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தில் கடந்த 26 ஆம் திகதி முதல் விசேட பூசைகள் இடம் பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேல் வழங் கும் காட்சியும் பிற்பகல் 3 மணிக்கு சூரசங்காரமும் நடைபெறும்.

நாளை புதன்கிழமை முற் பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திரு விழா இடம்பெறும். (ம-313)

* * *

வட்டுக்கோட்டை அடைக் கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டப பூஜை யைத் தொடர்ந்து சூரன் போர் இடம்பெறும்.

## உறுதிப்பூசுதல் நிகழ்வு

குருநகர்,நவ.1

யாழ்.மரியன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்த 150 மாணவ மாணவிகளுக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மரியன்னை பேராலயத்தில் கடந்த 26 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் இந்த உறுதிப்பூசுதல் வழங்கப் பட்டது. இந்தத் திருப்பலி நிறைவில் உறுதிப்பூசுதலைப் பெற்றுக் கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் யாழ்.பேராலயப் பங்குத் தந்தை வண.பிதா எஸ்.எச். சகாயநாயகம் அடிகளாரால் வழங்கப்பட்டன. இந்த உறுதிப் பூசுதல் திருப்பலியில் பெற்றோர்களும், பங்குமக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். (ம-51)

## சாரதி லைசென்ஸூக்கு விண்ணப்பித்தோருக்கு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பத்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பித்து எழுத்துப் பரீட்சையையும் செயன்முறைப் பரீட்சையையும் பூர்த்தி செய்யுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-313)

# வாழ்வை வளமாக்கும் வாசிப்பு

வளங்களுள் சிறந்தது மனித வளம். மனித வளத்தில் சிறந்தது மனவளம். 'மாயக் குரங் கான' மனித மனத்தை வளம் படுத்தவும் வழிப் படுத்தவும் ''வாசிப்பு'' அவசியமாகின்றது. பிறப் பின் போது நாம் கொண்டு வரும் ஆற்றலில் ஐந்து வீதத்தினை மட்டுமே பயன்படுத்து கிறோம் என்பது உளவியலாளர் முடிவு ஏனைய 95 வீத ஆற்றலை வாசிப்பின் ஊடாகவும் ஆர்வம், முயற்சி என்பனவற்றின் மூலமுமே பெற முடியும். நமது ஆளுமையைத் தீர்மா னிப்பதில் 65 வீதம் பேச்சாற்றலும், 35 வீதம் கல்வி, நடை, உடை, குடும்பப் பின்னணி முதலி யவற்றிலும் தங்கியுள்ளதென ஹாவார்ட் பல்கலைக்கழக ஆய்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன. எனவே ஆளுமை விருத்தியில் முதன்மை பெறுகின்ற பேச் சாற்றலை விருத்தி செய்யவும் வாசிப்பு அவசியமாகின்றது.

'இலட்சியங்கள் உலகின் எஜமான்கள்' என்பது ஒல்லாந்து நாட்டுப் பழமொழி.' இலட் சியம் இல்லாத வாழ்வு காற்றில்லாத பலூன் மாதிரி' என்கிறார் முன்னாள் இந்திய ஜனாதி பதி அப்துல் கலாம். உண்மையிலே இலட்சியம் இல்லாதவர்கள் இலட்சியம் உள்ளவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்பவர் களாகி விடுகிறார்கள். இலட்சியக் கனவுகள் மாணவ மனங்களில் மலர வாசிப்புப் பழக்கமே வழிகாட்டுகின்றது. ''புத்தகங்களே கனவுகளை வளர்க்கும். கனவுகள் எண்ணங்களை உண் டாக்கும். எண்ணங்கள் செயல்களை உருவாக்கும்'' என்பது இந்திய முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாமின் அமுத வாக்கு.

''ஆற்றலில் மிகப் பெரியது மனிதனின் மன ஆற்றல்'' என்றார் ஸ்டாலின். 'நம்மை மனி தனாக்குவது உடல் வளர்ச்சியல்ல; எண்ண வளர்ச்சியே என்றார் ஐசக்டெல்லர். 'படிப் புக்கள் அனைத்திலும் உன்னதமான படிப்பு மனிதன் எப்படி வாழ வேண்டும்- எதைத் தேட வேண்டும்? என்ற படிப்புத்தான் என்றார் பிளேட்டோ. ''இரண்டாம் நூற்றாண்டு இலக் கியத்தைப் படிக்காமல் இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கியத்தைப் படைக்க முடி யாது'' என் றார் கவிஞர் வைரமுத்து. இதனால் தான் ' வாள்விரைந்து வேலை செய்ய வேண்டும். ஆனால் பேனா நின்று, நிதானித்தே வேலை செய்ய வேண் டும்.' என ஜூலியா வார்ட்கோ அறிவுரை பகர்ந்தார்.

பாடசாலைக் கல்வியைக் கைவிட்டவர்களும் வாசிப்பால் வளம் பெற்றனர். தமிழகத்தின் புகழ் பூத்த எழுத்தாளர் கி.ராஜ்நாராயணன் ஆரம்பக் கல்வியுடன் பாடசாலை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர். தனது வாசிப்புப் பழக்கத்தால் எழுத்தா ளராகி இன்று நாட்டுப்புறவியல் பேராசிரியராக பல்கலைக் கழகத்தில் பணி புரிகின்றார். இவ்வாறே ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் கே.டானியல் ஆரம்பக்கல்வியுடன் பாடசாலைக்கு முற்றுப்புள்ளி வைத் தவர். மைக்கல்பரடே, புத்தகம் கட்டுபவராகப் பணி புரிந்து கொண்டே வாசிப்புப் பழக்கத்தால் விஞ்ஞானி ஆனார். சந்திரனில் முதல் முதலில் கால்வைத்தவர் நீல்ஆம்ஸ்றோங். தான் முதல் தரத்தில் படிக்கும் போதே தொன்னூறு புத்த கங்களைப் படித்து விட்டாராம். இதனால் ஆகா யத்தில் பறக்க வேண்டும் என்ற கனவு இவருக்கு சிறு வயதிலேயே உருவாகிவிட்டது. இவ்வாறே அன்மையில் காலமான அமெரிக்காவின் 'அப்பிள்' கணினி நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்டீவ் ஜொப்ஸ், தான் படித்த ஒரு வாசகமான ''ஒவ்வொரு நாளையும் உன் ஆயுளின் இறுதி நாளாகக் கொண்டு வாழ்'' என்ற வாசகமே தன்னை ஒரு சாதனை யாளராக மாற்றியதாகத் தெரிவித்துள்ளார். பாரதி பதினொரு வயதிலே ''பாரதி'' என்ற பட்டத்தைப் பெற்று விட்டார். கவியரசர் தாகூர் பதினைந்து வயதிலேயே 'பானுசிங்' என்ற புனைபெயரில் பிருதிவி ராஜனைப் பற்றிக் கவிதை எழுதினார்.

இரா. ஜெயக்குமார், அதிபர்
யா/புன்னாலைக்கட்டுவன் ம.வி.

'நூல்களும், நண்பர்களும் குறைவாகவும் தரமாகவும் இருக்க வேண்டும்' என்பது ரஷ்யப் பழமொழி. எனவே நாமும் வீட்டுக்கொரு நூலகம் அமைப்போம். தரமான நூல்களைப் பேணுவோம். வாசிப்புப் பழக்கத்தால் நமது பிள்ளைகளின் கனவுகளை வளர்ப்போம். தன்னலமற்ற தமிழ்த் தலைவர்களை உருவாக்குவோம். *



# எங்கள் நாட்டு விவகாரத்தில் தலையிட்டால் ஐரோப்பா பூகம்பத்தைச் சந்திக்க நேரிடும்

## சிரிய அதிபர் பஷார் அல் ஆசாத் கடும் எச்சரிக்கை



டமாஸ்கஸ், நவ.1

எங்கள் நாட்டு விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் தலையிட்டால் பெரும் பூகம்பத்தை சந்திக்க நேரிடும் என்று சிரிய அதிபர் பஷார் அல் ஆசாத் கடுமையாக எச்சரித்துள்ளார்.

சிரியாவில் அதிபர் பஷார்-அல்-அசாத்துக்கு எதிராகப் பொது மக்கள் கடந்த மார்ச் மாதம் முதல் போராட்டம் நடத்தி வருகிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்ட 3 ஆயிரம் பேரை ராணுவம் கொன்று குவித்தது. இதற்கு, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கி-மூன், ஆசாத்துக்கு சமீபத்தில் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அதில், போராட்டம் நடத்தும் மக்கள் மீது நடத்தப்படும் ராணுவத் தாக்குதலை நிறுத்திவிட்டு அரசியல் சட்டத்தை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் லண்டனில் இருந்து வெளிவரும் 'சண்டே டெலிகிராப்' என்ற பத்திரிகைக்கு அதிபர் ஆசாத் பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் தெரிவித்ததாவது;

இந்தப் பிராந்தியத்தில் சிரியா தனிமைப்படுத்தப்பட்டு உள்ளது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சிரிய விவகாரங்களில் தலையிட ஐரோப்பிய நாடுகள் முயற்சி செய்தால், பூகம்பம் போன்ற கடும் விளைவுகளை அந்த நாடுகள் சந்திக்க நேரிடும். சிரியாவில் பிரச்சினை ஏற்பட்டால் அது இந்தப் பிராந்தியத்தையே பற்றி எரிய வைக்கும். பல ஆப்கானிஸ்தான்களை பார்க்க நினைக்கிறார்களா? அரபு நாடுகளில் ஏற்பட்ட மக்கள் புரட்சிக்கும், இங்கு ஏற்பட்டுள்ள புரட்சிக்கும் வித்தியாசம் உள்ளது. மக்களின் போராட்டத்துக்கு நான் வளைந்து கொடுக்க மாட்டேன். எனவே எங்கள் நாட்டு விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் தலையிட வேண்டாம் என்று ஆசாத் எச்சரித்துள்ளார். (ந)

# கடாபியைக் கொன்றவர்கள் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்

## லிபிய அரசு தெரிவிப்பு

சர்வாதிகாரி கடாபியைக் கொன்றவர்களுக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படும் என்று புதிய இடைக்கால ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லிபியாவில் 42 ஆண்டாக சர்வாதிகார ஆட்சியில் ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்த அதிபர் கடாபியை புரட்சிப் படையினர் சுட்டுக் கொன்றனர். இது குறித்து முழு அறிக்கையை சமர்ப்பிக்கும் படி லிபிய மாற்று அரச கவுன்சிலை ஐ.நா கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் உயிருடன் பிடிபட்ட கடாபியை கொன்றது ஏன் என்று சர்வதேச நாடுகள் கேள்வி எழுப்பி உள்ளது.

இந்நிலையில் கடாபியைக் கொன்றவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இடைக்கால அரச அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர். இது குறித்து தேசிய மாற்று கவுன்சில் அதிகாரிகள் கூறுகையில்:

கடாபியை உயிருடன் பிடித்து வராமல் கொன்றவர்கள் மீது லிபிய அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று மற்றவர்கள் சொல்லும் வரை நாங்கள் காத்திருக்க மாட்டோம்; நிச்சயம் தண்டனை வழங்கப்படும்.

கடாபி கொலை தொடர்பாக ஏற்கனவே விசாரணையைத் தொடங்கிவிட்டோம். போர் குற்றவாளிகளை எப்படி நடத்துவது என்பதற்கான நடத்தை விதிமுறைகளை நாங்கள் ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

எனினும் கடாபியைக் கொன்றது தனிப்பட்ட செயல். இதில் புரட்சிப் படையினருக்கோ அல்லது லிபிய தேசிய ராணுவத்துக்கோ தொடர்பில்லை என்றனர். (ந)



ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் கொமன்வெல்த் கூட்டமைப்பின் கூட்டம் நடந்தது. இதில் 54 நாடுகளின் 3,000 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

# உலக சனத்தொகையில் 700 கோடியை நிறைவு செய்த சரித்திரக் குழந்தை!

## பிலிப்பைன்ஸில் பிறப்பு



உலகின் சனத்தொகையில் 700 கோடியை நிறைவுசெய்த குழந்தை பிலிப்பைன்ஸில் பிறந்துள்ளது.

உலகின் சனத்தொகை 700 கோடியை அடைந்து விட்டதென உலக சனத்தொகை புள்ளிவிவரத் தகவல் தெரிவித்த நிலையில் நேற்றுமுன்தினம் பிலிப்பைன்ஸில் பிறந்த டனிகா என்ற குழந்தைக்கு உலகின் சனத்தொகை 700 கோடியை அடைவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

டனிகாவுக்கு ஐக்கிய நாடுகளின் சின்னமாக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கேக் ஒன்று வழங்கப்பட்டது.

பிலிப்பைன்ஸில் உள்ள மருத்துவ மனையில் பிறந்த டனிகா ஆரோக்கியமாகத் தனது தாயுடன் இருக்கிறார் எனத் தகவல் தெரிவிக்கிறது.

டனிகா இத்தகைய பிரசித்தி பெற்ற சந்தர்ப்பத்தில் பிறந்தமை குறித்து அவர்களுடைய பெற்றோரும், குடும்பத்தவர்களும் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

டனிகாவின் பிறப்பை அவர்களுடைய பெற்றோர் மாத்திரமல்ல முழு உலகமுமே நினைவு கூரும். (ந)

# எம்முடன் பேசுவதற்கு முன் அமெரிக்கா இரட்டைக் கொள்கைகளை கைவிட வேண்டும்

## தலிபான் தீவிரவாதிகள் வலியுறுத்து

எங்களுடன் பேச்சு நடத்துவதற்கு முன் அமெரிக்கா தனது ஆப்கானிஸ்தான் பற்றிய இரட்டைக் கொள்கைகளைக் கைவிட வேண்டும் எனத் தலிபான்கள் கோரியுள்ளனர்.

தலிபான்கள், ஹக்கானி குழு ஆகியோருடன் பேச்சு நடத்துவதற்கு பாகிஸ்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என அமெரிக்கா கோரியிருந்தது. பாகிஸ்தானும் அதற்கு சம்மதம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா முஜாகித் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: எங்களுடன் பேச்சு நடத்த பாகிஸ்தானின் உதவியை அமெரிக்கா நாடுகிறது. அதே நேரம் ஹக்கானி குழுவை ஒழித்துக் கட்டும்படி பாகிஸ்தானுக்கு நெருக்கடியும் கொடுக்கிறது.

ஒரு கையில் பேச்சு, மறு கையில் ஆப்கனுக்குள் நிரந்தர ராணுவத் தளங்களை அமைக்கும் திட்டமும் அமெரிக்காவுக்கு இருக்கிறது. இந்த இரட்டைக் கொள்கைகளை அமெரிக்கா கைவிட வேண்டும். இல்லையெனில் பேச்சு என்பது சாத்தியமில்லாத ஒன்று. ஆப்கனுக்குள் நுழைந்தது அமெரிக்காதான். நாங்கள் அமெரிக்காவுக்குள் நுழையவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# சீன சுரங்கத்தில் விபத்து; 29 பேர் சாவு

பீய்ஜிங், நவ.1

சீன நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் 29 பேர் உயிரழந்துள்ளனர்.

சீனாவின் ஹெனாய் மாகாணத்தில் உள்ள ஹெங் யாங் நகரில் ஜியாவுலிக்ஜிஓங் எனும் நிலக்கரிச் சுரங்கத்திலேயே இந்த விபத்து இடம் பெற்றது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு மீட்புப்படையினர் விரைந்து சென்று பலியானவர் களின் உடல்களை மீட்டனர்.

இந்த விபத் தின் போது 35 பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அவர்களில் 29 பேர் பலியாகினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# சூடானில் ஏற்பட்ட திடீர் மோதலில் 80 பேர் உயிரிழப்பு

சூடானில் நேற்றுமுன்தினம் போராட்டக்காரர்கள் நடத்திய திடீர்த் தாக்குதலில் பொது மக்கள் 15 பேர் உள்பட 80 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் முஸ்லிம்களுக்கும் ஆபிரிக்கர்களுக்கும் இடையில் தொடர்ந்து இன மோதல் நடந்து வருகின்றன. வடக்கு மற்றும் தெற்கு சூடானில் உள்ளவர்களுக்கு இடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்து தெற்கு சூடான் விடுதலை படை ,எஸ் எஸ்எல்ஏ என்ற பெயருடன் கடந்த ஜூன் மாதத்தில் இருந்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் தெற்கு சூடானில் உள்ள மயோம் நகருக்குள் திடீரெனப் புகுந்த எஸ்எஸ் எல்ஏ போராட்டக்காரர்களுக்கும் சூடான் ராணுவத்துக்கும் இடையில் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 60 போராட்டக்காரர்கள் உள்பட 80 பேர் பலியாகினர் என்று சூடான் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் கிடியோன் காட்பன் தோர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், உள்ளூர் தீவிரவாதிகளுக்கு உதவ எஸ்எஸ்எல்ஏ போராட்டக்காரர்கள் திடீரென நுழைந்து வன்முறையில் ஈடுபட்டதால் ராணுவம் தாக்குதல் நடத்தியது. தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (ந)

# தாய்வானில் கடும் நிலநடுக்கம்

வடகிழக்கு தாய்வானில் நேற்று முன்தினம் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6.5 ஆகப் பதிவாகியிருந்த இந்த நில நடுக்கத்தால் தலைநகரில் பல கட்டடங்கள் குலுங்கின. எனினும் உயிர் சேதமோ, உடமைகளுக்கு சேதமோ ஏற்பட்டதாக உடனடியாக தகவல்கள் இல்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.

இந்த நிலநடுக்கம் கிலாங் நகரத்தில் 221 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக நில நடுக்க ஆய்வு மையம் தெரிவித்தது. (ந)

# உலகில் போலியோவை ஒழித்துக்கட்ட கொமன்வெல்த் தலைவர்கள் உறுதி

இளம்பிள்ளை வாதத்தை அடியோடு ஒழிப்பதற்கான உறுதியை பேர்த் நகரில் கூடிய பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மீண்டும் எடுத்திருக்கிறார்கள்.

இந்த நோய்க்கெதிரான போராட்டத்துக்காக 5 கோடி டொலர் களை வழங்க ஆஸ்திரேலியா முன்வந்திருக்கிறது. உலகிலேயே இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மாத்திரந்தான் போலியோ நோயால் பாதிக்கப்படுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

ஆகவே அந்த நோயை அடுத்து வருகின்ற 2 வருடங்களுக்குள் முற்றாக அழிப்பது என்பது உலகின் கரங்களிலேயே இருக்கிறது என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கூறியுள்ளார்.

போலியோவை ஒழிப்பதற்கான உலக முயற்சி என்பது 1988முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் இந்த புதிய மீள் முயற்சி என்பது ஐ.நா போன்ற நிறுவனங்களுடன் இணைந்து தான் மேற்கொள்ளப்பட்டவேண்டும். சரியாகச் செயற்பட்டால் 2013இல் உலகில் போலியோவை முற்றாக ஒழித்து விடலாம் என்று அந்த நாடுகள் நம்புகின்றன. (ந)

# மின்னல் வேக உதைபந்தாட்டம் ஆனைக்கோட்டை யூனியன் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.1

ஒரு நாள் மின்னல் வேக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை சுவிகரித்தது ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள தமிழ்ப் பாடசாலைகள் சங்கச் செயலாளரும் பிரித்தானிய உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவருமான எட்வின் குணரத்தினத்தின் ஆதரவில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற 7 பேர் பங்கு பற்றிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.



இதில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

போட்டி ஆரம்பமானது முதல் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியினர் தமது ஆட்டத்தை வேகப் படுத்தி எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இடைவேளைக்கு முன்னர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் 3 கோல்களைப் போட்டு முன்னிலையில் இருந்தது.

இதன்போது குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டது.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது 3:1 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் மேலும் தத்தமது அணிக்காக கோல்களைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு களம் இறங்கின. இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரு அணியினரும் தமது ஆட்டத்தை வேகப்படுத்திக் கொண்டனர்.

இதன் போது ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மேலும் 3 கோல்களைப் பெற்றுத் தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது.

இந்த வேளையில் குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழகம் தனது அணிக்காக இரண்டாவது கோலைப் போட்டது.

ஆட்ட முடிவில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

ஆட்டநாயகனாக ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வீரன் நிரோஜன் தெரிவு செய்யப் பட்டார். பங்கு பற்றிய அணியினருக்கு 4 ஆயிரம் ரூபா பணப்பரிசில்கள் வழங்கப் பட்டன.

(த-23-135)

# கொழும்பு சென்.ஜோசேப் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு, நவ.1

கொழும்பு சென்.ஜோசேப் கல்லூரி 5 பேர் பங்குபற்றும் புருட்சல்ட் உதைபந்தாட்டப் போட்டியொன்றை எதிர்வரும் 5 ஆம் திகதி அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தவுள்ளது.



தென்னிலங்கைப் பாடசாலைகள் பலவும் கலந்துகொள்ளும் இந்தப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்தும் மூன்று பாடசாலை அணிகள் கலந்து கொள்வதற்கான அழைப்புகள் பாடசாலையால் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த உதைபந்தாட்டப் போட்டி 11, 13, 15, 17, 19 வயதுப் பிரிவுகளுக்கு இடையே அகில இலங்கை ரீதியாக நடை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளன.

(த-86)



வட மாகாண முன்பள்ளி விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.
இதில் வெற்றிபெற்ற மாணவிக்கு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பரிசில் வழங்குகிறார். (14-23)



மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் கின்னஸ் சாதனை நிகழ்த்துவதற்காக இலங்கை ரக்பி சம்மேளனம் அகில இலங்கை ரீதியாக 12 வயது பிரிவுக்கு உட்பட்ட 3,700 வீர, வீராங்கனைகளை ஒன்று திரட்டி ரக்பி ஒன்று கூடலை நடத்தியது.
இதில் வட மாகாணத்திலிருந்து பங்குபற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வீரர்கள் பொறுப்பாசிரியருடன். (த-23)

# கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வீரர்கள், வீராங்கனைகள் தெரிவு

## மாவட்ட ரீதியாக 3 ஆம், 4 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், நவ.1

விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் 2011 ஆம் ஆண்டுக்கான கிரீடா சத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 -18 வயதுக்கு உட்பட்ட வீரர்கள், வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் இலங்கை முழுவதும் ஆரம்பமாகவுள்ளது.

இதன் அடிப்படையில் வடக்கு - மாகாணப் பாடசாலைகளின் வீரர்கள், வீராங்கனைகள் தெரிவுகளில் மன்னார் மாவட்டத்துக்கான தெரிவு 3 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலும், வவுனியா மாவட்டத்துக்கான தெரிவு 4 ஆம் திகதி நகர சபை மைதானத்திலும், கிளிநொச்சி மாவட்டத்துக்கான தெரிவு பொது விளையாட்டு மைதானத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தெரிவு 4 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்திலும், யாழ்ப்பாணத்துக்கான தெரிவு 4 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் இடம் பெறவுள்ளது.

கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், றொக்கி, கபடி, வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் ஒரு விளையாட்டில் ஒரு மாவட்டத்திலிருந்து 5 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முதல் மூன்று மாதங்கள் 1500/= ரூபாவும் மூன்று மாதத்துக்கு பின்னர் 2500/= ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் மெய்வன்மைப் போட்டிகளில் 6 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர் என வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை தெரிவித்துள்ளார்.

(ம-23)

# பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்து, இராமநாதன் ஆண்கள் பிரிவில் யாழ். சென்ரல், யாழ்.இந்து

## இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவத்தலைவர் அமரர் பொன்.விபுலானந்தனின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்துகின்றன.

இதன் இறுதியாட்டங்களில் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியனவும், ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியனவும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முதலிடம் பெற்ற ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி மோதவிருந்தது.

இதில் வேம்படி மகளிர் கல்லூரி அணி மைதானத்துக்கு சமுகம் கொடுக்காமையால் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப் பட்டது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி 29:17 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்துக் கொக்குவில் இந்துக் கல்லூரி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 49:26 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மற்றைய அரை இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 35:34 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றியீட்டியது.

(த-23)

# பலமான நிலையில் மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி 207 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்துள்ளது. முன்னதாக முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.




பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து மேற்கிந்தியத் தீவுகள் அணி விளையாடி வருகின்றது. இதனடிப்படையில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் சகல இலக்குகளையும் இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிரிக் எட்வேட்ஸ் 121, கெரன் பவல் 72, பிறத்வெய்ட் 50, சாமுவேல்ஸ் 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சகிப் அல் ஹசன் 5, நசர் ஹொசைன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவு வரையில் 7 இலக்குகளை மாத்திரம் இழந்து 204 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. பங்களாதேஷ் சார்பில் சகிப் அல் ஹசன் 73, நமீம் ஸ்லாம் 45 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். இறுதியில் நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் நசர் ஹொசைன் 34, சுவோ 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.



நேற்றைய ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி பெற்றுக்கொண்ட ஓட்ட எண்ணிக்கையை விட 124 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது. மேற்கிந்தியத்தீவுகளின் சார்பில் பந்து வீச்சில் பிடல் எட்வேட்ஸ் 5 இலக்குகளையும், பிஷ்ஷு 3 இலக்குகளையும் வீழ்த்தினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பிறத்வெயிடை ஓட்டமெதனையும் பெறாத நிலையில் இழந்தது. தொடர்ந்து கெரன் பவல் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறிய போதும் பின்னர் வந்த கிரிக் எட்வேட்ஸ் மற்றும் டரன் பிராவோ இருவரது அபாரமான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. மூன்றாவது இலக்குக்காக 151 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் கிரிக் எட்வேட்ஸ் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டரன் பிராவோ முதலாவது சதத்தை பூர்த்தி செய்தார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 207 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்துள்ளது. டரன் பிராவோ 100, றோச் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இதன் மூலம் 331 ஓட்டங்கள் முன்னிலையுடன் ஆடிவருகின்றது. இன்று நான்காம் நாள் ஆட்டமாகும். (15)

# காயத்திலிருந்து தப்ப சுழற்சிமுறை வாய்ப்பு

காயத்தில் இருந்து தப்பிக்க, ஆட்டங்களில் வீரர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும், என்று இந்திய அணியின் அதிரடி தொடக்க வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்தியா வரவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் நவம்பர் 6 ஆம் திகதி டெல்லியில் தொடங்குகிறது. இந்த ஆட்டத்துக்கான இந்திய அணியில், தோள்பட்டை காயத்தில் இருந்து மீண்ட அதிரடித் தொடக்க வீரர் சேவாக் இடம் பெற்றுள்ளார்.

இதுகுறித்து சேவாக் கூறியதாவது:

காயம், உடற்தகுதி உள்ளிட்ட பிரச்னைகளில் இருந்து தப்பிக்க, வீரர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக வேகப் பந்துவீச்சாளர்களுக்கு இந்த முறையை பயன்படுத்த வேண்டும். ஏனெனில் துடுப்பாட்ட வீரர்களைக் காட்டிலும், வேகப்பந்துவீச்சாளர்களுக்கு விரைவில் காயமடையும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

காயம் காரணமாக இங்கிலாந்து மண்ணில் நடந்த தொடரில் விளையாட முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. ஏனெனில் அப்போது நிறைய முன்னணி வீரர்கள் காயம் காரணமாக பங்கேற்காததால், மோசமான தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று. எந்த ஒரு வீரரும், காயத்தில் இருந்து மீள்வது எளிதான காரியமல்ல. காயத்தின் தன்மையை பொறுத்து மாறுபடும். தற்போது எனது கவனம் முழுவதும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் மீது உள்ளது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி திறமையை நிரூபிக்க வேண்டும்.

இந்திய வீரர்கள், டெஸ்ட் ஆட்டங்களைக் காட்டிலும் ஐ.பி.எல் போன்ற அதிகளவு பணம் புரளும் விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்ற செய்தி வெளியானது. இது முற்றிலும் தவறு. எந்த ஒரு வீரரும் முதலில் டெஸ்ட் ஆட்டத்தில் தான் விளையாட வேண்டும் என்று நினைப்பார்கள். ஏனெனில் டெஸ்ட் ஆட்டத்தின் மூலம் ஒரு வீரரின் உண்மையான திறமையை கண்டறிய முடியும். எந்த ஒரு வீரரும், சர்வதேச ஆட்டத்திலிருந்து இருந்து ஓய்வை அறிவித்துவிட்டு, ஐ.பி.எல் போன்ற ஆட்டங்களில் விளையாட விரும்பமாட்டார்கள்.

சமீபத்தில் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் போது நான் காயத்துடன் விளையாடினேன். இதேபோல 'மாஸ்டர் பட்ஸ்மன் சச்சினும், தொடைப்பகுதியில் காயத்துடன் விளையாடினார். காயம் குறித்து அதிகளவு சிந்திக்காமல், நாட்டுக்காக விளையாட நினைத்ததால், கிண்ணம் வென்று சாதிக்க முடிந்தது.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில், சச்சின் இடத்தை பூர்த்தி செய்வது கடினம். இதற்கு நீண்ட காலம் கடுமையாகப் போராட வேண்டும். தற்போதுள்ள இளம் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஒருவேளை மூத்த வீரர்கள் ஓய்வு பெறும் பட்சத்தில், அவர்களது இடத்தை இளம் வீரர்கள் எளிதில் பூர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறேன் - என்றார். (15)

## துடுப்பாட்ட வீரர்கள் மீது டோனி காட்டம்

இங்கிலாந்துக்கு எதிரான 'ரி-20' ஆட்டத்தில் இந்திய அணி சந்தித்த படுதோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் முக்கிய காரணம், என்று அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டத்தில் தோல்வியடைந்தது தொடர்பாக இந்திய அணித்தலைவர் டோனி கூறியதாவது:

இங்கிலாந்துக்கு எதிரான 'ரி-20' ஆட்டத்தில் தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது. இதற்கு துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே முக்கிய காரணம். மத்திய வரிசையில் பெரிய அளவில் சோபிக்காததால், .வலுவான இலக்கை அடைய முடியாமல் போனது. தவிர, தொடக்க வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் வெளியேறியது பின்னடைவாக அமைந்தது.

கூடுதலாகப் பத்து முதல் 15 ஓட்டங்கள் எடுத்திருக்கும் பட்சத்தில், சுலபமாக வெற்றி பெற்றிருக்கலாம். இந்த ஆட்டம், வேகப்பந்துவீச்சாளர்களுக்கு பெரிய அளவில் கைகொடுக்கவில்லை. ஆனால் அஷ்வின், ரவிந்திர ஜடேஜா உள்ளிட்ட சுழற்பந்துவீச்சாளர்கள் அருமையாகச் செயல்பட்டனர். இருப்பினும் கெவின் பீற்றர்சன் திட்டமிட்டு சிறப்பாக விளையாடியதால், இங்கிலாந்து அணிக்கு சுலப வெற்றி கிடைத்தது.

சமீபத்தில் இங்கிலாந்து மண்ணில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டதால், தற்போது சொந்த மண்ணில் சாதிக்க முடிந்தது. இதேபோல இந்த ஆட்டத்தில் செய்த தவறுகளை கண்டுபிடித்து, அதற்கேற்ப கூடுதல் பயிற்சி மேற்கொள்ளும் பட்சத்தில், அடுத்து வரும் ஆட்டங்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி எழுச்சி பெறலாம்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு சச்சின், சேவாக் உள்ளிட்ட மூத்த வீரர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது அணிக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது. ஒரு நாள் மற்றும் 'ரி-20' ஆட்டங்களை விட டெஸ்ட் ஆட்டம் சற்று வித்தியாசமானது. அதிக நேரம் களத்தில் நின்று விளையாடும் பட்சத்தில் ஓட்ட வேட்டை நடத்த முடியும். இதற்கு நிறைய அனுபவம் தேவை. இதேபோல அடுத்து வரவுள்ள ஆஸ்திரேலிய சுற்றுப்பயணம் இளம் வீரர்களுக்கு சவால் நிறைந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இவ்வாறு டோனி கூறினார். (15)

## இன்ப அதிர்ச்சியாய் இருக்கு - சுவான்

இந்தியாவுக்கு எதிராகக் கிடைத்த வெற்றி, இன்ப அதிர்ச்சி அளிக்கின்றது, என்று இங்கிலாந்து அணியின் 'ரி-20' அணித்தலைவர் சுவான் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்த இங்கிலாந்து அணி, ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை முழுமையாக இழந்தது. இந்த நிலையில் கொல்கத்தாவில் நடந்த ஒரே ஒரு சர்வதேச 'ரி-20' ஆட்டத்தில் 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



இது குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் சுவான் கூறியதாவது:

இந்தியாவுக்கு எதிராக 'ரி-20' ஆட்டத்தில் கிடைத்த வெற்றி இன்ப அதிர்ச்சி அளிக்கின்றது. ஏனெனில் ஒரு நாள் தொடரை 0-5 என்று மிக மோசமாக இழந்த நிலையில், இந்த வெற்றி உற்சாகம் அளிக்கிறது. இந்த ஆட்டத்தில் எங்கள் அணியின் வேகப்பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டனர். ஸ்ரீவன் பின், ரிம் பிறஸ்னன் இணைந்து இந்திய அணியின் ஓட்ட வேட்டையைத் தடுத்தனர். இந்த வெற்றியின்மூலம், எங்கள் அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு நல்ல பாடம் கிடைத்திருக்கும். தவிர, அடுத்த ஆண்டு இலங்கையில் நடக்கவுள்ள 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை அதிகரித்திருக்கின்றது - என்றார். (15)


உதயன்
01 நவம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# தமிழ் மக்கள் ஈழத்தை இழந்துவிடக்கூடாது; அதுவே தன் விருப்பம் என்கிறார் நாச்சியப்பன்

''என்னுடைய தமிழ் மக்கள் ஈழத்தை இழந்துவிடாமல் அவர்களின் சொந்த இடத்துக்கு போகவேண்டும். இந்தியாவிலுள்ள இரண்டரை லட்சம் அகதிகள் இலங்கைக்கு மீண்டும் வரவேண்டும். என்னைப்பொறுத்தவரை என் மக்கள் இழந்தவற்றை மீண்டும் பெறவேண்டும். மற்றவை என் பார்வையிலேயே இல்லை. என்னுடைய மக்கள் ஈழபூமியை பெறவேண்டும். அதுதான் என்னுடைய ஆசை."

- இவ்வாறு தெரிவித்தார் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், இந்திய உயர்நீதிமன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியான ஈ.எம்.சுதர்சன நாச்சியப்பன்.

இனி....



**கேள்வி:** இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை நீங்கள் புதுடில்லிக்கு அழைத்து கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தீர்கள். அந்தக் கலந்துரையாடல் உப்புச்சப்பில்லாமல் முடிந்தது ஏன்?

**பதில்:** நான் இவர்களை கூப்பிட்டதன் முக்கியநோக்கம் என்னவெனில், தமிழருடைய பிரச்சினை, ஈழத்தமிழருக்காக இருந்தாலும் சரி, உலகளவில் இருக்கும் தமிழருடைய பிரச்சினைகளாக இருந்தாலும் சரி அதனை இந்தியாவுடைய பிரச்சினையாக எடுத்துச்சொல்ல முடியாத நிலை உள்ளது. பிராந்திய மட்டத்தில் இதனை தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ கையில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதற்கு அப்பால் தேசிய அளவில் இதனை கையாள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதனால், அங்கீகரிக்கப்பட்ட பத்து தமிழ்க் கட்சிகளை அழைத்து பேச தீர்மானித்தேன். முதலில் எதிர்க்கட்சியில் இருக்கும் எட்டுக் கட்சிகளையும் அழைத்து ஓர் இடத்தில் உட்காரவைத்து பேசுவோம் என்று தீர்மானித்தேன். இரண்டு நாட்களுக்கு அவர்களை அழைத்தேன். எனது அழைப்பை ஏற்று அவர்கள் வந்ததை பெருமையாக நினைக்கிறேன். முதலில் அவர்களுக்கு நான் கூறியது என்னவெனில், உங்களுக்கு இருக்கக்கூடிய ஒட்டுமொத்தமான தேவைகள் இந்திய நாடாளுமன்றத்தின் மூலமாகவும், அரசு மூலமாகவும் செல்லவேண்டும் என்பதனை ஒருமித்த கருத்துடன் எடுத்துச்சொல்லுங்கள் என்பதுதான். அந்தக் கருத்தை ஈட்டுவதற்கு நீங்கள் முழுநாளும் உட்கார்ந்து பேசுங்கள். நான் இங்கே இருக்கப்போவதில்லை. பார்வையாளராகக் கூட இருக்கப்போவதில்லை. நீங்கள் அழைத்தால்தான் இங்கே வருவேனே தவிர அதுவரை நீங்களே உட்கார்ந்து பேசுங்கள். பேசிமுடித்ததும் நாளைய தினம் எனக்கு அந்த அறிக்கையை கொடுத்தீர்களானால், நாளை மாலை எல்லா கட்சியையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் கூப்பிடுவேன். வடநாட்டுக்காரர்கள், வடக்கு, கிழக்கு பகுதியைச் சார்ந்தவர்கள், காஷ்மீரைச் சார்ந்தவர்கள் என்று எல்லாப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்கிறேன். அவர்களிடத்தில் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு அடுத்த நாள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இலங்கைப் பிரச்சினை பற்றி பேசும்போது இவற்றை எடுத்துச் சொல்வதற்கு முயற்சிப்போம் என்று நான் தமிழ் எம்.பிக்களிடம் கூறினேன். இதன்படி அவர்கள் உட்கார்ந்து பேசினார்கள். அடுத்த நாள் நான் காலையில் பர்மா பிரச்சினையொன்று சம்பந்தமாக பேசுவதற்கு நாடாளுமன்றத்தின் அரசியலமைப்பு மையத்திற்கு சென்றுகொண்டிருந்தேன். அந்த இடத்திற்கு அருகில்தான் தமிழ் எம்.பிக்களும் பேச்சு நடத்துவதால் இவர்களிடத்திற்கு சென்றுவிட்டு போவோம் என்று அங்கு சென்றேன். நீங்கள் வரவே இல்லையே என்றனர் தமிழ் எம்.பிக்கள். இல்லை, நீங்கள் கூப்பிட்டால்தான் நான் வருவதாக சொல்லியிருந்தேன் என்றேன் நான். முடிவெடுத்துவிட்டீர்களா என்று நான் கேட்டபோது, இல்லை இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று கூறிவிட்டு ஒரு வரியைக் கூறினார்கள்.

தமிழ்த் தேசியம் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென நாங்கள் கூறியிருக்கிறோம் என்றனர். அங்கு நான் சொன்ன விடயம் என்னவெனில், இந்த மாதிரியான பிரச்சினைக்குறிய விடயங்கள் நாம் முதலில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

அங்கு இலட்சக்கணக்கான மக்கள் துன்பப்படுகின்றனர். அவர்களுக்குத் தேவையானவற்றை இந்திய மத்திய, மாநில அரசுகளுடன் அவர்கள் தொடர்பில் என்ன பார்வையுடன் இருக்கவேண்டும் என்பதை மட்டும் எடுத்துச் சொன்னீர்களானால் நன்றாய் இருக்குமே என்று நான் எடுத்துச்சொன்னேன். இவ்வளவுதான் என்னால் சொல்லமுடியும். திரும்பவும் நான் மதியம் வருவேன். அதற்குள் முடிவெடுத்து வையுங்கள் என்று நான் சொல்லிவிட்டு புறப்பட்டேன். மதியத்திற்கு மேல் அவர்கள் ஓரளவிற்கு ஒத்த கருத்துடன் சில விடயங்களை தயார்படுத்தியிருந்தனர். அது இந்திய நாடாளுமன்ற அவைகளின் முக்கிய பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. நானும் அதைப்பற்றி பேசினேன். நாடாளுமன்றிலும் பேசப்பட்டது. அந்த வகையில் எனக்கு மகிழ்ச்சிதான். தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இருந்து ஒரே குரலில் தெரிவித்திருப்பதை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு கவனம் செலுத்தவேண்டுமென நான் வற்புறுத்தியிருக்கிறேன்.

**கேள்வி:** நீங்கள் கூறுவது சரியா, தவறா என்பது குறித்து நான் விவாதத்தில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால், தமிழ்த் தேசியம் என்ற விடயத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தீர்கள். அதனால்தான் இந்தக் கூட்டத்தில் உறுதியான தீர்மானம் எதனையும் எட்ட முடியாமற் போயிற்று. இதுவும் உண்மைதானே?

**பதில்:** என்னைப் பொறுத்தமட்டில் நான் அப்படியில்லை. ஆனால், என்னதான் இருந்தாலும் இலங்கை இன்னுமொரு நாடு. தமிழர்கள் இங்கு பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும் இலங்கை முழுவதும் தமிழர்களுக்கு சொந்தமானது என்ற சிந்தனையுள்ளவன் நான். அதில் சிங்களவர்கள், இஸ்லாமியர்கள் மற்ற மதத்தைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான் எனது பார்வை. இலங்கை என்பது தமிழகத்தின் இதயம் என்று நான் நினைக்கிறேன். அப்படியான ஒரு புத்தகத்தையும் எழுதிக்கொண்டிருக்கிறேன். அது மிக விரைவில் வெளிவரப் போகிறது. எனவே, இதில் எனக்கு மாற்றுக்கருத்து எதுவும் கிடையாது. ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் நான் நினைப்பது என்னவென்றால், 2001 ஆம் ஆண்டில் இப்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாணம் ஒன்றாக இருந்தது பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். ராஜீவ் காந்தியின் முயற்சியின்படி 17ஆவது திருத்தச்சட்டத்தில்தான் வடக்கும், கிழக்கும் ஒன்றாக, தமிழர் வாழும் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டு, இலங்கை அரசியல் சட்டத்தில் இன்றும் குறிப்பிடப்படும் ஒரு விடயமாக இருந்து வருகிறது. நடைமுறையில் வேண்டுமானால் இன்று அது இரண்டாக பிரிந்திருக்கலாமே தவிர, 17 ஆவது அரசியல் சட்டத்தில் ராஜீவ் காந்தி செய்த மிகப்பெரிய நன்மைகளில் இதுவும் ஒன்று.

ராஜீவ் காந்தி மூன்று நன்மைகளை செய்தார். முதலாவது, தமிழ் ஆட்சி மொழியாக அங்கீகரிக்க வைத்தார். இரண்டாவதாக வடக்கும், கிழக்கும் தமிழர்களுடைய பாரம்பரிய பூமி, பிரதேசம் என்று அங்கீகரிக்க வைத்தார். மூன்றாவது, இன்று இலங்கையில் இருக்கக்கூடிய மாகாணங்களுக்கு, இந்தியாவில் மாநிலங்களுக்கு அதிகாரத்தை வழங்கியதுபோல் இங்கும் மாகாணங்களுக்கு அதிகாரம் கிடைக்க ஏற்பாடுசெய்தார். இந்த அதிகாரங்கள் மாகாணங்களுக்கு கிடைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு அரசியல் சட்டத்தை திருத்தவும் வைத்தார். ராஜீவ் காந்தி செய்த அந்த மிகப் பெரிய சாதனை மூன்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படி பயன்படுத்தாமல் நாம் தனிநாடு கேட்டோமானால், ஏன் இதனைக் கேட்கக்கூடிய வைகோவின் கட்சி அல்லது ராமதாஸ் ஐயாவின் கட்சி 2001இல் ஏன் சொல்ல மறுத்தார்கள்? 2001 இல் அவர்கள், தி.மு.க எல்லாம் பி.ஜே.பி. ஆட்சியில் இருந்தார்களே எல்லாரும் இரண்டு மந்திரிமார், மூன்று மந்திரிமார் என்று வைத்திருந்தார்கள். அ.தி.மு.க வெளியிலிருந்து ஆதரவு கொடுத்திருந்தது. பி.ஜே.பி ஆட்சியில் இருந்த இவர்கள் என்ன செய்தார்கள். பி.ஜே.பி. க்கு ஒரு வார்த்தை சொன்னால் போதுமே! ஏன் சொல்லவில்லை. நாங்கள் எல்லோரும் வாபஸ் வாங்கிக்கொள்கிறோம். பங்களாதேஷை எப்படி இந்திராகாந்தி உருவாக்கி தனி நாடாக அறிவித்தார்களோ அப்படி ஈழத்தை தனிநாடாக அறிவிக்கவேண்டுமென சொல்லியிருந்தால் நடந்திருக்குமே. ஏன் செய்யவில்லை நீங்கள்? முழு வலிமையோடு, அன்று வடக்கும், கிழக்கும் ஒன்றாக இருந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பையும் வைத்திருந்தீர்களே? சர்வதேச சட்டத்தில் என்ன இருக்கிறது. ஒரு பகுதியை தனிநாடாக அறிவிக்கவேண்டுமானால் அதற்குள் மக்கள் வாழவேண்டும். அங்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆட்சி இருக்கவேண்டும். எல்லாம் இருந்ததே.

2001 இல் என்ன செய்தீர்கள்? ஏன் எதையும் செய்யவில்லை. இன்றைக்கு ஏன் காங்கிரஸ் மீதோ, மற்ற கட்சிகள் மீதோ குற்றத்தை சொல்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் ஏமாற்றியிருக்கிறீர்கள். 2001 இல் அமெரிக்காவில் தாக்குதல் நடத்தப்பட்டபோது, உலக நாடுகள் அனைத்தும் ஒன்றாகின. ''தீவிரவாதிகளை அழித்துவிடுங்கள். அவர்கள் தேசியத்துக்காக இருப்பவர்களானாலும் பரவாயில்லை. பாரம்பரியத்துக்காக இருப்பவர்களானாலும் பரவாயில்லை. அவற்றை கணக்கிலெடுக்கவேண்டாம். தீவிரவாத முறையில் இருக்கிறார்களா... அழித்து விடு'' என்றனர். ஐ.நா.பாதுகாப்புச் சபையில் 1373 ஆவது தீர்மானத்தை உலக நாடுகள் போட்டன. அதற்குப்பின்னர் தானே உங்களுக்கு வலு குறைய ஆரம்பித்தது. 2009 இல் முழுமையாக இழந்த பின்னர் நாம் இப்போது தேசியத்தை பேசப் போகிறோம் என்று ஆரம்பித்தால், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதாகவே இருக்கும். இன்றைக்கு இருக்கவேண்டியது இலட்சக்கணக்கான தமிழர்களை வேரூன்ற வைப்பதுதான்.

**கேள்வி:** அப்படியானால் சுருக்கமாகச் சொல்லப் போனால் இவர்கள் தமிழ்த் தேசியத்தை தூக்கிப் பிடிக்காமல் அதைவிட ஆக்கபூர்வமாக செயற்படலாம் என்றா சொல்கிறீர்கள்?

**பதில்:** அது அவர்களுடைய விடயம். அவர்களின் விருப்பம். அந்த விருப்பத்தைப் பற்றி நான் கருத்துச் சொல்லவே நான் தயாராக இல்லை.

**கேள்வி:** சரி. வேறு விடயத்திற்கு வருவோம். இலங்கைக்கெதிராக போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென உலக நாடுகளே வலியுறுத்தி வரும் நிலையில் இந்தியா மௌனமாக இருப்பதன் காரணம் என்ன?

**பதில்:** மௌனமாக இல்லை. நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது கூட நான் தமிழில் பேசியபோது என்னுடன் பலர் வந்துபேசினர். அந்த காலகட்டத்தில் தமிழர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டபோது ஏன் எங்களுக்கு உதவவில்லை என்று ஒருவர் கேள்வி கேட்டார்.

எங்களால் முடிந்த உதவிகளை நாங்கள் செய்திருக்கிறோம் என்றுதான் நான் கூறினேன். போரை விரிவுபடுத்தாமல், மக்களுடைய பாதிப்பைக் குறைத்து, மருத்துவ வசதிகளைச் செய்து, உணவுப் பொருள்களை கொடுப்பது, தொழில் செய்வதற்கான துணைக்கருவிகளை கொடுப்பது போன்ற உதவிகளைத்தான் இறையாண்மையுள்ள இன்னொரு ஆட்சியினால் செய்யமுடியும்.

மனித உரிமைகளில் ஐந்து வகை இருக்கின்றது. பொருளாதாரத்தில், சமூகத்தில், தனிப்பட்ட சிவிலுரிமையில், பாரம்பரிய உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் என்பனவே அவை. இந்த எல்லா உரிமைகளிலும் முழுக்க, முழுக்க இந்தியா தமிழ் மக்களுக்கு சாதகமாகவே இருந்திருக்கிறது.

**கேள்வி:-** ஆனால், நான் கேட்ட கேள்விக்கு உங்களிடமிருந்து நேரடியான பதிலை எதிர்பார்க்கிறேன். 'சனல் 4' உட்பட்ட ஊடகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் இலங்கையில் இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் நடந்ததை நிரூபிக்கும் வகையில் ஆதாரங்களுடன் முன்வைக்கின்றன. இந்த இறுதியுத்தத்தில் இந்தியாவின் பின்புலம் இருப்பதனால் தானா இந்தியா இதில் மௌனம் காக்கிறதென தமிழர்கள் கேட்கின்றனர். நீங்கள் இதற்குப் பதில் கூறுங்கள்.

**பதில்:-** இந்தியாவை பொறுத்தவரை அவர்கள் தொடர்பான ஒரு முழு விளக்கத்தை தமிழ் மக்களிடம் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் தவறான செய்தி மிக அழுத்தமாக பதிந்துள்ளது. அதனை என்னால் கண்டறிய, உணர முடிகிறது. ஆனால், 'சனல் 4' அல்லது வேறு எதிலும் போகிற செய்திகள் யாரால் ஏற்பட்டது? யார் இந்த தமிழ் மக்களைக் கொன்றது? யார் சிறுவர்களை இராணுவத்தில் சேர்த்தது பதைபதைக்க சாகடித்தது. என்பவற்றை இந்த லட்சக்கணக்கான தமிழ் மக்களிடம் கேட்டால் தெரியும். இன்றைக்கும் பிள்ளைகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். போராட்டத்திற்காக யாரும் பிடித்துக்கொண்டு போகவில்லையென்று அவர்களே சொன்னார்கள். யாழ்ப்பாணத்தில் என்னிடமே சொன்னார்கள். ஈழத்தமிழருக்கு இதில் உண்மைத் தெரியும். நான் என்ன கூறுகிறேன். எனின், இன்று நாம் பழையவற்றை எடுத்துப்பார்ப்பதைவிட இன்று இருக்கும் சூழ்நிலை என்ன என்பதை பார்க்கவேண்டும். உயிருடன் இருக்கும் மக்களைப் பாதுகாக்கவேண்டும். உயிருடன் இருப்பவர்களுக்கான உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு செயற்பட்டு வருகிறது.

**கேள்வி:-** சரி மனித உரிமை மீறல்கள் எதுவும் கடைசி சண்டையில் நடக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்படியாயின் ஏன் இது தொடர்பான விசாரணைக்குழுவொன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு தயங்கவேண்டும்? உங்களது பார்வை என்ன?

**பதில்:-** எனது பார்வை என்னவெனில், எது முக்கியம் என்று நாம் முதலில் பார்க்க வேண்டும்.

முதலாவது என்னுடைய தமிழ் மக்கள் திரும்பவும் அதே இடத்திற்கு செல்லவேண்டும். விட்டுவந்த செல்வங்களை பெறவேண்டும். காணிபூமிகளை, உரிமைகளை பெறவேண்டும். அதைத்தான் நான் ஆசைப்படுகிறேன். ஐக்கிய நாடுகள் சபை குழுவொன்றை நியமித்தது. புலிகள் மீது ஆறு குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. அரசு மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. விசாரணைகள் இதுபற்றி நடத்தட்டும். அதைப் பற்றி எனக்கு கவலையில்லை. ஆனால், இதனைக் காரணம் காட்டி எமது மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்த நாம் நடவடிக்கை எடுக்காதபட்சத்தில் நாம் நம்மையே துன்புறுத்தலுக்கு ஆளாக்கிக்கொள்வதாக இருக்கும்.

என்னுடைய தமிழ் மக்கள் ஈழத்தை இழந்துவிடாமல் அவர்கள் சொந்த இடத்திற்கு போகவேண்டும். இந்தியாவிலுள்ள இரண்டரை லட்சம் அகதிகள் இங்கு மீண்டும் வரவேண்டும். இப்படியான அகதிகள் வந்தால் மீள்குடியேற்றம் ஒழுங்காக நடைபெறுமாவென யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடமும் கேட்டேன். முடியும் என்றார். இதுதான் எமக்கு முக்கியமாகத் தெரிகிறது. உயிரோடு இருக்கும் மக்களுக்கு முதலில் நியாயம் கிடைக்கவேண்டும். இதற்குப் பிறகு மற்றவர்களைப் பற்றிப் பேசலாம்.

**கேள்வி:-** அப்படியானால் நீதியான விசாரணையொன்றை பின்னர் செய்யலாம் என்கிறீர்களா?

**பதில்:-** அதை அவர்கள் செய்துகொள்ளட்டும். அதைப்பற்றி எனக்கு ஒன்றுமில்லை. இதைப்பற்றி ஆதரவாகவும் சொல்ல விரும்பவில்லை. எதிர்ப்பாகவும் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய மக்கள் பற்றிப் பேசவேண்டும். இதனை இந்திய நாடாளுமன்றத்தில் நான் பேச வைத்திருக்கிறேன்.

**கேள்வி:-** ராஜீவ் காந்தி கொலையாளிகளுக்கு ஏதாவது கருணை காட்டப்பட்டு அவர்க்ளின் தூக்குத் தண்டனை நிறுத்தப்படுமா?

**பதில்:-** என்னைப் பொறுத்வரை அது பற்றி நான் கருத்து கூற விரும்பவில்லை. அது ஒரு மிகக் கொடுமையான கொலை. அதுதான் தமிழனுடைய பாரம்பரியம்.

**கேள்வி:-** அப்படியானால் இந்திராகாந்தி அம்மையார் ஒரு சீக்கியரால் கொலை செய்யப்பட்டார். நீங்கள் சீக்கியரை இப்படி வெறுக்காமல் தமிழர்களை மட்டும் ஏன் வெறுக்கிறீர்கள்?

**பதில்:** சீக்கியர்களை வெறுக்கவே மாட்டோம். தமிழர்களை வெறுக்கவே மாட்டோம். காங்கிரஸ் கட்சி என்றுமே வெறுக்காது. ஆனால், குற்றம் செய்தவர்களை தண்டித்திருக்கிறார்கள் அல்லவா? அது நீதிமன்றத்தினுடைய வேலைதானே!

**கோள்வி:-** இல்லை, இலங்கையில் தமிழர்கள் கவலைப்படுவது என்னவெனில் அப்படி இந்திராகாந்தியை கொன்ற சீக்கிய சமூகத்தின் ஒருவர் இந்தியாவின் பிரதமர் பதவி வகிக்கும் நிலையில் ராஜீவ் கொலைக் குற்

(27ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்கள்....

(26ஆம் பக்கத்தொடர்ச்சி)

றத்திற்காக தமிழர்கள் பலிவாங்கப்படுவது சரியானதா என்பதுதான்?

பதில்:- அதில் குற்றம் செய்தவருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது தெரியும்தானே தமிழர்கள் எப்போதும் புறக்கணிக்கப்படவில்லை. இந்தியாவின் கப்பல்துறை, உள்துறை உட்பட்ட முக்கிய அமைச்சுக்களை தமிழர்கள் தானே வகிக்கின்றனர். கிட்டத்தட்ட 13 இடங்கள் தமிழர்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. தமிழர்களுக்கு எந்த குறைவும் இல்லையே. சீக்கியர் பிரதமர் என்றாலும் தமிழர்களுக்கு குறைவில்லையே.

கேள்வி:- இல்லை, நான் கூறுவது இலங்கைத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது பற்றி?

பதில்: இல்லை, அதையும் இதையும் கலக்காதீர்கள் குற்றவாளியை மட்டும் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். அல்லது ஒரு இனத்தை மட்டும் பற்றி பேசுவதாக இருந்தால் பேசுங்கள். குற்றவாளியை மட்டும் பேசுவதாக இருந்தால் இந்திரா காந்தி கொலையாளியை தூக்கில் போட்டுவிட்டார்கள் என்று கூறுவேன். ஒரு இனத்தைப் பற்றி பேசினால் தனியாக பேசுவோம்.

கேள்வி: நான் தமிழ் மக்களின் உணர்வுகளைத்தான் உங்களிடம் கூறுகிறேன்.

பதில்: குற்றவாளி குற்றவாளிதான். குற்றவாளி எந்த இனம் என்று பார்க்கக்கூடாது.

கேள்வி: இங்கே வடக்கு, கிழக்கில் சிங்கள குடியேற்றங்கள் அதிகரித்து வருவதாக தமிழ்க் கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இதற்கு இந்தியா ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்குமா? அழுத்தம் கொடுக்குமா?

பதில்: ஒன்றை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். எங்களைப் பொறுத்தவரை தமிழ்மக்களுக்குத் திரும்ப அவர்களின் பூமியை பெற்றுக்கொடுப்பது, அவர்களை வாழவைப்பதுதான் எங்கள் இலட்சியம். தவிர அன்றாட அரசியல் பிரச்சினைகளை இங்குள்ள அரசியல் கட்சிகளே பார்க்கவேண்டும். இது இறையாண்மையுள்ள ஆட்சி.

## தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யக் கூட்டமைப்பினர் கனடாவுக்குச் சென்றுள்ள நிலையில், கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம், இலங்கை - இந்திய உறவு மற்றும் அரசு - கூட்டமைப்பு பேச்சு தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

போர்க் காலத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியா பயிற்சிகளை அளித்தது. அதே போன்று, விடுதலைப் புலிகளின் தலைவர் கொல்லப்பட்ட பின்னரும் அதே இந்தியாதான் மௌனம் காத்தது.

போரின் பின்னரான இலங்கைத் தமிழர்களின் விடயங்களில் இந்தியா தலையிடவே இல்லை. விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அரசு பேச்சுகளில் இந்தியா எவ்வகையிலான அழுத்தத்தையும் இதுவரை பிரயோகிக்கவேயில்லை. அத்துடன், இலங்கை மீதான சர்வதேச குற்றச்சாட்டுகள் விடயத்திலும் இந்தியா மௌனியானது. அப்படியிருக்க, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தனக்கு பற்று இருப்பதாக இந்தியா பொய்வேடம் தரிக்கிறது.

இந்த நிலையில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வழங்கவிடாது இலங்கை அரசை இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் உள்ள இந்த இரகசிய ஒப்பந்தத்தால் இறுதியில் இலங்கைத் தமிழர்களே பாதிக்கப்படுவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இனப்பிரச்சினைப் பேச்சு ஆரம்பமாகி இன்றுடன் 10 மாதங்களாகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் கடப்பாடு அரசுக்கு உள்ளபோதிலும், அதனை வழங்கவிடாமல் இந்தியா முட்டுக்கட்டை போடுவதனால் அதிருப்தியும், நம்பிக்கையின்மையும் அடைந்திருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு இந்தியா தவிர்ந்த வெளிநாடுகளது உதவியைக் கேட்டுச் சென்றுள்ளது.

வெளிநாடுகளினால் இதற்கு அர்த்தம் வழங்க முடியாது. தமிழ்க் கூட்டமைப்புக்கும் வேறு வழியில்லை. இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவும் கையை விரித்துவிட்டது. எனவே, தீர்வைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அரசு உட்பட உள்நாட்டு அரசியல் கட்சிகளுடன் கூட்டமைப்பு ஒன்றுசேர்ந்து பேச்சு நடத்த முன்வரவேண்டும் - என்றார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை பரமேஸ்வரி



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும்,ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்தரை பரமேஸ்வரி நேற்று(31.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - கதிராசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், சந்திரசேகரம், புலேந்திரநாதன்(இந்திரன்), மாலினி, கிருபாகரன் (ராசன்), கிருபாரூபன் (இலங்கைவங்கி), ரூபமோகன்(பிரான்ஸ்), ரூபினி, நந்தினி(பிரான்ஸ்), கலாஜினி, பரமேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும். காந்திமதி, மோகனா, மகாலிங்கம், இராசமலர், விஜயராணி, ஜீவரேகா(பிரான்ஸ்), இராசலிங்கம், சுரேந்திரன்(பிரான்ஸ்),விஜித்(பேபி), யாமினி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியும். கஜந்தினி-பத்மநாதன் (நைஜீரியா), கஜீபன், மயூரா, திருமால், (கண்ணன்), மயூறதன், மயூகரன், சுஜிவரன், சுஜிதரன், கமலகரன், றஜீவன், றஜீதா, றஜீனா, கஜரூபன், றிஷாந்(பிரான்ஸ்), ரூபிஷா(பிரான்ஸ்), சுரேன்(பிரான்ஸ்), சுரேனிகா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டிலக்ஷன், சுலக்ஷன், ஷாகிஷன் (நைஜீரியா) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (01.11.2011) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை வடக்கு உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சரஸ்வதி மனோகரி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி மனோகரி (முன்னாள் வீமன்காமம் ம.வி.ஆசிரியை.மாவிட்டபுரம்) நேற்று (31.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இரத்தினம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கைலைநாதனின் மனைவியும், நாகநாதன்(டாக்ரர் ஆஸ்திரேலியா), றாஜி (பாவனையாளர்கள் அதிகாரசபை , கொழும்பு) ஆகியோரின் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பூநாறி கோயில் வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்,
றாஜி(மகள்)

## திருமதி தெய்வேந்திரம் பாமினி

நவாலியைச் சேர்ந்த திருமதி தெய்வேந்திரம் பாமினி (பொம்மி) நேற்று (31.10.2011) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

[illegible] வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
சி. தெய்வேந்திரம்- கணவர்.

## கொய்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த் தலைவர்களின் உருவச்சிலைகள் காட்டுமிராண்டித்தனமாக உடைக்கப்பட்டுவரும் நிலையில் பல்லினச் சமூகமும் வாழும் இலங்கையில் எப்படி நல்லிணக்கம் ஏற்படப்போகின்றது என தமிழ் மக்கள் ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இன நல்லிணக்கம் என்பது உதட்டளவில் மட்டும் இருக்கக்கூடாதென்றும், அதனை செய்கையிலும் காட்ட வேண்டும் என்றும் சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டனர்.

இரு தசாப்தகால போரின் பின்னர் இவ்வாறான அராஜகத்தனமான சம்பவங்கள் அரங்கேற்றப்படுவதானது தமிழர்களின் மனங்களைப் பெரிதும் பாதிக்கும் எனத் தமிழ்ச் சமூக இன உணர்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழ் மக்களுக்காக முழுமூச்சாகச் செயற்பட்ட தந்தை செல்வா போன்ற தலைவர்களின் நினைவுச்சிலைக்கு குந்தகம் ஏற்படுத்துவதானது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் செயல் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## இலங்கைக்கு...

(நேற்றைய 05ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல் செய்ய தம்மைத் தூண்டியதாக ஜெகான்வரன் கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக ஏன் சுமத்துகிறீர்கள் என கேட்கப்பட்ட போது, அவர் பிரதம தளபதியாக இருந்து வருகிறார். அவருடைய வழிகாட்டலின்றி அவருக்கு தெரியாமல் ஒன்றும் நடந்திருக்கமுடியாது என்ன நடந்தது என்பதற்கு அவர்தான் பதில் கூறியாகவேண்டும் என்றார்.

இந்தவித செய்திகளுக்கு பாதுகாப்பு அமைச்சு தனது இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பிரதிபலிப்புகளில் மீனா கிருஷ்ணமூர்த்தி ஜெகன்வரன் அல்லது அருணாசலம் ஜெகதீஸ்வரன் ஆகியவர்கள் புலி அமைப்பு உறுப்பினர்களாய் இருந்தவர்கள் என்றும், தெரிவித்திருப்பதுடன் அதற்கான நிழல் படங்களையும் வெளியிட்டுள்ளது.

## தமிழருக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கு மனித உரிமையும் சுதந்திரமும் கிடைக்க வேண்டும். இது குறித்து கனேடியப் பிரதமரும், வெளிநாட்டு அமைச்சரும் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர் - என்றார் ராதிகா.

## தமிழருக்குத் தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். தமிழ் மக்களுக்கு நிகரான உரிமை பெற்றவர்களாக முஸ்லிம் மக்களும் வாழ வேண்டும் என்பதே எமது நோக்கம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம். எம்மண்ணில் நாம் வாழவும் அதனை ஆளவும் எமக்கு உரிமை உண்டு. ஆனால், அந்த உரிமையை வழங்காது அழித்தொழிக்க இலங்கை அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. எமது உரிமைகளைப் பெறுவதற்குச் சாதகமான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.ஏற்கனவே ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களை நாம் தவற விட்டுள்ளோம். அதனால், நிதானமாகச் சிந்தித்து செயற்பட வேண்டிய தருணம் இது.

சர்வதேசம் நமது பிரச்சினையைத் தீர்த்து வைக்க தயாராக உள்ள போது நமது நாட்டு ஜனாதிபதி அதற்கு விருப்பம் உள்ளவராகத் தெரியவில்லை. அவரது விரும்பத்தகாத நடவடிக்கைகளினால் அவர் பல இடங்களில் சங்கடமாக வேண்டியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட கனேடிய பிரதமரின் புறக்கணிப்புக்கு மகிந்த ராஜபக்ஷ உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இது அவருக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்.

கனேடியப் பிரதமர் ஏற்கனவே பல விண்ணப்பங்களை இலங்கை அரசுக்கும் அதன் ஜனாதிபதிக்கும் விடுத்துள்ளார். ஆனால் அவைகளுக்குத் தகுந்த பதில் வழங்காத மஹிந்த ராஜபக்ஷவின் உரைகளைத் தான் செவிமடுக்கப் போவதில்லை என்ற செய்தியையே கனேடியப் பிரதமர் வெளிப்படுத்தியுள்ளார். எனவே, இலங்கை அரசு உடனடியாக நமது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய ஒரு கடப்பாடு உள்ளது.

எமது போராட்டம் நியாயமானது. மனித உரிமையைக் கடைப்பிடிப்பது இலங்கை அரசுக்கு மாத்திரமல்ல, சர்வதேச சமூகத்துக்குமே உரியதாகும். எமது நாட்டில் மனித உரிமை மீறப்பட்டதா? சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மீறப்பட்டதா என்பது பற்றி நாம் அது சம்பந்தமான ஆவணங்களை அனுப்பி சர்வதேச சமூகத்துக்குமே விளக்கி வருகின்றோம். அரசுடன் பேசி தீர்வு காணுமாறு இந்தியாவும் கூறியது. தற்போது அமெரிக்காவும் அதனையே கூறுகின்றது.

கட்டாயத் தீர்வை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. நாம் நிதானமாகச் செயற்பட வேண்டும். அதற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் உங்கள் அனைவரினதும் ஆதரவு வேண்டும். நீங்கள் மீண்டும் அங்கு வரவேண்டும். சந்தர்ப்பம் ஏற்படும்போது அங்கு முதலீடுகளைச் செய்ய வேண்டும்.

- இப்படி சம்பந்தன் கூறினார்.

மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினார்கள். (உ-சி)

## கிளிநொச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன.சோதனையிட வேண்டும்' எனக் கொச்சைத் தமிழில் கூறினர் என்று பொலிஸ் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. கைகளில் கொட்டன், வாள், கைத்துப்பாக்கியுடன் அவர்கள் காணப்பட்டுள்ளனர்.பின்னர் வீட்டில் உள்ளவர்களை வெளியில் செல்ல வேண்டாம் எனவும் கூச்சலிட வேண்டாம் எனவும் அந்தக் கும்பல் மிரட்டியது. எனினும் வீட்டிலுள்ளவர்கள் கூச்சலிடவே வீட்டிலிருந்த குழந்தையின் கழுத்தில் வாளை வைத்து மிரட்டியுள்ளனர். கூச்சலிட்ட சந்தத்தைக் கேட்ட அயலவர்கள் வந்த போது அந்தக் கும்பலில் உள்ளவர்கள் நாங்கள் இங்கு சோதனையிட வந்துள்ளோம் எதுவித பிரச்சினையும் இல்லையெனக் கூறி அவர்களையும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் வீட்டில் உள்ள இடம் அத்தனையையும் சல்லடை போட்டு 15 பவுண் நகைகளையும் 40 ஆயிரம் பணத்தையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாருக்கும் சொல்லக்கூடாது எனவும் மிரட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமையும் இதே பிரதேசத்தில் இதே பாணியில் கொள்ளை இடம்பெற்றுள்ளது. சித்தி விநாயகர் வீதி உதயநகர் மேற்கில் கே.கணேசன் என்பவரின் வீட்டிலும் ஆயுதங்களைத் தேடுகிறோம் என்று கூறி 13 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

## முன்னாள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது -

முன்னாள் பணிப்பாளர் குருகுலராஜா வெளிநாடொன்றுக்குச் செல்ல வேண்டியிருந்ததாலும் நேற்று வெளியிடவிருந்த அவர் பற்றிய புத்தகத்தின் பதிப்புப் பணிகள் நிறைவு பெறாததாலும் நேற்று இந்த விழாவை நடத்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டது என்றும் இந்த விழா பின்னர் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார். இதனிடையே பல வருடங்கள் கல்விப் பணியில் இருந்து கல்வி வளர்ச்சிக்கு பேருதவியாக அங்குள்ள ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய குருகுலராஜாவுக்கு பாராட்டு விழா நடத்துவதை தடுத்து நிறுத்தியது அதிபர்களையும் ஆசிரியர்களையும் மிகவும் மன வருத்தத்துக்கு உள்ளாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-426)

# மரண அறிவித்தல்

## சின்னப்பா இராசரெத்தினம்
## (சின்னத்துரை - மண்டைதீவு-8)



மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா இராசரெத்தினம் நேற்று (29.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், வேல்விழி, மலர்விழி (பிரதேச செயலகம், வேலணை), பரதன், அருள்விழி (பிரான்ஸ்), பரணிகரன் (பிரதேச செயலகம், பூநகரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகுலராஜன், சுதாகர் (ப.நோ.கூட்டுறவுச் சங்கம், காரைநகர்), சிந்துஜா, மனோரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், தரன்யா, லாவண்ஜா (பிரான்ஸ்), கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகி அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# செய்தித் துளிகள்

**சந்தேகநபர் கைது**

மணல் ஏற்றிச் செல்வதற்கென போலி அனுமதிப்பத்திரங்களை அச்சிட்ட சந்தேகநபர் ஒருவர் மஹியங்கனையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்கள் போலி அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் மணல் ஏற்றிச் சென்றமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

**ஆசிரியருக்குப் பயிற்சி**

வெளிநாட்டு மொழிகளை இலங்கை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி சீனா, ஜப்பான், மற்றும் கொரிய போன்ற வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிலையில், முதல் கட்டமாக சுமார் 100 ஆசிரியர்களைக் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**நீர்மட்டம் உயர்வு**

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள 69 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 42 வீதம் வரை அதிகரித்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்யுமாயின் இந்த நீர்த்தேங்களின் நீர மட்டம்மேலும் அதிகரிக்க கூடுமென நீர்ப்பாசனத் திணைகளம் தெரிவித்துள்ளது.

# பாண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைகளை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எம்.கே.ஜயவர்தன நேற்றுத் தெரிவித்தார்.

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் கடந்த வாரம் அதிகரிக்கப்பட்டன. அத்துடன், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் 'காஸ்' விலைகளும் அதிகரிக்கப்பட்டன.

ஆனால், பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் இச்சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்படவில்லை. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே இவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இந்நிலையில், பாண் உட்பட அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படவேண்டும் என்று பேக்கரி உரிமையாளர்கள் கோருகின்றனர்.

எனவே, பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதனால், அடுத்த வாரமளவில் பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கூடி கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (ஒ-சி)


கணக்கீடு
திரு.ஜனன் H.N.Dip.,in. ACC
பரீட்சை நோக்கில் முக்கியமானது பல்தேர்வுக் கட்டமைப்பு வினாக்கள்
கணக்கீடு I
ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும்.
NEW ECONOMICS COLLEGE
மணிக்கூட்டு வீதி
3-4.30 pm
NEC ஆனைப்பந்தி
4.30-6pm
ஆரம்பம்:-
02.11.2011 நாளை

## தவறிவிட்டது

46/2 புனித அந்தோனியார் வீதி யாழ்ப்பாணம் ஸ்ரனிஸ்லாஸ் ஜோசப் இளங்கீரன் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ.அட்டை இல [733454679V] மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் தொழில் அடையாள அட்டை என்பன கறுப்பு நிறபேர்ஸுடன் பாஷையூர் புனித அந்தோனியார் வீதியூடாக, கண்டுக்குளி குருசோ வீதிக்குமிடையில் நேற்று [31.10.2011] திங்கட்கிழமை தவறிவிட்டது இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.p இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-021 221 9025
0770062596

## S.L.A.S - WORK SHOP (OPEN)

oct 24 இல் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மேற்படி பெறுபேறுகளின் பிரகாரம்S.L.A.S - work shop நேர்முகப் பரீட்சை தமிழ் மொழியில் நவம்பர் 5 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.
S.L.A.S பரீட்சையில் சித்தியடைந்தோரின் பெயர்ப்பட்டியல் எமது விளம்பரப் பலகையில் நேரில்வந்து பார்வையிடலாம்.
மேலதிக விவரங்களுக்கு:- 0718130390, 021 2226693

பூபால சிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

## அறிவாலய கல்வியகம்

சூராவத்தை சுன்னாகம்

தரம் 4 - 2012 இற்கான வகுப்புகள் (தற்போது தரம் 3)
ஆரம்பம்:- 10.11.2011 வியாழன் 9.00 am
ஆசிரியர் இ.தேவகுமார்
நாளை (02.11.2011) புதன்கிழமை பி.ப 4.00 மணி பெற்றோர் கலந்துரையாடல் நடைபெறும். அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி.

## SAAMSON ENGLISH - 3 மாதப் பயிற்சி நெறி

Saamson English என்பது இலங்கையிலேயே முதன் முறையாக மாணவர்களை ஒருவரோடொருவரை உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலத்தைப் பழக்கப்படுத்தும் ஒரு நிறுவனமாகும்.
ஆங்கிலத்தை கற்பிப்பதை விடுத்து ஆசிரியர்- மாணவர்களுடன் தொடர்ச்சியான உரையாடற் பயிற்சியில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆங்கிலத்தை பழக்கப்படுத்தும் ஒரு முறைமையாகும்.
இது நீங்கள் சிறு குழந்தையாக இருந்த போது 2 தொடக்கம் 3 வயதுக்குள் எப்படி உங்கள் பெற்றோருடன் நாளாந்தம் உரையாடி தமிழைப் பழகினீர்களோ, அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.
தமிழ் பேசப்படுகின்ற சூழலில் வசித்து, தமிழைப் பேசப் பழகிய நீங்கள், ஆங்கிலம் பேசப்படுகின்ற சூழலில் (Saamson English) இருந்து ஆங்கிலத்தில் பேசப்பழக விரும்புகிறீர்களா? அப்படியானால் 05.11.2011 இல் ஆரம்பிக்கும் புதிய பயிற்சிப் பட்டறையில் நீங்களும் இணையுங்கள். ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி.
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு-I 09-11 பிரிவு II 11-01 பிரிவு- III 02-04 பிரிவு- IV. 4-6
3 மாதப் பயிற்சிக் கட்டணம் - 3000/-
SAAMSON ENGLISH - 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0776214567

## யாழ். மாவட்டத்தில் சிங்கள மொழிப் போதனையில் ஓர் புதிய புரட்சி

முதன்முறையாக 'லங்காதீப' TNL வானொலியின் சிங்கள ஊடகவியலாளர் திருமதி K.K. றனி அவர்களினால் நடத்தப்படும்
சிங்களக் கற்கை நெறி
TKY SN
(புறஜெக்ரர் மூலம் Audio, Video வசதியுடன் மாணவர்கள், தொழில்புரிவோர் உட்பட அனைவருக்கும் உகந்தது.
உள்ளடக்கங்கள்
*அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பேச்சுச் சிங்களம்
*சிங்கள எழுத்துக்கள் சொற்கள், வசனங்கள்
*இலக்கிய நயமிக்க சிங்களப் பாடல்கள், கவிதைகள், கதைகள்.
ஆரம்பம்: நவம்பர் சனி 05 மு.ப 11 மணி 3 மாதகாலம்.
ஒரு பிரிவில் 25 பேர் மாத்திரமே (பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்)

## திசைகாட்டி

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 4914527, 021 221 9016
(யாழ்.நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தைக் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)



## புதிய பொருளியல் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
பொருளியல்: N.B.கஜீதரன்
புதிய பாடத்திட்டத்துக்கென யாழ். நகரின் தனித்துவமான ஆசிரியர் N.B.கஜீதரனின் வகுப்புகள் புதிய பொருளியல் கல்லூரியில் மட்டுமே நடைபெறும்.
A/L 2012, 2013 இற்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 05.11.2011 சனிக்கிழமை

## CHEMISTRY ▶ S.Vasu
A/L Day Class
Batch I - Wed, Thur - 3.30 - 5.00 p.m.
Sat, Sun - 10.00 - 11.30 a.m.
Batch II - Sat, Sun - 1.00 - 3.00 p.m.
Batch III - Mon, Fri - 7.00 - 8.30 p.m. (Night Class)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## வெற்றிப் பயணம் 8,9,10
மூன்றும் வெறும் 50/- மட்டுமே
★ தரம் 1, 2, 3, 4 வரை சமயம் உட்பட 15 வினாத்தாள்கள்
★ மூன்றாம் தவணைக்குரிய முழுமையான வெளியீடு
ஸ்ரீலங்காவின் No.1 வெளியீடு


# மரண அறிவித்தல்

## செல்வி பிறெய்சி கரோலின் யூட் செல்வகுமார்



யாழ்ப்பாணம், பண்டியதாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பிறெய்சி கரோலின் யூட் செல்வகுமார் (31.10.2011) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் யா/சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் யூட்செல்வகுமார்- திருமதி ஜெறின் தம்பதியரின் பாசமிகு மகளும், நிலோஜன் (ஆண்டு 2011 உயர்தர மாணவன், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஆன் நிரோஷினி (ஆண்டு 2013 உயர்தர மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அன்ரோ செரோன் (தரம் 8 மாணவன், யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (01.11.2011) செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/2, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: யூட் மாஸ்ரர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.